விலை ரூபா 20 பக்கங்கள் 28

**மன்னாரில் பிடிபட்டது ஹான்ஸ்; 2 பேர் கைது**

யாழ்ப்பாணம், மார்ச் 1
இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாகக் கொண்டுவரப்பட்டு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட விருந்த, பல பக். 23

# உதயன்

32°c - 25°c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 கதிர் 96 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 18, செவ்வாய்க்கிழமை 01.03.2016

# பெரும் நெருக்கடிக்குள் யோசித

## கடற்படையிலிருந்து நீக்கம்

கொழும்பு, மார்ச் 1
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யோசித ராஜபக்சவை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சேவையிலிருந்து இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கடற்படை தெரிவித்துள்ளது.
பொலிஸ் நிதி மோசடிப் பிரிவு, பாதுகாப்பு அமைச்சினூடாக முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கடற்படைப் பக். 23



## விளக்கமறியல் உத்தரவை நீக்கக் கோரும் மனு நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 1
யோசித ராஜபக்சவை விளக்க மறியலில் வைக்குமாறு, கடுவெல நீதிவான் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைச் செல்லுபடியற்றதெனக் கட்டளை பிறப்பிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
அத்துடன், யோசிதவின் சட்டத் தரணிகளை பக். 23

முச்சந்தி முரளி



கடவுளின்ர காணியும் மிச்சமில்ல பாருங்கோ...

# மக்கள் தீர்மானத்தையும் மீறி காணி பறிக்கிறது கடற்படை

## சேந்தாங்குளம் பகுதியில் தேவாலயக் காணியை அளவீடு செய்யும் பணி அடுத்த வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 1
வலி.வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பாதுகாப்புத் தேவைக்காக நிலஅளவை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு பொதுமக்களால் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட போதும், அந்தத் தீர்மானங்களையும் மீறித் தொடர்ச்சியாகக் காணிகளை அளவிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
கீரிமலை - சேந்தாங்குளம் பகுதியில் தேவாலயத்துக்குச் சொந்தமான 4 பரப்பு காணியைக் கடற்படையினர் தமது தேவைக்குச் சுவீகரிப்பதற்கு விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, எதிர்வரும் 8 ஆம் திகதி குறித்த காணி அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்.மாவட்டத்தில் 2014 ஆம் ஆண்டு பல்வேறு இடங்களில் பாதுகாப்புத் தரப்பினருக்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இருப்பினும் பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக அவை கைவிடப்பட்டிருந்தன.
கடந்த ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்த பக். 23

> "தேவாலயத்துக்குச் சொந்தமான 4 பரப்பு காணியைக் கடற்படையினர் தமது தேவைக்குச் சுவீகரிப்பதற்கு விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, எதிர்வரும் 8 ஆம் திகதி குறித்த காணி அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன."

## உரத்தின் விலையை குறைத்தார் மைத்திரி

கொழும்பு, மார்ச் 1
விவசாயிகளுக்கு வழங்கப்படும் 50 கிலோ உர மூடை ஒன்றுக்கான விலையை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 2 ஆயிரத்து 500 ரூபாவாக மட்டுப்படுத்த ஜனாதிபதி பக். 23

## உ. கிழங்கு, வெங்காயம் இறக்குமதி வரி அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 1
நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால பக். 23

## இந்திய மீனவர் அத்துமீறலை தடுக்கக் கோரிப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 1
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கோரி நேற்று வட மாகாண மீனவர் அமைப்புக்கள் யாழ்ப்பாணத்தில் பேரணி நடத்தினர். பேரணியின் முடிவில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகத்தின் துணைத் தூதுவர் ஆ.நடராஜனிடம் அவர்கள் தமது கோரிக்கை அடங்கிய மனுவையும் கையளித்தனர்.
மனுவைப் பெற்றுக் கொண்ட துணைத் தூதுவர் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபடக் கூடாது என்பதே தமது எண்ணம் என்று குறிப்பிட்டார்.
(விரிவான செய்தி 9 ஆம் பக்கத்தில்)

## ஆள்கடத்தலுக்குப் பயன்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் மீட்பு

### வெலிசறைக் கடற்படை முகாமிலிருந்து

கொழும்பு, மார்ச் 1
கடந்த காலங்களில் இளைஞர்களைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட டிபெண்டர் ரக வாகனங்களின் உதிரிப்பாகங்கள், வெலிசறைக் கடற்படைத் தளத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன.
நீதிமன்றத்தின் அனுமதியுடன் கடந்த பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வெலிசறைக் கடற்படைத் தளத்தில் சோதனை நடத்தியிருந்தனர்.
இந்தச் சோதனை நடவடிக்கையின்போது, திருகோணமலையில் கொலை செய்யப்பட்ட 11 இளைஞர்களைக் கொழும்பிலிருந்து கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட, இரண்டு டிபெண்டர் வாகனங்களின் பாகங்களும், மற்றொரு இளைஞரைக் கடத்திச் பக். 25

## தமிழர் அமைப்பொன்றுக்கு எதிராகவே போராடினோம்

### தமிழ் மக்களுக்கு எதிராக அல்ல என்கிறார் மேஜர் ஜெனரல் ரத்நாயக்க

வவுனியா, மார்ச் 1
இராணுவம் தனக்கு வழங்கிய பணியையே நிறைவேற்றியது. தமிழ் மக்கள் இராணுவத்துக்கு எதிராகக் கோபமோ - வைராக்கியமோ கொள்ளக்கூடாது. இராணுவம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படவில்லை. தமிழ் மக்களின் ஓர் அமைப்புக்கு எதிராகவே போரிட்டது.
இவ்வாறு தெரிவித்துள்ளார் புனர் பக். 25

## கோமகன் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 1
தமிழ் அரசியல் கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த, யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் முருகையா கோமகன், பக். 25

## 17 வயது சிறுவன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 1
வலிகாமம் பகுதியில் வீட்டில் தனியாக இருந்த 4 வயதுச் சிறுமியைக் கூட்டிச் சென்று அருகில் இருந்த பக். 25

# இலங்கை குறித்து ஹுசேன் மௌனம்

ஜெனிவா, மார்ச் 1
இலங்கைக்கான தனது பயணம், இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வின் நேற்றைய ஆரம்ப உரையில் வாயே திறக்காமல் மௌனம் காத்துள்ளார்.



ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 31 ஆவது அமர்வு ஜெனிவாவில் நேற்று ஆரம்பமானது. இந்த அமர்வில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் தொடக்கவுரை நிகழ்த்தியிருந்தார். பக். 25

**மீண்டு...(ம்) வருமா? 'பிரபாகரன் யுகம்'** பக். 12-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கு முன்னரான கடன்களை இரத்துச் செய்யும் தீர்மானமில்லை

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 1

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் போருக்கு முன்னர் வழங்கப்பட்ட கடன்கள் யாவும் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட போதும் அது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றபோதே குறித்த விடயம் ஆராயப்பட்டது. வீடமைப்பு அதிகார சபையின் கடன் மாத்திரமல்ல, வங்கிகளால் வழங்கப்பட்ட விவசாயக் கடன் உள்ளிட்ட ஏனைய கடன்களும் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட கடனில் கட்டப்பட்ட வீடுகள், போரின் போது சேதமடைந்துள்ளன. அதில் மீளக் குடியமர முடியாத நிலை உள்ளது. இந்தநிலையில், குறித்த கடன்களைச் செலுத்துமாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் கேட்கின்றனர். போருக்கு முன்னர் வழங்கிய கடன்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முஸ்லிம் அமைப்புக்களின் சார்பில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இது குறித்துத் தெரிவிக்கையில்,

வீடமைப்பு அதிகார சபையின் கடன்கள் மாத்திரமல்ல ஏனைய கடன்களையும் இரத்துச் செய்ய வேண்டும். வங்கிகளால் வழங்கப்பட்ட விவசாயக் கடன்கள் மற்றும் ஏனைய கடன்களும் இரத்துச் செய்யப்பட வேண்டும்.

போரின் முன்னர் இந்தக் கடன்கள் வழங்கப்பட்டிருந்தாலும், அதனைப் பெற்றவர்கள் தமது வாழ்வாதார நடவடிக் கைகளை முன்னெடுக்க முடியவில்லை. இவ்வாறான நிலையில் அவர்களால் எப்படிக் கடன் களைச் செலுத்த முடியும். எனவே, போரின் முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் அனைத்தையும் இரத்துச் செய்யும் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று கோரினார்.

இது தொடர்பில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர், கடன்களை இரத்துச் செய்வதற்கான அதிகாரம் எம்மிடம் இல்லை. இது தொடர்பில் கொழும்பில் தலைமையகத்துடன் பேசி முடிவெடுங்கள் என்று குறிப்பிட்டார்.

இறுதியில் இது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படாமல் அடுத்த விடயம் ஆராயப்பட்டது. (ஐ-ஐ-5-ரி5)

# கணவரைப் பிடித்த இராணுவத்தினர் என்னையும் சித்திரவதைப்படுத்தினர்

## ஆணைக்குழு முன்பாக மனைவி சாட்சியம்

சாவகச்சேரி,மார்ச்.1

ஊரடங்கு வேளையில் வீட்டுக்கு அருகில் உள்ள கடைக்கு பொருள்கள் வாங்கச் சென்ற கணவரைப் பிடித்த படையினர் தேடிச் சென்ற என்னையும் பல்வேறு சித்திரவதைக்கு உள்ளாக்கினர். படையினரின் அச்சுறுத்தல்களுக்குப் பயந்து பல இடங்களில் மாறி மாறி இருக்க வேண்டிய அவல நிலை எனக்கும் பிள்ளைக்கும் ஏற்பட்டது. எனது கணவரை மீட்டுத் தாருங்கள்.– இவ்வாறு ஆணைக்குழு முன்பாக கதறி அழுது முறையிட்டார் இளம் குடும்பப் பெண்.

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் மிருசுவிலைச் சேர்ந்த 24 வயது இளம் குடும்பப் பெண் சாட்சியமளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளதாவது–

கடந்த 2006 ஆகஸ்ட் 13 ஆம் திகதி மிருசுவில் உசன் பகுதியில் வசித்த எங்களுக்கு மூன்று மாதக் கைக்குழந்தை இருந்தது. எனது கணவர் மினிவான் சாரதியாகப் பணிபுரிந்து வந்தார்.

வேலை முடிந்து வந்த கணவரை வீட்டில் சில பொருள்கள் இல்லாததால் சைக்கிளில் சென்றால் பத்து நிமிடங்களில் செல்லக் கூடிய கடையில் வாங்கி வருமாறு அனுப்பியிருந்தேன். ஊரடங்கு நேரம் ஆரம்பித்துள்ளதால் விரைவில் வருமாறு அனுப்பியிருந்தேன். சிறிது நேரத்தில் வந்த அயலவர்கள் எனது கணவரைப் படையினர் பிடித்து வைத்துள்ளனர் என்று கூறியதால் மூன்று மாதக் கைக்குழந்தையுடன் உசன் முகாமுக்குச் சென்றேன்.

அங்கிருந்து கணவரைக் கைகளைக் கட்டிய நிலையில் படையினர் அழைத்துச் செல்வதைக் கண்டு அங்குள்ளவர்களிடம் கணவரை விடுமாறு குழந்தையுடன் கெஞ்சினேன். அதற்கு அவர்கள் தற்போது ஊரடங்கு நேரம் ஆரம்பித்துவிட்டது உடனடியாக இங்கிருந்து சென்றுவிடு இல்லையேல் சுட்டு விடுவோம் எனவும், நாளை காலை கச்சாயில் உள்ள முகாமுக்கு வந்து கணவரைப் பார் எனக் கூறிவிட்டு அழைத்துச் சென்றதைக் கண்டேன்.

மறுநாள் கச்சாய் முகாமுக்குச் சென்று விசாரித்த போது தாங்கள் பிடிக்கவில்லை எனக் கூறினர்.

மறுநாள் எனது வீட்டுக்கு வந்த பெருமளவு படையினர் வீட்டைச் சோதனையிட வேண்டுமெனக்கூறி என்னை வீட்டுக்குள் வருமாறு கூறினர். நான் அச்சம் காரணமாக வீட்டுக்குள் செல்லாததால் வீட்டைச் சோதனையிட்ட பின்னர் எனது தேசிய அடையாள அட்டையை வாங்கிக் கொண்டு சென்றுவிட்டனர். முகாமுக்குச் சென்றால் அங்கு விசாரணை என்ற போர்வையில் பிளேட்டால் வெட்டியும், அயன் பொக்ஸால் சுட்டும் சித்திரவதை செய்வார்கள் என அறிந்ததால் நான் போகாமல் பக்கத்து வீட்டில் தஞ்சமடைந்திருந்தேன்.

இரு தினங்களின் பின்னர் தேடி வந்த படையினர் எனது வீட்டில் ஆள்கள் இல்லாததால் பக்கத்து வீட்டுக்காரரை அச்சுறுத்தி என்னை வெளியே விடுமாறு கத்தினர். அந்த வீட்டில் உள்ளவர்களும் அச்சம் காரணமாக என்னை வெளியே வருமாறு கூறிய போதும் என்னை படையினர் அழைத்துச் செல்ல விடவில்லை.

அதனால் வேறு வீட்டில் தஞ்சமடைந்தேன். தொடர்ந்து படையினர் கச்சாய் முகாமுக்கு வருமாறு நான் இருக்கும் வீடுகளுக்கு வந்து அச்சுறுத்திய வண்ணமிருந்தனர்.

உறவினர்களின் வேண்டுகோளின் பிரகாரம் கச்சாய் படை முகாமுக்குச் சென்ற வேளையில் தனி அறையில் 25க்கு மேற்பட்ட படையினர் துருவித் துருவிக் கேள்விகள் கேட்டனர். நான் கேள்விகளுக்குப் பதில் சொன்னேன். திடீரென விளக்குகளை அணைத்துவிட்டு விட்டு அங்கே வந்த ஒரு படை அதிகாரி உண்மையைச் சொல்லிவிடு இல்லையேல் சுட்டுவிடுவோம் என அச்சுறுத்தினார். நான் துணிந்து பதில் கூறினேன். அவ்வேளையில் பிள்ளை அழுததால் என்னை வெளியே விட்டுவிட்டனர்.

மறுநாள் யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிட்டேன். படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட எனது கணவரை மீட்பது தொடர்பாக பல இடங்களில் முறையிட்டும், இது வரை எனது கணவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. எங்கு வைத்திருக்கிறார்கள் என்பது கூட எனக்குத் தெரியாது. காணாமற்போன எனது கணவரை மீட்டுத் தாருங்கள்– என கதறி அழுதவாறு சாட்சியமளித்தார். (ஐ-ஐ-9)

### செஞ்சிலுவைச் சங்க செயலாளர் நாளை வருகிறார்

சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் எல்ஹாட்ஜ் அஸ் சை, யாழ்ப்பாணத்துக்கு நாளை புதன்கிழமை வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றுநாள் அதிகாரபூர்வ பயணமாக இலங்கைக்கு இன்று வரவுள்ள எல்ஹாட்ஜ், வடக்கு மாகாணத்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது அவர் வடக்கில் செஞ்சிலுவைச் சங்கத்தால் மேற்கொள்ளப்படும் போருக்குப் பிந்திய மீளமைப்புத் திட்டங்களைப் பார்வையிடவுள்ளார்.

அத்துடன் இந்திய அரசின் நிதி உதவியில், செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களையும் அவர் பார்வையிடவுள்ளார். 21 ஆயிரம் வீடுகள் செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையில் வடக்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொண்டு, இந்த உதவியைப் பெற்றுள்ள குடும்பங்களையும், திட்டப் பணியுடன் தொடர்புடைய பணியாளர்களையும் சந்திக்கவுள்ளார். (ஐ-ஐ-5)

# வெள்ளைத்தாளில் பென்சிலால் எழுதி பேனையால் கையெழுத்து வாங்கினர்

## ஆணைக்குழு முன்பாகத் தந்தை ஒருவர் சாட்சியம்

யாழ்ப்பாணம், மார்ச் 1

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் விசாரணைகளுக்கென இரு தடவை ஆணைக் குழுவின் சார்பில் வீட்டுக்கு வந்தனர். அவ்வாறு வந்தவர்கள் எம்மிடம் விசாரணை செய்து வெள்ளைத் தாளில் பென்சிலால் எழுதினர். அதன் நிறைவில் எம்மிடம் பேனையால் ஒப்பம் பெற்றனர். அதன் பிற்பாடு அவர்கள் சென்று மகன் இல்லை என்று கடிதம் அனுப்பியுள்ளனர். இது தொடர்பிலும் ஏதோ மோசடி செய்யப் போகின்றனர் – இவ்வாறு தாளையடியைச் சேர்ந்த செல்வராசா நேற்று சாவகச்சேரியில் இடம் பெற்ற ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கும் போது தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இறுதிப் போர் காரணமாக இடம் பெயர்ந்து பொக்கணையில் வசித்த வேளையில் 2009-09-19 அன்று பொக்கணைக்கு இராணுவம் வந்தது. அதன்போது அங்கிருந்த எம்மைப் பிடித்து செட்டிகுளம் அனுப்பி வைத்தனர்.

இதன்போது நாம் வரும் வழியில் ஓமந்தைச் சோதனைச் சாவடியிலும், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் எனது இரு பிள்ளைகளையும் நான் கண்டேன். ஆனால் தற்போது எனது பிள்ளைகள் தொடர்பில் எதுவும் தெரியாது என இராணுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

அது மட்டுமன்றி மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இது தொடர்பான விசாரணைகளுக்கு என இரு தடவை ஆணைக்குழுவின் சார்பில் வீட்டுக்கு வந்தனர். அவ்வாறு வந்தவர்கள் எம்மிடம் விசாரணை செய்து வெள்ளைத் தாளில் பென்சிலால் எழுதினர். அதன் நிறைவில் எம்மிடம் பேனையால் ஒப்பம் பெற்றனர்.

அதன் பிற்பாடு அவர்கள் சென்று மகன் இல்லை என்று கடிதம் அனுப்பியுள்ளனர். அவர்கள் பென்சிலால் எழுதிப் போட்டு எம்மிடம் பேனாவால் ஒப்பம் பெறுகின்ற போதே எமக்கு சந்தேகம் வலுத்தது. இது தொடர்பிலும் ஏதோ மோசடி செய்யப் போகின்றனர் என நினைத்தேன்.

அதன் பின்பு இன்றுவரை எந்தத் தகவலும் இல்லை. எனவே இராணுவக் கட்டுப் பாட்டுக்குள் எனது கண்களால் கண்ட எனது பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள். – என்றார். (ஐ-ஐ-101)

# வடமராட்சி கிழக்கு மக்களுக்கு மழைநீர் சேமிக்கும் தொட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

வடமராட்சி கிழக்கில் மழைநீர் சேமித்து வைக்கும் தொட்டிகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

முதற்கட்டமாக 50 மழைநீர் சேமிப்பு தொட்டிகள் அமைக்கப்பட்டு செம்பியன்பற்று, குடத்தனை, போக்கறுப்பு போன்ற பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அவற்றை விடவும் 42 மழைநீர் சேமிப்பு தொட்டிகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்படவும் உள்ளன.

முதலில் தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கு இந்த மழைநீர் சேமிப்புத் தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன என்று வடமராட்சிப் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மழைநீர் சேமிப்புத் தொட்டிகளைக் பெற்றுக் கொண்ட மக்களுக்கு மழைநீரை எவ்வாறு சேமிப்பது, அதன் பயன்பாடு தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மழை காலங்களில் இந்தத் தொட்டி மூலம் சேமிக்கப்படும் மழை நீரைக் கோடை காலத்தில் பயன்படுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இவ்வாறான மழைநீர் சேமிப்பு தொட்டிகளின் பயன்பாட்டை முழுமையாக விஸ்தரிக்கவும் பிரதேச செயலகம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்ட இந்த மழைநீர் சேமிப்பு தொட்டிகள் ஒவ்வொன்றும் எண்ணாயிரம் லீற்றர் கொள்ளவைக் கொண்டவை என்றும் பிரதேச செயலக அதிகாரி தெரிவித்தார். (ஐ-ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடிக்காத நிலையில் கைக்குண்டு மீட்பு

சாவகச்சேரி,மார்ச் 1

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையில் வெடிக்காத கைக்குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அந்தப் பகுதியில் உள்ள காணி துப்புரவு செய்த போது அங்கே வெடிக்காத நிலையில் கைக்குண்டு காணப்பட்டதையடுத்து சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் அங்கு பாதுகாப்பை ஏற்படுத்தி விட்டு நீதிவானின் முன்னிலையில் விசேட அதிரடிப் படையின் குண்டுகள் செயலிழக்கச் செய்யும் பிரிவினர் மூலம் அப்புறப்படுத்த உத்தரவிடுமாறு அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

நீதிவானின் பணிப்பின் பேரில் விசேட அதிரடிப் படையினரால் கைக்குண்டு மீட்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது. (ஐ-ஐ-9)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் அதிரடி நீக்கம்

கொழும்பு, மார்ச் 1
சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் மகிந்த ஆதரவு அணியைச் சேர்ந்த அமைப்பாளர்களை அதிரடியாக நீக்கியுள்ள, கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத் திரிபால சிறிசேன, புதிதாக 26 மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்களை நியமித்துள்ளார்.

மகிந்த ஆதரவாளர்களில் முக்கியமானவர்களான பிரசன்ன ரணதுங்க, துமிந்த சில்வா போன்றவர்கள் அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பதிலாக மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொலன்னாவ தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து துமிந்த சில்வா நீக்கப்பட்டு, அந்தப் பதவிக்கு பிரசன்ன சோலங்காராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். மினுவாங்கொட தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து பிரசன்ன ரணதுங்க நீக்கப்பட்டு அவரது சகோதரரான ருவான் ரண துங்க அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹேவாஹெட்ட தொகுதி அமைப்பாளராக அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க அறிவிக்கப்பட்டுள்ளார். மகரகம தொகுதி பிரதம அமைப்பாளர் பதவியில் இருந்து காந்தி கொடிக்கார நீக்கப்பட்டு, மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரியவிடம் அந்தப் பதவி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்சவின் மற்றொரு ஆதரவாளரான தன சிறி அமரதுங்க, தெகிவளை தொகுதி அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் அந்தப் பதவிக்கு கீர்த்தி உடவத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்ட 26 சுதந்திரக் கட்சி மாவட்ட, தொகுதி அமைப்பாளர்களுக்கும், கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை நியமனக் கடிதங்களை வழங்கினார். (ற-ஐ-5)

# இளைஞன் கைது

யாழ்ப்பாணம், மார்ச். 1
வீட்டில் தனிமையில் விளையாடிக்கொண்டிருந்த 5 வயதுச் சிறுமியை வீதியால் சென்ற இளைஞர் ஒருவர் கட்டிப்பிடித்தார் என்ற குற்றச்சாட்டில் அவரைக் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணம் சிறுவர் பெண்கள் பொலிஸ் பிரிவு தெரிவித்தது.

இந்தச் சம்பவம் யாழ்.பொலிஸ் பிரிவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. வீட்டில் உள்ளவர்கள் மாலைநேரம் தேநீர் அருந்தி தொலைக்காட்சி நாடகத்தில் மூழ்கியிருந்த நேரம் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அவதானித்த வீட்டுக்காரர் ஓடி வந்து சிறுமியை மீட்டதுடன், குறித்த இளஞனை கையும்மெய்யுமாகப் பிடித்து நையப் புடைத்த பின்னர், பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். யாழ். பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4-107)

## வீடு விற்பனைக்குண்டு

வதிரி சந்தியிலிருந்து திக்கம் றோட் ஆறுமுகம் பேக்கரிக்கு அருகில் சுற்று மதிலுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடும் கடையும் கொண்ட 3 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (68218)(15,17)

தொடர்புகளுக்கு: 077 2694 078

## பதவி வெற்றிடங்கள்

உலகளாவிய ரீதியில் 21 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது International pvt கம்பனிக்கு வட மாகாணத்தில், முல்லைத் தீவு மாவட்டத்தில் பணிபுரிய நபர்கள் தேவை.

- தகைமை O/L & A/L
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு
- அனுபவம் அவசியமற்றது
- வயதெல்லை 18 - 30
- EPF, ETF, Medical & Insurance செய்து தரப்படும்.

(69719)(15,17,20)

தொடர்புக்கு: 077 5566 226, 077 1363 797

## கூறுவிலை கோரல்

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான கீழக்குறிப்பிடப்படும் பொருள்கள், சேவைகளுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

01. அச்சிடல்
02. பரீட்சை வினாத்தாள் அச்சிடல்
03. வெற்றிக்கேடயங்கள், பதக்கங்கள்
04. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
05. உணவு, சிற்றுண்டி வகைகள்
06. அலுவலர் தங்குவதற்கான வதிவிட வசதி

கூறுவிலை கோரல் படிவங்களைக் கைதடி வீதி, மருதனார்மடம், சுன்னாகத்தில் அமைந்துள்ள மாகாணக் கல்வித் திணைக்களத்தின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் (01.03.2016 - 14.03.2016) வரை பெற்றுக்கொள்ளலாம்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாணக் கல்வித் திணைக்களம்,
வடமாகாணம்.

(c/29569)(15,17,20)

(ஜ-ஐ-ழ)

## வேலையாள்கள் தேவை

மீசாலை புத்தூர் சந்தியில் இயங்கி வரும் நிமல் வெல்டிங் கடைக்கு வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை.
(தங்குமிட வசதிகள் கொடுக்கப்படும்) (60754)(15,17,20)

தொடர்புகளுக்கு: 077 3456 552, 077 2792 811

## தேவை

கட்டட நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வருகின்ற எமது நிறுவனத்திற்கு உப ஒப்பந்தக்காரர்கள் (Sub Contractors) (மேசன், கூலி) உடன் தேவை.

T.P: 077 3614 638, 077 8038 567

## வேலையாள் தேவை

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக கடைக்கு வேலையாள் தேவை.

நேரில் வரவும்.

கணபதி மோட்டோர்ஸ்
225 A, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## விற்பனைக்குண்டு

1 சோடி கதவு, 3 வெளி யன்னல் கிறில் கதவுடன் - 04, 2000 ஓடு, 6 அடி தகரம் - 50, 10 அடி நீள சிலாகை - 50 போன்றவை உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 6590 606 (60753)(15,17,20)

சி.தேவராசா பந்தல் சேவை — நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

## SUPER BALL சுப்பர் போல்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 468
சீட்டிழுப்பு திகதி 2016.02.29

வெற்றி இலக்கங்கள்: 24 42 59 72 D

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்: ரூ. 45,230,300/=

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1241
சீட்டிழுப்பு திகதி 2016.02.29

வெற்றி இலக்கங்கள்: 07 34 42 59 U

அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்: ரூ. 11,044,060/=

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2745 திகதி 29.02.2016

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 41 51 63 66 P
போனஸ் இல. 18
புதன்கிழமை ஜக்பொட்: ரூ. 14,699,100/-

2016.03.02 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது ஜூதா நிற டிக்கட்டுக்களாகும்.

## எழுத்தாளர்களுக்கு!

தங்களது அறிவுத்திறனாலும், கற்பனா சக்தியினாலும் உருவான
**கவிதைகள், சிறுகதைகள், பாடல்கள், கீர்த்தனைகள், கட்டுரைகள்**
ஆதியவற்றைத் தொகுத்து மலர் வடிவாக
அச்சுப்பதித்து வெளியிட



தங்கள் ஆக்கங்களால் உருவாகும் **மலர்கள்**
ஒவ்வொன்றும் காலத்திற்கும் நிலைத்திருந்து,
ஒவ்வொரு சந்ததியினரும் பயன்பெறக்கூடிய
ஒரு அரிய பொக்கிஷமாகும். **இதனை**

- உயர்ந்த தரத்தில்...
- குறைந்த செலவில்...
- விசேட விலைக்கழிவில்...

அச்சுப்பதித்திட...

**ஓர் அரிய சந்தர்ப்பம்**
**01-03-2016** தொடக்கம் **01-04-2017** வரை




எழுத்தாளர்களே!
முகவர்கள் எவரும் இன்றி
நேரடியாக எம்மிடம் வாருங்கள்
இல்லை!

**உங்கள் கனவு நனவாகும்.**

தங்களது மலரிற்குரிய சர்வதேச நியம நூல் இலக்கம் இலவசமாகப் பெற்றுத்தரப்படும்

**கரிகணன்**
வடக்கின் அச்சகதாரர்

இல.681, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
+94 21 222 2717/ 8
+94 21 222 2737

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**WALK -IN – INTERVIEW**

**Visiting Lecturer in Education - Faculty of Graduate Studies**

Walk in interview for the post of **Visiting Lecturer in Education** for the Master of Education Programme at Jaffna and Vavuniya Regional Centre conducted by the Faculty of Graduate Studies will be held on **10.03.2016** at **10.00 a.m** at the Board Room of this University

**Qualifications:**

a. A First or Second Class Honours degree in the relevant filed

or

General/Special Degree with Postgraduate Diploma in Education/Master of Education

**and**

b. Master of Philosophy (M.Phil.) / Doctor of Philosophy (Ph.D.) degree in Education

**and**

c. Not less than **five** years experience in one or more of the followings:

i. Teaching at University Level
ii. Professional Experience in teaching for Post-graduate Studies

**and**

d. Publications in the relevant field

Payments: **Rs.2,500/-** per hour for lecture

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates, NIC and **self prepared application along with CV**

(சி/29562)
(11,17,20)

Registrar
2016.02.29

# யுவதியின் வாயைப் பொத்தி கழுத்திலிருந்த சங்கிலி அறுப்பு

## ஆறுகால்மடம் பகுதியில் சம்பவம்.

யாழ்ப்பாணம், மார்ச் 1

தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய யுவதி ஒருவரின் வாயைப் பொத்தி சங்கிலி அறுத்த சம்பவம் கடந்த சனிக்கிழமை ஆறுகால் மடம், பொன்னையா வீதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீதியில் தனிமையில் வந்துகொண்டிருந்த யுவதியைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், சனநடமாட்டம் குறைந்த நேரம் பார்த்து அவரின் வாயை பொத்தித் தாக்கியதுடன் அவர் அணிந்திருந்த இரண்டரைப் பவுண் தங்கச்சங்கிலியை அறுத்தெடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிளின் பதிவுகள் அருகில் உள்ள வீடு ஒன்றில் பொருத்தியிருந்த சி.சி.ரி. கமராவில் பதிவாகியுள்ளன.

இது தொடர்பில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அனுசரணையுடன் கொள்ளைச் சந்தேக நபர்களைக் கைது செய்ய குற்றத்தடுப்புப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பில் குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஸ்ரீகஜன் தெரிவிக்கையில்,

பாடசாலை,தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்கள் தங்க ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்து கொள்ளுமாறும், கல்வி நிலையங்களுக்குச் சென்றுவிட்டு வரும் போது தனியாக வருவதைத் தவிர்த்துக் கொள்வதுடன், முடிந்தளவு சக மாணவர்களுடன் ஒன்றாக வருவதைப் பழக்கப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் பிரசித்தமான வீதிகளைப் பாவிப்பதன் ஊடாக வீதியில் இடம்பெறும் சங்கிலி அறுப்பு, கொள்ளைச் சம்பவங்களை குறைத்து கொள்ளமுடியும். வீதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் யாரும் நடமாடினால் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119 மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கமான 021 222 2222 உடன் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என எஸ்.ஸ்ரீகஜன் தெரிவித்தார். (த-வ-107)

# பொலிஸாரின் உடந்தையுடன் கிளிநொச்சியில் மண் அகழ்வு

## நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, மார்ச் 1

பொலிஸாரின் உடந்தையுடனேயே கிளிநொச்சி மாவட்டத்தில் மண் அகழ்வு இடம்பெறுகின்றது. பொதுமக்கள் இது தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இந்த விடயத்தில் பொலிஸார் சரியான நடவடிக்கை எடுக் கத் தவறினால், பொலிஸாரின் நிர்வாகம் தவறானது என்றே கருதவேண்டி வரும். - இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இணைத் தலைவர்களுள் ஒருவருமான சி.சிறிதரன் தெரி வித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திருவையாறு வின்சன் வீதியில் அமைந்துள்ள 3 ஆம்குறுக்குத்தெரு 4 ஆம் குறுக்குத் தெரு வழியாகச் செல்கின்ற கோரமோட்டை மற்றும் பன்னங்கண்டிப் பகுதிகளில் தினமும் 50க்கு மேற்பட்ட டிப்பர் ரக வாகனங்கள், உழவு இயந்திரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி மண் கொள்ளை இடம்பெற்று வருகின்றது.

கிராமிய அமைப்புக்கள், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் முறையிட்டபோதிலும் அவர்கள் அமைதியாக இருக்கின்றனர். இத்தகைய மண் கொள்ளைகளில் பொலிஸாரின் ஆதரவு கொள்ளையர்களுக்கு இருக்கின்றது.

தினமும் மண் கொள்ளை இடம்பெறும் பகுதிக்கு வருகின்ற பொலிஸார் உரத்த குரலில் 'அத ஒக்கம உசாவ' இன்றைக்கு எல்லோரையும் நீதிமன்றம் கொண்டு செல்வோம் என்று மக்களுக்கு கேட்கக் கூடியவாறு கூறுகின்றனர்.

பின்னர் பூவரசம் வேலிகளுக்குப் பின்னாலும், பனங்கூடல்களுக்குள்ளும் மண்கொள்ளையர்களைக்கூட்டிச்சென்று கதைத்துவிட்டு நாளைக்கு அள்ள வேண்டாம் எனக் கூறிவிட்டுச் செல்வார்கள் என்று பொதுமக்கள் குற்றம் சுமத்தினர். இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன்-

மண் கடத்தல், மரம் கடத்தல் போன்ற விடயங்களைப் பல தடவைகள் கிளிநொச்சி பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியபோதும் அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

பன்னங்கண்டியில் மண் கொள்ளை இடம்பெறும்போது நானே பொலிஸாரை மறித்துக் குறித்த விடயத்தைத் தெரியப்படுத்தினேன். இதற்குப் பொலிஸார் தாங்கள் போக்குவரத்துப் பிரிவு எனவும் , தங்களுக்கு இது பற்றி எதுவும் தெரியாது எனவும் பதிலளித்திருந்த னர். இது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக் குக் கடிதம் அனுப்பியிருந்தேன். இது வரையும் எந்தப் பதிலும் இல்லை. சுடுகாட்டிலும் மண்டை ஓடுகளைத் தூக்கி வெளியில் வைத்து விட்டு எலும்புகளுடன் மண்ணைக் கொண்டுசென்று வீடுகளுக்குக் கொடுக்கின்றனர். இந்த விடயத்தில் பொலிஸார் கவனம் செலுத்தத் தவறினால் பொலிஸாருடைய நிர்வாகம் பிழை என்றே கருதவேண்டி வரும் என்று தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட கிளிநொச்சி பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரியைப் பதிலளிக்குமாறு தெரிவித்த போது, மண் கொள்ளை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டுதான் உள்ளன என்றார். இதனைத் தொடர்ந்து மண் அகழ்வது தொடர்பாக அதனுடன் தொடர்புடைய திணைக்களங்கள் அதிகாரிகளுடனான சந்திப்பு ஒன்றை நடத்தி, பெற்று, அதன் பின்னர் மண் அகழ்வுக்கு யார் அதிகாரம் கொடுப்பது என்ற முடிவை எடுக்க வேண்டும் என்றும், அந்தக் கலந்துரையாடல் மாவட்ட அரச அதிபர், இணைத் தலைவர்களால் விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் வடக்கு மாகாண முதலமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

(ற-ஜ-5-21-ரி3-426)

**கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்**

கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலை பெறுகைக் குழுவினர் தகுதியான/ தகைமைவாய்ந்த சிற்றுண்டிசாலை நடத்துநர்களிடமிருந்து 01.04.2016 தொடக்கம் 31.03.2017 வரையான காலப்பகுதிக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைகோருகின்றோம்.

1. நாட்டமுள்ளவிலைக்கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலையில் கிடைக்கும் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படும் கட்டணமாகரூபா 20,000.00த்தினையும் மீளளிக்கப்படாதகட்டணமாகரூபா 1,000.00 த்தினையும் சேர்த்துமொத்தமாக 21,000.00 ரூபாவினை காசாக அலுவலககாசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 01.03.2016 தொடக்கம் 15.03.2016 வரையானகாலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 03.00 மணிவரையான நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

2. விலைக்கேள்விகள் 20.03.2016ம் திகதிபி.ப02.30 மணிக்குமுன்பதாக இம். மாவட்ட வைத்தியசாலையின் கணக்குகிளையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்பிக்கப்படவேண்டும். சமர்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகதிறக்கப்படும்.

3. தகுதிவாய்ந்தநாட்டமுள்ளவிலைக்கேள்விதாரர்கள் மேலதிகவிவரங்களினையும் ,நடைமுறைகள் தொடர்பான படிவத்தினையும், விலைக்கேள்விபத்திரங்களையும் அலுவலக நேரங்களில் வைத்தியசாலைக் கணக்குகிளையில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

4. இது தொடர்பானபெறுகை முன்னறிவிப்பு கூட்டம் 08.03.2016 ஆம் திகதிகாலை 11.00 மணிக்கு வைத்தியசாலைகேட்போர் கூடத்தில் நடைபெறும்.

5. கிடைக்கப்பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக் கொள்வதற்கு இப் பெறுகையைஎந்தவொருநிலையிலும் விலைக்கேள்வியாளருக்கானபொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக ரத்து செய்வதற்கு வைத்தியசாலை பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது

தலைவர்/ பணிப்பாளர்/ பெறுகைக்குழு
மாவட்ட பொதுவைத்தியசாலை,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறையை கட்டுப்படுத்த சட்டத் திருத்தம் தேவை

## பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கான மனுவில் மன்னார் மாதர் அபிருவித்தி ஒன்றியம் சுட்டிக்காட்டு



மன்னார், மார்ச் 1

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தற்போது அதிகரித்து வருகின்ற நிலையில், குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர் என்று தெரிவித்துள்ளது மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் வன்முறைச் சம்பவங்கள்மற்றும்படுகொலைகளைத்தடுத்துநிறுத்துமாறு கோரி நேற்று திங்கட்கிழமை மன்னாரில் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது. அதன் முடிவில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு மனு ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது. குறித்த மனுவிலேயே இவ்வாறு குறிப் பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: –

அண்மைக் காலமாக நாட்டின் பல பகுதிகளிலும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளும் கொலைச் சம்பவங்களும் அதிகரித்துள்ளதை பெண்கள் அமைப்புக்களாகிய நாங்கள் மிகுந்த அசௌகரியத்துடன் அவதானித்து வருகின்றோம்.

சமூகத்தில் குறிப்பாகப் பெண்களை மற்றும் சிறுமிகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுகின்ற இந்தப் பாலியல் வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் படுகொலைகள் காரணமாகப் பெண்கள், சிறுமிகள் சுதந்திரமாக நடமாட முடியாதுள்ளதுடன், சிறுமிகள் பாடசாலை செல்ல முடியாத அபாயகரமான சூழலும்தோன்றியுள்ளது. அதேநேரம் வீட்டிலே தனித்திருக்கவோ அல்லது இரவு வேளைகளில் உறங்கவோ முடியாத துர்ப்பாக்கிய நிலையை இன்று எமது நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு பெண்களும்அனுபவிக்கின்றனர். எமது நாட்டு மக்கள் அதிலும் குறிப்பாக வடக்கு- கிழக்கு மக்கள் கடந்த 30 வருடங்களாக வன்முறைக்கு உட்பட்ட கலாசாரத்துக்குள்ளேயே வாழ்ந்து வந்தனர்.

தற்போது போரில்லாத காலத்திலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்தும் கட்டவிழ்க்கப்பட்டுள்ளன. அத்துடன் பெண்களுக்கெதிரான குற்றங்களை அரசும் அதன் கட்டமைப்புக்களும் உதாசீனம் செய்வதையும் காண முடிகின்றது.

பெண்கள் மீண்டும் பாதுகாப்பின்றி வாழ்வதற்குப் பலவந்தப்படுத்தப்பட்டுள்ளனர். எல்லா சமூகத்தினரும் குறிப்பாக தமது பெண் பிள்ளைகளது பாதுகாப்புக் குறித்து அச்சத்துடனும், கலவரமான மன நிலையுடனும் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எமது நாட்டில் வாழ்கின்ற பெண்கள் தமது குடும்பத்தின் பொருளாதாரத் தேவைக்காகத் தாமும் ஒரு தொழிலைத் தேடிச் செய்ய வேண்டிய அத்தியாவசியத் தேவையில் உள்ளனர். குறிப்பாக வடக்கு- கிழக்குப் பகுதிகளில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் பெண்கள், தமது பெண் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக தொழில் செய்யச் செல்வதற்குக்கூடஅச்சப்படவேண்டியுள்ளது. இது இவர்களது வாழ்க்கையைப் பசி பட்டினியுடன் வாழ்வதற்குத் தள்ளுவதுடன், அதனூடாக பெண்களது பாதுகாப்பு மற்றும் கௌரவமும் கேள்விக்குட்படுத்தப்படுகின்றது. இது இவர்களின் சுய கௌரவத்துடனான வாழ்தலுக்கான உரிமையைப் பறிக்கும் செயலாகும்.

வன்முறைக்கு முகங்கொடுத்த பெண்களுக்கு நீதிகிடைப்பது என்பது இலங்கையில் அரிதான ஒன்றாகவே இருந்து வருகின்றது. பாலியல் வல்லுறவு வழக்குகளில் மிகவும் வெளிச்சத்துக்கு வருகின்ற சில வழக்குகளைத் தவிர ஏனைய வன்முறைச் சம்பவங்களில் வன் செயலை நிகழ்த்தியோர் அரிதாகவே சிறையில் அடைக் கப்படுகின்றனர்.

பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பாகக் காணப்படும் சட்டத்தின் பிடியில் இருந்து பாதுகாப்புப் பெறும் கலாசாரமானது பாதிக்கப்பட்ட பெண்கள் பற்றிய கரிசனையைக் குறைப்பதாகவே காணப்படுகின்றது.

ஆகவே, இவ்வாறான பெண்களுக்கு எதிரான பாலியல் வல்லுறவு மற்றும் கொலைச் சம்பவங் களானது நாட்டின் அபிவிருத்திக்கும், மனித கௌரவத்துக்கும்இழுக்கானவிடயங்களாகும். தற்காலத்தில் அரசால் முன்னெடுக்கப்படும் நிலை மாற்றுக்கான நீதி சம்பந்தமான திட்டங்களில் பின்வரும் வழி மொழிதல்களை உள்வாங்குவது அத்தியாவசியமானதென நீதிக்காகப் போராடுகின்ற வடக்கைச் சேர்ந்த பெண்களாகிய நாங்கள் கருதுகின்றோம். இந்த நாட் டில் உள்ள பெண்கள் சிறுமிகளுக் கெதிரான பாலியல் வன்முறை சம்பந்தமான வழக்குகளின் சட்ட மானது மீள் திருத்தத்துக்கு உட் படுத்தப்படல் வேண்டும். அதாவது திருத்தப்படும் சட்டத்தில் பாலியல் குற்றம் சுமத் தப்பட்டவர்களுக்குப் பிணை வழங்க முடியாத குற்றமாக் குதல் வேண்டும்.

பெண்கள் சிறுமிகளுக்கெதிரான பாலியல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளில் குற்றமானது ஒருவருட காலத்தில் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படுதல் வேண்டும்.

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதுடன், அந்த நீதிமன்றங்களில் பாதிக்கப்பட்டோர்களது பாதுகாப்பு உறுதிப்படுத் தப்படுவதோடு, அவர்களது சுய தனித்துவம் பாதிக்கப்படாத வகையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பெண்கள் உரிமை மீறல்களை ஆய்வு செய்வதற்கான சுயமான ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டு அந்தக் குழுவானது பெண் களுக்கெதிராக நடை பெறும் சகல வன்முறைகளைத் தடுப்பதற்கான திட்டங்களை துரித கதியில் நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற-ஜ-56)

**வேலையாள்கள் தேவை**

வேம்படி ரெக்ஸ்ரைல் விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

021 568 3611/ 077 965 4005/ 077 990 1002

**யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம் காங்கேசன்துறை**

பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம் - 2016

இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: 12.03.2016 சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 3 மணி

பழைய மாணவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து பாடசாலையின் அபிவிருத்திப் பணிகளில் பங்கெடுக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

த.தயானந்தன் தலைவர் (69717)(11.17.18.20) ந.வேல்ராஜா செயலாளர்.

**பணியாளர் தேவை**

பிரபல்யமான உல்லாசப் பயணிகள் விடுதிக்கான பணியாளர்கள் தேவை.

* காவலாளி
* வாகன (Car) சாரதி
* Room boy

இராமநாதன் வீதி. யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 601 6310, 077 729 0220

Note: இன்றும் (01.03.2016), நாளையும் (02.03.2016) நேரில் சந்திக்கவும்.

**பதவி வெற்றிடம்**

கட்டட நிர்மாணத்துறையிலும், பொறியியல் ஆலோசனைகளை வழங்குவதிலும் ஈடுபட்டிருக்கும் எமது நிறுவனத்தோடு இணைந்து செயற்படு வதற்குப் பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் 7 நாள்களுக்குள் சுயவிவரக் கோவையினை தபால் அல்லது மின்னஞ்சல் மூலமாக விண்ணப்பிக்கவும்.

1. கணிய அளவையாளர் (NCT (QS)- 3 Years Experience or Equivalent)
2. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (NCT(CIVIL ) - 3years Experience or Equivalent)
3. வாகன ஓட்டுநர் (A Class Driver)
4. களஞ்சியப் பொறுப்பாளர் (A/L Qualified)

Sarukaya Construction (Pvt)Ltd.
No.207, Navalar Road, Jaffna.
Email - sarukaya10@gmail.com

**வேலைவாய்ப்பு**

வடமாகாணத்தில் கட்டட வேலைகள் செய்யும் நிறுவனத்துக்குப் பின்வரும் நிரந்தரமான வேலையாள்கள் தேவை. கிழமை, மாத அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

1. தச்சுவேலை செய்பவர் 2. மேசன் 3. வர்ணம் பூசுபவர்
4. வெல்டிங் வேலை செய்பவர்கள் 5. அலுமினிய பொருத்துனர்
6. மின் இணைப்பாளர் 7. உதவியாள்கள்

ஆர்வம் உள்ளவர்கள் இன்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாக சமூகம் தரவும்.

இல.09.நந்தாவில் லேன் (KKS வீதி.ஐயப்பன் கோயிலுக்கு அருகில்) . தாவடி. 021 221 3663

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், தட்டாதெரு சந்திக்கு அருகில் நல்ல வீடு விற்பனைக்கு.

விலை : 90லட்சம்

தொடர்பு : 077 905 0274

**தேவை 077 794 2312**

சண்டிலிப்பாய் அலுவலகத்தில் பணி புரிவதற்கு A/L படித்த பெண்பிள்ளைகள் தேவை.

தொடர்பு கொள்ளும் நேரம் காலை 8.30 - மாலை 4.30 வரை

**வெட்டப்பட்ட விறகு மரங்கள் ஏல விற்பனை செய்தல் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் வெட்டப்பட்ட விறகு மரங்கள் இன்று (2016.03.01) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விற்கப்படவுள்ளது. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்துடன் சமுகம் தருவதுடன் ஏலத்தில் கிடைக்கும் மரங்களுக்குரிய கொடுப்பனவை உடன் செலுத்தி மாலை 5 மணிக்கு முன்னர் வைத்திய சாலையைவிட்டு வெளியே கொண்டு செல்ல வேண்டும்.

பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ் பிரதேச செயலகத்தில்
01.01.1992 ஆம் ஆண்டு தொடக்கம்
16.03.1997 ஆம் ஆண்டு வரை பிரதேச
செயலராக கடமையாற்றிய
கலாநிதி திரு. கந்தையா குணராசா
இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரதேச செயலரும், பிரதேச செயலக
உத்தியோகத்தர்களும், நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச
செயலகத்தில் சமூகசேவை உத்தியோகத்தராக
கடமை புரியும்
திருமதி விஜயகுமாரி முகுந்தன்
அவர்களின் அன்புமாமியார்
திருமதி சகுந்தலாதேவி சோமசுந்தரம்
அவர்கள் காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரதேச செயலரும் அனைத்து
உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், கோப்பாய்.

பிறப்பு
06.02.1948

இறப்பு
24.02.2016

## கண்ணீர் அஞ்சலி



எமது நீண்டகால ஆதரவாளரும்
அபிமானியுமான
கலாநிதி கந்தையா குணராசா
(செங்கை ஆழியான்)
அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி
அறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர்.
குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின்
மடியில்
23
.
10
.
1945



ஆண்டவனின்
பாதங்களில்
24
.
02
.
2011

அமரர் கமலாதேவி மகாலிங்கம்
(ஓய்வு பெற்ற தாதிய உத்தியோகத்தர்)
திதி : அமரபக்க ஸப்தமி (01.03.2016)
ஆண்டுகள் ஐந்து ஆனதம்மா ஆறவில்லை எம் மனசு
உங்கள் ஆத்மா சாந்தியடைய அல்லாரையில் அமர்ந்திருக்கும்
அறுகம்புலத்து விநாயகனின் பாதம் பணிகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.
(60752)
(14,18,20)
கணவர்,
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

என்றும் நமது நினைவுகளில் வாழும்



அமரர் திருமதி
ஜெயலட்சுமி
சட்டநாதன்
தோற்றம்
23.12.1940
மறைவு
13.03.2015
துணைவர்:
திரு.க.சட்டநாதன்
மற்றும்
உற்றார்,உறவினர்கள்.
21,சட்டநாதர் வீதி
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(69698) (14,18,20)

# இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்குமாறு போராட்டம்

## சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக

கொழும்பு, மார்ச் 1
இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட நான்கு கோரிக் கைகளை முன்வைத்து, சென்னையிலுள்ள இலங் கைத் தூதரகத்தை தமிழக மீனவர்கள் முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர். இதன் போது 500 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
வடக்கு மீனவர்கள், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் முன்பாக தமிழக மீனவர்களின் அத்துமீறலை எதிர்த்து நேற்றுப் போராட்டம் நடத்திய அதேவேளையிலேயே, தமிழக மீனவர்களும் போராட்டம் நடத்தியுள்ளனர்.
தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுவதைக் கண்டித்தும், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும், சிறைப் பிடித்து வைத்துள்ள விசைப்படகுகளை விடுவிக்க வேண்டும், நிம்மதியாக மீன்பிடிக்க உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுமே இந்த முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட்டது.
நாகை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், ராமநாதபுரம், காரைக்கால், சிவகங்கை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மீனவர்களே இந்த முற்றுகைப் போராட்டத்தை நடத்தினர்.
போராட்டத்தை முன்னிட்டு தூதரகம் முன்பு இரும்புத் தடுப்புக் கம்பிகள் போடப்பட்டு இருந்தன. நூற்றுக் கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டு இருந்தனர்.

> மீனவர்கள் தடுப்பு கம்பிகளைத்தள்ளிக் கொண்டு தூதரகத்தை முற்றுகையிடச் செல்ல முயன்றனர். இதனால் மீனவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. சிறிது நேரம் அங்கு பதட்டமும் பரபரப்பும் காணப்பட்டன.

மீனவர்கள் தடுப்புக் கம்பிகளைத் தள்ளிக் கொண்டு தூதரகத்தை முற்றுகையிடச்செல்வதற்கு முயன்றனர். இதனால் மீனவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. சிறிது நேரம் அங்கு பதற்றமும் பரபரப்பும் காணப்பட்டன.
போராட்டத்தில் திடீரென ஒருபெண்உடலில் மண் எண்ணெய் ஊற்றித் தீ வைத்துக் கொள்ள முயன்றார். அவரை உடனே பொலிஸார் தடுத்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்ட 500 இற்கும் மேற்பட்ட மீனவர்களை பொலிஸார் கைது செய்து அருகில் உள்ள சமுதாய கூடத்துக்கு அழைத்து சென்றனர். (ற-5)

# பிளேட்டினால் கழுத்தை வெட்டி காயமேற்படுத்தினார் சந்தேகநபர்

## நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து

கிளிநொச்சி, மார்ச் 1
வழக்குக்காக நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட சந்தேக நபர், நீதிமன்ற வளாகத்தில் வைத்து தன்னைத் தானே பிளேட்டினால் கழுத்தை வெட்டிக் காயப்படுத்தியுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
கிளிநொச்சி பொன்நகரைச் சேர்ந்த சத்தியசீலன் சாம்ஜன் (வயது-18) என்ற சந்தேக நபரே, கழுத்தை வெட்டிக் காயப்படுத்திய நிலையில் சிகிச்சைக்காகக் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இரவு நேரத்தில் கடை ஒன்றை உடைத்து 97 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் களவெடுத்த குற்றச்சாட்டில், சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.
இந்த நிலையில் சந்தேகநபரை வழக்குக்காகப் பொலிஸார் நேற்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தினர். இதன்போது குறித்த நபர், தான் வைத்திருந்த பிளேட்டினால், தனது கழுத்தையும் கையையும் வெட்டிக் காயப்படுத்திக் கொண்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
இவ்வாறு காயப்படுத்திய நபரை பொலிஸார் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.
(து-வ-5-ரி3-101)

# பாடசாலை மைதானத்தில் 70 பாம்பு முட்டைகள்

கொழும்பு, மார்ச் 1
இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய ஹெலஉடகந்த மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்துக்குள் உள்ள புற்றிலிருந்து 70 பாம்பு முட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
நேற்றுக் காலை பாடசாலை மாணவர்கள் விளையாடுவதற்காக மைதானத்தில் ஒன்றுகூடிய வேளையில் மைதானத்தில் இருந்து பாம்புக் குட்டிகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.
இதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பாகப் பாடசாலை அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் அறிவிக்கப்பட்டதையடுத்து பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து குறித்த இடத்தில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.
இதன்போது மைதானத்திலிருந்த புற்று ஒன்றிலிருந்து 70 முட்டைகளையும், 6 பாம்புக் குட்டிகளையும் கண்டுபிடித்துள்ளனர்.
இதேவேளை கண்டுபிடிக்கப்பட்ட முட்டைகளும், பாம்பு குட்டிகளும் வனவிலங்குகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன என்று பாடசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ஐ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழியில் அதிரடிப் படைக்கு காணி வழங்கப்பட்டது எவ்வாறு?

## ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு முதலமைச்சர் விக்னேஸ்வரன் பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.1

நாவற்குழியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியை விசேட அதிரடிப் படையினருக்கு வழங்கியமை தொடர்பிலும், அதற்கான உத்தரவு வழங்கப்பட்டமை தொடர்பான தொடர்பாடல் கடிதங்களையும் தன்னிடம் சமர்ப்பிக்குமாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையினருக்கு, வடக்கு மாகாண முதலமைச்சரும், இணைத்தலைவருமான க.வி.விக்னேஸ்வரன் பணிப்புரை விடுத்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதன்போது, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், நாவற்குழியில் தேசிய வீடமைப்புஅதிகாரசபையினருக்குச் சொந்தமான 5 ஏக்கர் காணி, விசேட அதிரடிப் படையினருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறு இடம்பெற்றது? எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர், 1971 ஆம் ஆண்டு தனியார் ஒருவரிடமிருந்து 90 ஏக்கர் காணி தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வீடமைப்புத் திட்டத்துக்காக சுவீகரிக்கப்பட்டது. அதில் 297 வீடுகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டன. போரால் அவை அழிவடைந்த நிலையில் அதே நிலைமையில் மக்களிடம் மீளவும் வழங்கப்பட்டன.

> 5 ஏக்கர் காணியை பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்குமாறு, ஜனாதிபதி மைத்திரிபாலவின் தீர்மானம் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கமையவே கொடுக்கப்பட்டது என்று ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர்.

இதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு எமது காணியில் சட்ட விரோதமாக மக்கள் குடியேறினர். அவர்களுக்கு இதுவரை எந்தவொரு ஆவணமும் வழங்கப்படவில்லை. அதில் 5 ஏக்கர் காணியை பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்குமாறு, ஜனாதிபதி மைத்திரிபாலவின் தீர்மானம் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கமையவே கொடுக்கப்பட்டது. விசேட அதிரடிப் படையினருக்கு கொடுக்கப்படவில்லை. நாம் பொலிஸ் திணைக்களத்துக்கே கொடுத்தோம் என்று குறிப்பிட்டார்.

இதன் போது மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், நாங்கள் எல்லோரும் புள்ளடி போட்டுத்தெரிவு செய்து விட்ட நல்லாட்சிஜனாதிபதிதான் காணியைக் கொடுக்கச்சொல்லியிருக்கின்றார். மாகாண முதலமைச்சர் தான் காணி அமைச்சர். அவருக்குத் தெரியாமல் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

அதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், குறித்த காணி தேசிய வீடமைப்பு அதிகார சபையால் சுவீகரிக்கப்பட்டது. அது அரச காணியாக இருந்தாலும், தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமானது. எனவே அதனை அவர்கள் வழங்கியது தொடர்பில் மாகாண சபை கேள்விக்கு உட்படுத்த முடியாது. தேசிய வீடமைப்பு அதிகார சபை மத்திக்கு உரியது. அவர்கள் தங்களது காணியை வேறொரு திணைக்களத்துக்கு வழங்கியிருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சரும் இணைத் தலைவர்களுள் ஒருவருமாகிய க.வி.விக்னேஸ்வரன், இந்தக் காணியை கையளிக்குமாறு வழங்கப்பட்ட அறிவுறுத்தல் உள்ளிட்ட கடிதத் தொடர்பாடலைத் தமக்குச் சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார். (ρ-ஐ-5-ரி5)

## ஹோட்டல் பயிற்சியும் வேலைவாய்ப்பும்

யாழ்.கண்டி வீதியிலுள்ள சர்வோதய அமைப்பின் யாழ்.மாவட்டக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் சுற்றுலா ஹோட்டல்கள் (ஹோட்டல் மனேச்மன்ற்) பயிற்சி நெறியும் வேலை வாய்ப்பும் வழங்கப்படவுள்ளன.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தோர் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான பதிவுகளை மேற் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை மோட்டார் சைக்கிள் மெக்கானிக் பயிற்சியும், வேலை வாய்ப்பும் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ρ-ஐ-135)

## கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 3,537 குடும்பங்களுக்கு வீடில்லை

வடமராட்சி, மார்ச் 1

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 537 குடும்பங்களுக்கு வீடுகள் இல்லை என பிரதேச செயலர் சி.சிவஸ்ரீ தெரிவித்துள்ளார். அத்துடன் ஆயிரத்து 363 குடும்பங்களுக்கு மலசலகூடங்களும், ஆயிரத்து 491 குடும்பங்களுக்கு மின்சார வசதியும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது– இந்தப் பிரிவில் தேவையான வீடுகளைவிட 597 குடும்பங்களின் வீடுகள் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளன. அத்துடன் பிரேமதாச அமைச்சராக இருந்த போது 1970 காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு அவரால் திறந்து வைக்கப்பட்ட 85 வீடுகளும் பழுதடைந்துள்ளன. அந்த வீடுகள் அனைத்தும் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

மலசல கூடம் தேவையான ஆயிரத்து 363 குடும்பங்களில் பெரும்பாலானோர் துன்னாலை, கரவெட்டிகிழக்கு, கரவெட்டி மேற்கு, அல்வாய் கிழக்கு ஆகிய கிராமங்களில் வாழுகின்றனர். மலசல கூடங்கள் அமைக்கும்போது குறிப்பிட்ட கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

மின்சாரவசதியின்றிக் காணப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை ஆயிரத்து 491 ஆக இருக்கின்ற போதிலும், ஆயிரத்து 172 குடும்பங்களே மின்சாரவசதி பெறத் தகுதி பெற்றுள்ளனர். எஞ்சிய 319 குடும்பங்களும் மின்சார வசதி பெறத் தகுதியற்றவர்கள்.– என்றார். (ρ-ஐ-173)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற 120 மாணவர்கள் நேற்று முன்தினம் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில், கழகத் தலைவர் லயன் பு.தினேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் கிறிஸ்ரி நாணயக்காரவும், லயன்சீமாட்டி சிரான்ஸியும் கலந்து கொண்டனர். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொண்டார். நிகழ்வில் லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவு லயன்ஸ் கழகங்களின் உறுப்பினர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (ρ-ஐ-9)

## வாழைப்பழ விலை குடாநாட்டில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 1

யாழ்.குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் வாழைச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கதலிப்பழம் கிலோ 20 ரூபா வரை வீழ்ச்சியடைந்ததை அடுத்து வாழைப்பழம் சந்தைகளில் விற்பனை இன்றித் தேங்கிக் காணப்படுகின்றன.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளுக்கு தினமும் கூடுதலான வாழைக் குலைகள் வந்து சேர்கின்றன. அதே சமயம் நீர்வேலி, வாழைக் குலை விற்பனைச் சந்தைக்கும் தினமும்பெரும்எண்ணிக்கையில் வாழைக்குலைகள் வந்து சேர்கின்றன.

அதனால் தென்பகுதியில் இருந்து வரும் வியாபாரிகள் குறைந்த விலையில் தினமும் பெரும் எண்ணிக்கையில் வாழைக்குலைகளைஎடுத்துச்செல்கின்றனர்என்று தெரிவிக்கப்படுகிறது. (ρ-ஐ-17)

## மழை நீரை சேகரிப்பது தொடர்பில் முன்னுபாயக் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 1

மழை நீரை குடாநாட்டு மக்கள் சேகரித்து, அதனைப் பயனுள்ள வகையில் குடிதண்ணீருக்குப் பயன்படுத்துவது தொடர்பான முன்னுபாயக் கருத்தமர்வு யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் அண்மையில் நடைபெற்றது.

வேள்ட்விசன் நிறுவன நிதிப் பங்களிப்புடன் ரிவோஸ் திட்டத்தின் கீழ் அதன் செயற்பாட்டு முகாமையாளர் ஆர். ஜெயல்ட் அன்ரனி தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன் போது சாவகச்சேரி பிரதேச சபை, வலி. மேற்கு பிரதேச சபை ஆகிய இரண்டையும் மையப்படுத்தியதாக மழை நீர் சேகரிப்பு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஆரம்பக் கட்டமாக மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் மக்கள் பங்கேற்புடன் நவீன தொழில்நுட்ப உத்திகளுடன் பரீட்சார்த்தமாக முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

லங்கா மழை நீர் சேகரிப்பு திட்டத்தின் பணிப்பாளர் தேனுயா ஆரிய நந்தா, மழை நீர் சேகரிப்பு தொட்டிகளைப் பயன்படுத்துவதன் ஊடாக மழை நீரைச் சேமித்து குடி தண்ணீர் பற்றாக்குறையுள்ள இடங்களில் பல் நோக்கு நன்மைகளை அடையலாம் என்பது தொடர்பான கருத்துக்களை வழங்கினார். (ρ-ஐ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளை - கரந்தாய் மக்களுக்கு மாற்றுக் காணி தேவையில்லை

## சொந்தக் காணியையே வழங்குமாறு இணைத் தலைமைகள் கூட்டாகத் தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச் 1

தெங்குப் பயிர்செய்கைச் சபையினர் முதலீடு செய்திருந்தாலும், பளை - கரந்தாய் மக்களுக்கு அவர்களுடைய சொந்தக் காணிகளே வழங்கப்பட வேண்டும். மாற்றுக் காணிகள் அவர்களுக்குத் தேவையில்லை. - இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்கள் கூட்டாகத் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அதிலேயே இணைத்தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தமது காணிகளில் மக்கள் அத்துமீறிக் குடியமர்ந்துள்ளனர் என்று தெரிவித்து, பளை - கரந்தாய் கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு எதிராக தெங்குப் பயிர்செய்கைச் சபையால் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதையடுத்து குறித்த காணியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்களின் குடிசைகளும் பிடுங்கப்பட்டன.

அவர்கள் காணிகளில் மீண்டும் குடியமர முற்பட்டபோது தமது காணிக்குள் அத்துமீறி நுழைந்தனர் என்று தெரிவித்து தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையினர் தாக்கல் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, மக்கள் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி எம். ஜ.வகாப்தீன் மக்களை விடுதலை செய்ததுடன் அடுத்த தவணையின் போது காணிக் குரிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாறு தீர்ப்பளித்தார்.

இந்த நிலையில் கடந்த மாதம் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் கரந்தாய் மக்களுடைய பிரச்சினைகள் மாகாணசபை உறுப்பினர் அரியரட்ணத்தால் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த காணியானது எவருக்குச் சொந்தமானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் செயலாளரும் அழைக்கப்பட்டிருந்தார்.

குறித்த காணிகள் மக்களுக்கு உரிய காணி எனவும்,இந்தக் காணிகள் 1976 ஆம் ஆண்டு காணி சீர்திருத்த ஆணைக் குழுவால் மக்களுக்கு வழங்கப்பட்டன எனவும், காணிகளை அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் தெரிவித்தார்.

> தமது காணிகளில் மக்கள் அத்துமீறிக் குடியமர்ந்துள்ளனர் என்று தெரிவித்து, பளை – கரந்தாய் கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு எதிராக தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையால் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதையடுத்து குறித்த காணியிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்களின் குடிசைகளும் பிடுங்கப்பட்டன. எனினும் அந்தக் காணிகள் மக்களுடையவை எனப் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனை அடுத்து இணைத் தலைவர்கள் தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையினரை பதிலளிக்குமாறு கேட்டபோது, பதில் வழங்கக் கூடிய அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரினால், குறித்த காணிகளில் தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையால் தென்னங் கன்றுகள் நடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து அந்தக் காணிகளில்இருந்துவெளியேற்றப்பட்ட மக்களுக்கு மீண்டும் அந்தக் காணிகளை வழங்க வேண்டும்எனவும், தென்னங்கன்றுகளுடன் குறித்த காணிகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்குமாறும் இணைத் தலைவர்களால் கடந்த ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. தீர்மானம் எடுக்கப்பட்டும் கடந்த ஒரு மாத காலமாக குறித்தகாணிகள் மக்களுக்கு வழங்கப்படாமல் இருந்த நிலையில்,கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இரண்டாவது அமர்வில் இந்தக் காணிப் பிரச்சினை தொடர்பாக மீண்டும் ஆராயப்பட்டது.

இதன் போது தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையின் கிளிநொச்சிப் பிராந்திய அதிகாரி கலந்து கொண்டு, மக்களுக்கு காணி வழங்கப்படாமைக்கான காரணத்தைத் தெரிவித்தார்.

தமது தலைமையகத்தில் இரு தினங்களுக்கு முன் காணி சீர்திருத்தஆணைக்குழுவினருடன் இடம்பெற்ற கூட்டத்தில், அந்தக் காணிகளில் தெங்குப் பயிர்ச் செய்கைச்சபையினரால் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த காணிகளுக்குப் பதிலாக வேறு காணிகளை வழங்க காணி சீர்திருத்த ஆணைக்குழு இணங்கியுள்ளது என்றும், மக்களுக்கு வேறு காணிகள் வழங்கப்படும் என்றும் தமது தலைமையக முகாமையாளர் தெரிவித்தார் எனவும் குறிப்பிட்டார்.

எனினும் இந்த விடயம் குறித்து கருத்துத் தெரிவித்த இணைத் தலைவர்கள், மக்களின் காணிகள் மக்களிடம் உடனடியாக வழங்கப்பட வேண்டும், முதலீடு செய்யப்பட்டிருந்தால் அந்த முதலீட்டுடன் காணிகளை வழங்க வேண்டும் என்றும், கடந்த கூட்டத்தின்போதே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையினர் செய்யத் தவறின் தாம் நேரடியாகச் சென்று மக்களை அவர்களின் காணிகளில் குடிமர்த் வேண்டிய நிலை வரும் என்றும் தெரிவித்தனர்.

(ற-ஜ-5-21-ரி3)

## குளத்து மீன்களுக்கு வவுனியாவில் தட்டுப்பாடு

வவுனியா, மார்ச் 1

வவுனியாவில் குளத்து மீன்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. அதனால், மக்கள் அதிக விலை கொடுத்து மீன்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் கடந்த ஆண்டு பெய்த மழையால் பெருமளவு மீன் குஞ்சுகள் வெள்ளத்துடன் வெளியேறின. அத்துடன் போதியளவு மீன்குஞ்சுகள் கடந்த ஆண்டு குளங்களில் விடப்படவில்லை. அதனாலேயே இந்தத் திடீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வெளி மாவட்டங்களிலிருந்து வருவோர் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்திக் குளங்களில் பெருமளவு மீன்களைப் பிடித்துச் செல்கின்றனர். இதனால் குளங்களில் மீன்பிடிப்பதற்கு ஏற்கனவே குத்தகை எடுத்த கிராமப்புற மீன்பிடிப்பாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவற்றால் வவு னியா மாவட்டத் மக்கள் அதிக விலை கொடுத்து மீனைப்பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்திக் குளத்தில் மீன்பிடிப்பவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும் என்றுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ற-ஜ-5-402)



இலவச கண் பரிசோதனை முகாம் ஒன்று முல்லைத்தீவு, மல்லாவியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சி.சிவமோகன் தலைமையில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் 150க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இந்தக் கண் பரிசோதனை முகாம் கனடா தமிழ் மருத்துவக் கழகத்தின் நிதியுதவியுடனும், கனடா மற்றும் கிளிநொச்சி மாவட்ட றோட்டரிக் கழகத்தின் பங்களிப்புடனும் நடைபெற்றது. (ற-ஜ)

## வடக்கில் முதல் கல்வி வாரியம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச் 1

வடமாகாணத்தில் முதல் கல்வி வாரியம் துணுக்காய் கல்வி வலயத்தில் நேற்று நிறுவப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் வடமாகாண கல்வி சீரமைப்புப் பரிந்துரைகளில் ஒன்றான ஒவ்வொரு வலயங்கள் தோறும் வலய வாரியத்தை உருவாக்கி வாரியத்தின் ஊடாக எதிர்காலக் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் திட்டத்தில் முதல் தெரிவு வலயமாகிய துணுக்காய் கல்வி வலயத்தின் வாரிய அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு 26பேர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

(ற-ஜ-422)

## போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உள நல மேம்பாட்டுச் செயலமர்வு

முல்லைத்தீவு, மார்ச்.1

போரால் பாதிக்கப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள கூட்டுறவுத் திணைக்களங்களில் பணியாற்றும் பெண்களுக்கான உள நலத்தை மேம்படுத்தும் வகையிலான செயலமர்வுகள் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒத்துழைப்பு அமைப்பால் தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ளன என்று குறித்த அமைப்பின் தலைவரான திருமதி [illegible] இக்பால் தெரிவித்துள்ளார்.

குறித்த அமைப்பினருடைய முதலாவது செயலமர்வு நேற்றும், நேற்று முன்தினமும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றது. இதில் 40க்கும் மேற்பட்ட மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவுப் பணியாளர்களான பெண்கள் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவுச்சபையின் அனுசரணையுடன், முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் வினாயகமூர்த்தி சர்வானந்தராசா, முல்லைத்தீவு மாவட்ட சி.க.கூ.ச. சமாசத் தலைவர் சின்னத்துரை கணபதிப்பிள்ளை ஆகியோரால் முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவி சங்க சமாச மண்டபத்தில் செயலமர்வு ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது கூட்டுறவுத் திணைக்களங்களைச் சேர்ந்த பெண்களுக்கு வழங்கப்படும் செயலமர்வைத் தொடர்ந்து, எதிர்வரும் காலங்களில் மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்கான பயிற்சிகள், மாவட்டத்தில் ஒரு பாடசாலை தெரிவு செய்யப்பட்டு அந்தப் பாடசாலையில் இடம் பெறும் எனவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்த வளவாளர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கியிருந்தனர். (ஜ-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களது அத்துமீறலை தடுக்குமாறு நேற்று ஆர்ப்பாட்டம்

## வட மாகாண மீனவ அமைப்புக்கள் முன்னெடுப்பு; இந்தியத்துணைத் தூதுவரிடம் மனுவும் கையளிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.1
இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு கடல் வளத்தை அழிக்கும் இந்திய மீனவர்களின் அத்துமீறலை முற்றாகத் தடுக்குமாறு வட மாகாண மீனவ அமைப்புக்களால் நேற்று ஆர்ப்பாட்டமும், பேரணியும் நடத்தப்பட்டன.

யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக ஆரம்பித்த பேரணி இந்தியத் துணைத் தூதரகம் வரை சென்றது.




பேரணியின் நிறைவில், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத் தூதுவர் ஆ.நடராஜனிடம் தமது கோரிக்கை மனுவை மீனவர்கள் கையளித்தனர்.

அதன்போது கருத்துத் தெரிவித்த துணைத்தூதுவர் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் வரவே கூடாது என்ற எண்ணத்துடன் தான் நாமும் இருக்கின்றோம். – என்று குறிப்பிட்டார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி வரவே கூடாது. இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களை வர வேண்டாம் எனவும், குறிப்பாக இழுவைப் படகுகளில் வரவே வேண்டாம் என்று நாமும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

> மீனவ அமைப்புகளின் மனுவைக் கையேற்றுக் கருத்துத் தெரிவித்த இந்திய துணைத் தூதுவர் நடராஜன் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் வரவே கூடாது என்ற எண்ணத்துடன் தான் நாமும் இருக்கின்றோம். – என்று குறிப்பிட்டார்.

அண்மையில் கச்சதீவுத் திருவிழாவின்போதும், இந்திய மீனவர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம், இங்கு உள்ள மீனவர்களும் எமது உறவுகளே, எமது உறவுகளான இவர்களையும் பாதுகாப்பது எமது கடமை என்றே கூறினேன்.

இதேவேளை கடந்த ஆண்டுகளை விட 2015 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், ஊடுருவல் குறைந்துள்ளதை அவதானிக்க முடியும்.

இருப்பினும் ஒருவர் கூடக் கைது செய்யப்படாத நிலைமை வர வேண்டும். உங்களது கோரிக்கை மனுவைக் கொழும்பில் உள்ள தூதரகம் ஊடாக இந்திய வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பி வைப்பேன் – என்றும் அவர் தெரிவித்தார்.
(ற-5-101-106)

# எமது சந்ததியின் வாழ்வாதாரத்தை அழிக்கின்றனர் இந்திய மீனவர்கள்

## வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு இணையத்தின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.1
இந்திய மீனவர்கள் எமது வாழ்வாதாரத்தை மட்டும் அழித்து விடாமல், எமது எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வாதாரத்தையும் அழித்துக் கொண்டிருக்கின்றனர்.– இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு இணையத்தின் செயலாளர் வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராக நேற்று, திங்கட்கிழமை யாழில் ஆர்ப்பாட்டம் ஒன்றை வடபகுதி மீனவர்கள் முன்னெடுத்தார்கள்.

அந்த ஆர்ப்பாட்டத்தின்போது, இலங்கைகான இந்திய துணைத் தூதுவர் அலுவலகத்தின் முன்பாக சென்று, அங்கு இந்திய துணைத் துணைத்தூதுவரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்த பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது–

போர் முடிந்த பின்னரும் எமது மீனவர்களது பிரச்சினைகள் தீராமல் உள்ளன. எமது கடலில் அத்துமீறி மீன்பிடிப்பது முதலிடமாகவுள்ளது. பல முறை ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேச்சுக்களை நடத்தினோம்.

இந்திய இழுவைப்படகுகள் எமது எல்லை தாண்டி வருகின்றன. இதனால்எமதுவாழ்வாதாரம் கேள்விக் குறியாக மாறி இருக்கும் நிலையில் எமது பின் சந்ததியினரும் வாழ முடி யாத நிலை உருவாகியுள்ளது.

எமக்கு எதிராக எமது வளங்களை அழிக்கும் நோக்கில், எமது வாழ்வாதாரத்தைச் சீரழிக்கும் நோக்கில், எமது கடற்பரப்பில் மீன்பிடி அனுமதி கோரி சென்னையில் தமிழக மீனவர்கள் முற்றுகைப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைப் பின்னுக்குத் தள்ளியவர்கள், இவ்வாறான பாதகமான வேலைகளை செய்யும்போது, இவர்களா எமது தொப்புள்கொடி உறவு? இவர்களா எமது உடன்பிறப்புக்கள்? என எண்ணத் தோன்றுகின் றது.

இந்த நிலைவராமல் இருக்க வேண்டுமாயின், இந்திய அரசும், இந்திய துணைத்தூதுவரும் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த விடயங்கள் குறித்து பல வகையில் சிந்திக்கக் கூடியவர் இந்திய துணைத்தூதுவர் என்ற வகையில், சரியான தீர்வைப் பெற்றுத் தருவார் என நம்புவதோடு, எமக்கு மிக விரைவில் விடிவு கிடைக்கும் என்றும் நம்புகின்றோம்.–என்றார். (ற-ஜ-106)

# விடத்தற்பளை கிராமத்துக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்கவும்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கோரிக்கை

வரணி,மார்ச் 1
விடத்தற்பளை கிராமத்துக்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்கம் சார்பாக இணைத் தலைவர்களிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் சாவகச்சேரி, கச்சாய், கெற்பேலி, கிளாலி, அல்லிப்பளை, ஆனையிறவு வரையான பாதையைப் புனரமைத்து உதவமாறும், இந்தப் பாதையைப் புனரமைப்பதன் மூலம் ஏ9 வீதியின் போக்குவரத்துத் தூரம் சுமார் 10 கி.மீ வரை குறைக்கப்படும் என்பதுடன் ஏ9 வீதியின் போக்குவரத்து நெருக்கடி, விபத்துக்கள் குறைவடைய வாய்ப்புக்கள் உண்டு எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த வீதியைப் புனரமைத்து போக்குவரத்துக்கு அனுமதிக்கும்பட்சத்தில்மேற்கூறப்பட்டபின் தங்கிய கிராமங்களும் துரித வளர்ச்சியடையும் வாய்ப்புள்ளது.

மேற்கூறப்பட்ட கிராமங்களுடன் மேலதிகமாக கிளாலி கடற்கரை, கேடில்ஸ்நகர், கரம்பகம், எழுதுமட்டுவாழ், பாலாவி போன்ற கிராமங்களும் அபிவிருத்தி அடையும் ஏதுநிலை உள்ளது.

விடத்தற்பளை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் பட்சத்தில் முன்கூறப்பட்ட பின்தங்கிய கிராம மக்கள், போதிய மருத்துவ வசதிகளை பெறக்கூடியதாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-ஜ-122)

# யாழ். நகருக்கு வெளியே திணைக்களங்களை அமையுங்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 1
குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் செயற்பாட்டை விடுத்து, யாழ்ப்பாண நகருக்கு வெளியே திணைக்களங்களை அமைக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளுங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

"நகருக்கு வெளியே வேண்டுமானால் காணி வழங்க முடியும்" என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும், நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்தை ஆமோதித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது துறைசார் விடயங்கள் ஆராயப்பட்டன. இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையால் தமது தேவைப்பாடுகள் குறித்து இதன்போது கருத்து முன்வைக்கப்பட்டது.

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபைக்கு யாழ்.நகரில் ஒரு கட்டடம் அமைப்பதற்குக் காணி வழங்குமாறு பல தடவைகள் கோரியிருந்த போதிலும் இது வரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தமக்குப் பிராந்தியக் காரியாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும், மாவட்டத்தின் மத்தியில் ஒரு ஏக் கர் காணி தமது அலுவலகம் அமைப்பதற்குப் போதுமானது என்றும் வேண்டுகோள் முன் வைக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாவட்டத்தின் மையப்பகுதியில்தான் அனைத்துத்திணைக்களங்களும் தமக்கான இடம் வேண்டும் என்றால் எதுவும் செய்ய முடியாது.

நகரத்தை விட்டு வெளிப் பகுதிகளுக்கும் செல்லுங்கள். நகரத்துக்கு அண்மையில் வெற்றுக் காணிகள் பல உள்ளன. அவற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

நகரிலிருந்து சில நிமிடங்களில் போகக்கூடிய அளவில்தான் மண்டைதீவுக்கான போக்குவரத்துப் பாதை தற்போது உள்ளது. யாழ். நகரில் நெருக்கடி என்று சொல்லிக் கொண்டு நகருக்குள்ளேயே கட்டங்களை அமைக்காதீர்கள் என்று குறிப்பிட்டார்.

நகரில் காணி வேண்டும் என்றால், தொழிற்பயிற்சி அதிகார சபையினர் தமக்கு வீடொன்றை வாடகைக்கு எடுத்து இயங்க முடியும். நகருக்கு வெளியில் வேண்டுமானால் காணி வழங்கலாம் என்று அரச அதிபர் நா.வேதநாயகன் இதன்போது தெரிவித்தார். (ற-ஜ-5-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயனின் செய்தி ஆசிரியருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



கொழும்பு, மார்ச் 1
உதயனின் முன்னாள் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதனுக்கு, வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.
ஐ.பி.சி. தமிழ் தொலைக்காட்சியின்ஆரம்பவிழா சுவிற்சர்லாந்து பிறிபேர்க் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதன்போதே இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
இந்த விழாவில் சனல் 4 தொலைக்காட்சியின் தயாரிப்பாளரும், ஊடகவியலாளருமான கலெம் மக்ரே, ஊடகவியலாளரான இரா.துரைரத்தினம் மற்றும் கலைஞர் க.செ.துரை, கவிஞர் கிருஷ்ணா அம்பலவாணர்ஆகியோருக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன. இந்த விருதுகளை இலங்கையின்மூத்த ஒலி பரப்பாளர் வி.எச். அப்துல்ஹமீட்வழங்கினார்.
உதயனின் செய்தி ஆசிரியரான ஞா.குகநாதன், 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியிலிருந்து தப்பித்து, அதன் பின்னர் சுவிஸில் தஞ்சம் புகுந்துள்ளார். (ற-ஐ-5)

# அரசமைப்புக்கான கருத்தறியும் அமர்வுகள் நேற்றுடன் நிறைவு

கொழும்பு, மார்ச் 1
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான பொதுமக்களின் கருத்தறியும் நடவடிக்கைகள் நேற்று நிறைவு பெற்றுள்ளன. இதன் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது என்று பொதுமக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜெநாயக்க தெரிவித்தார்.
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக மக்களிடம் கருத்தறிவதற்காக 24 பேரடங்கிய குழுவொன்றை அரசு அமைத்தது. இதில் சிவில் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர்.
இந்தக் குழு தனது முதலாவது அமர்வை கொழும்பில் நடத்தியது. அதன் பின்னர் அனைத்து மாவட்டங்களுக்கும் பயணம் செய்து மக்களின் கருத்துகளைப் பதிவு செய்தது. நேற்றுடன் மாவட்ட மட்டத்திலான அமர்வுகள் அனைத்தும் முடிவுக்கு வந்தன.
இந்த நிலையிலேயே மேற்படி குழுவின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எவை என்று சட்டத்தரணி லால் விஜெநாயக்கவிடம் கேட்டபோது;

> “கொழும்பில் மீளவும் மக்கள் கருத்தறியும் அமர்வு நடத்தப்படவுள்ளது. அத்துடன், மதத் தலைவர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களைத் தனித்தனியே சந்திக்கவுள்ளது”

மாவட்ட மட்டத்திலான அமர்வுகள் நிறைவுபெற்றுள்ளன. அதன் பின்னர் தேர்ந் தெடுக்கப்பட்ட சில மாவட்டங் களுக்கு மறுபடியும் எமது குழு பயணம் மேற்கொள்ளும்.
குறிப்பாக, கொழும்பில் மீளவும் மக்கள் கருத்தறியும் அமர்வு நடத்தப்படவுள்ளது. அத்துடன், மதத் தலைவர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களைத் தனித்தனியே சந்திக்கவுள்ளோம்.
இந்த மாதம் 31 ஆம் திகதிவரை கருத்துக்கள் உள்வாங்கப்படும். அதன் பின்னர் ஏப்ரல் மாத இறுதிக்குள் அறிக்கை அரசிடம் கையளிக்கப்படும் - என்றார். (ற-ஐ-5-சி)

# லசந்த படுகொலை தொடர்பில் 40 அதிகாரிகளிடம் விசாரணை

கொழும்பு, மார்ச் 1
சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பாக, இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 40க்கும் அதிகமான அதிகாரிகளிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன என்று கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.
லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால், கடந்த சில வாரங்களுக்குள், 40க்கும் அதிகமான இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.
இந்தப் படுகொலை நடப்பதற்கு ஒரு மணிநேரம் முன்னதாகவே, கூட்டு நடவடிக்கைப் பணியகத்துக்கு அது பற்றிய தகவல் கிடைத்திருந்தது என்று அங்கு பணியாற்றிய முன்னாள் உயர் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டிருந்தார்.
அதேவேளை, அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் செயலாளராக முன்னர் பணியாற்றியவரிடமும் இந்தப் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்தப்படவுள்ளது. அத்துடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவரிடமும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த காலத்திலேயே இந்தப் படு கொலை இடம் பெற்றது.
இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளின் தகவல்கள் மற்றும் உத்தரவின் பேரிலேயே இந்தக் கொலை இடம்பெற்றது என்றும், அவர்கள் பின்னர் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த ஊடகத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-5)

## கடந்த வருடம் நவம்பர் மாதம் பொருள்களின் விலை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 1
2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் பாவனைப்பொருள்களின்விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று சனத்தொகை புள்ளி விவரத் திணைக்களம் உறுதிசெய்துள்ளது.
மரக்கறி வகைகள், பச்சை மிளகாய், மீன் வகைகள், யோக்கட், முட்டை, தேங்காய், போன்ற பொருள்களே இவ்வாறு விலை உயர்ந்துள்ளன.
இவற்றின்விலையில் மாற்றம் ஏற்பட்ட போதிலும், 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெரிய வெங் காயம், தேசிக்காய், கிழங்கு, நெத்தலி, பருப்பு, பால்மா வகைகள், கோழி இறைச்சி போன்ற உணவுப் பொருள்களின் விலைகள் குறைவடைந்தன.
எனினும் 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இந்தப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று சனத்தொகைப் புள்ளி விவரத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ற-ஐ-4)

மாபெரும் ஏல விற்பனை
பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களுக்கு
மார்ச் 03ஆம் திகதி
புகையிரத நிலைய வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா
அஜித் - 0773 - 136404
நெலும் - 011 - 5923880
பார்வைக்கு - மார்ச்
01ஆம், 2ஆம் திகதிகளில்
(10.17.20)
LOLC MICRO CREDIT
LOLC FINANCE
SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 124 Years of Service Excellence.
Head Office & Showroom
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593,
Fax: 081 2224371
Email: schokmankandy@sltnet.lk
City Office & Showroom:
290, Havelock Road, Colombo 5.
Tel: 011 2502680, 2585408
Tel / Fax: 011 2585
Email: schokman@samera1892.com
Web: www.sandslanka.com

# தேர்தல் பரப்புரைகளின்போது தேசிய கீதம், கொடிக்குத் தடை

கொழும்பு, மார்ச்1
தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின்போது தேசிய கீதம் மற்றும் தேசியக் கொடி ஆகியவற்றைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் காலங்களில் நாட்டில் நடைபெறும் எந்தவொரு தேர்தலுக்காகவும், பரப்புரை நோக்கில் தேசிய கீதம் அல்லது தேசியக் கொடியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது என்று தேர்தல்ஆணைக்குழு அறிவித்துள்ளது.
கட்சிகளை, வேட்பாளர்களை அல்லது குழுக்களை பரப்புரை செய்யும் நோக்கில் இவ்வாறு கொடி, கீதம் மற்றும் வரலாற்றுச் சின்னங்களை பயன்படுத்த முடியாது என்றும் தெரிவித்துள்ளது.
மாகாண, பிரதேச கொடிகள், மதக் கொடிகள், மதத் தலைவர்களின் அல்லது புனிதர்களின் படங்கள் போன்றவற்றையும் தேர்தல் விளம்பரங்களில் உள்ளடக்க அனுமதிக்கப்படமாட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஊடக நிறுவனங்கள் வாக்குரிமையை ஓர் அடிப்படை உரிமையாகக் கருத்தில் கொண்டு நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அரசியல் கட்சிகள், ஊடக நிறுவனங்களுக்கு தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் இதனை அறிவித்துள்ளது. (ற-ஐ-5)

# மகிந்தானந்தவின் வங்கிக் கணக்கு விவரங்கள் கோருகிறது நீதிமன்றம்

கொழும்பு, மார்ச் 1
மக்கள் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்று, முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, அவரது உள்நாட்டு - வெளிநாட்டு வங்கிக் கணக்கு விவரங்களைப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலபிட்டிய உத்தரவிட்டுள்ளார்.
பொது மக்களின் பணத்தைக் கொள்ளையிட்டு மிகவும் குறுகிய காலத்தில் பணத்தையும், சொத்துக்களையும் குவித்தார் என்று மகிந்தானந்த மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஊழல் ஒழிப்பு குரல் என்ற அமைப்பின் அழைப்பாளர் வசந்த சமரசிங்கவே மேற்படி, முறைப்பாட்டைச் செய்திருந்தார்.
இந்த முறைப்பாடு தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக மகிந்தானந்தவின் உள்நாட்டு - வெளிநாட்டு வங்கிக் கணக்குவிவரங்களை புலனாய்வுப் பிரிவினரிடம் வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
சட்டவிரோதமான முறையில் மகிந்தானந்த பணம் சம்பாதித்துள்ளார் என்றும், அந்தப் பணம்உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரம் பகிரப்பட்டால் நாட்டில் மீண்டும் போர்!

## அச்சமூட்டுகின்றார் மகிந்த எம்.பி.

கொழும்பு, மார்ச் 1

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர வேண்டும் என்று சர்வதேச சமூகத்தினர் இந்த அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர். இதனை இந்த அரசு நிறைவேற்றுமாக இருந்தால், நாட்டில் மீண்டும் ஒரு முறை போர் உருவாகும் நிலைமை ஏற்படும். - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



போரின் பின்னர் வடக்கு மாகாணத்தை நாம் கையாண்ட விதத்தில் தற்போதைய அரசு அதனைக்கையாளாதமையாலேயே இவ்வளவு பிரச்சினைகளும் ஏற்படுகின்றன என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் எமது இராணுவத்தைத் தண்டிக்க வேண்டும் என்று விரும்பினர். இன்றைய அரசு அதனைத்தான் செய்து கொண்டு இருக்கின்றது. சர்வதேச நாடுகளையும், புலம்பெயர் அமைப்புக்களையும் திருப்திப்படுத்தும் நோக்கில் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

> வடக்கில் ஆரம்பத்தில் மக்களின் மீள்குடியமர்வே தேவை என்றனர். இப்போது, வடக்கிலிருந்து முழுமையாக இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்று சொல்கின்றனர். அத்துடன் வடக்கு – கிழக்கும் தனி அலகுகளாக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கின்றனர்.

வடக்கில் ஆரம்பத்தில் மக்களின் மீள்குடியமர்வே தேவை என்றனர். இப்போது, வடக்கிலிருந்து முழுமையாக இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்று சொல்கின்றனர். அத்துடன் வடக்கு - கிழக்கும் தனி அலகுகளாக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கின்றனர்.

இதனூடாக வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பலப்படுத்துகின்றனர். அவர்களுக்கான மாகாண அதிகாரங்கள், குறிப்பாகக் காணி - பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டிய நிலைமை உருவாகி வருகின்றது. இதனையே சர்வதேச சமூகத்தினரும் வலியுறுத்தி வருகின்றனர். இதனை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் அரசு இருக்கின்றது. அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுமாயின் மீண்டும் நாட்டில் ஆயுத மோதல் நிலைமை ஒன்று உருவாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதேபோல் மீண்டும் நாட்டில் குழப்பகரச் சூழலை உருவாக்கி அதில் சர்வதேசம் தலையீடு செய்ய எத்தனிக்கின்றது. இதனூடாக நாடு துண்டாடப்படும். அந்த இலக்கை நோக்கியே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினர் பயணித்துக் கொண்டிருக்கின்றனர் - என்றார். (ற-ஜ-5)

# 34 ஆண்டுகளின் பின்னர் விக்கிரமபாகுவுக்கு நட்டஈடு

கொழும்பு, மார்ச் 1

1982 ஆம் ஆண்டு சேவையில் இருந்து நிறுத்தப்பட்டமைக்காக நவ சமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவுக்குத் தற்போது நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

அந்தக் காலப்பகுதியில் அரசுக்கு எதிராகக் கருத்து வெளியிட்டமைக்காகப் பேராசிரியர் விக்கிரமபாகு கருணாரத்ன பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியை இழந்தார். குறித்த பதவி அவருக்கு மீளவும் கிடைக்கப் பெறவில்லை.

இந்த நிலையில் தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவின் பேரில் அவரது நிலுவையிலுள்ள சம்பளத்துடன் ஓய்வு பெறும்வரை சேவையில் இருந்ததாகக் கருதி, 60 லட்சம் ரூபா பணம் நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, எனக்கு ஏற்பட்ட அநீதி குறித்து ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியிருந்தேன். இதனையடுத்து உடனடியாக ஜனாதிபதி உரிய நிவாரணம் பெற்றுத் தந்துள்ளார் என்று தெரி வித்தார். (ற-ஜ-5)

# பட்டப்பகலில் இளம்பெண் கழுத்து வெட்டிக் கொலை

## நிறுவன முகாமையாளர் கைது; கல்முனையில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 1

கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனத்தின் உதவி முகாமையாளராகக் கடமையாற்றி வந்த பெண்ணொருவர், பட்டப்பகலில் அலுவல கத்துக்குள் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அந்த நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள குறித்த நிறுவனத்தில் முகாமையாளராகப் பணியாற்றும் நற்பிட்டிமுனை மயான வீதியைச் சேர்ந்த நபரே கல்முனைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நற்பிட்டிமுனை, கல்முனையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயார் கடந்த சனிக்கிழமை கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார். அலுவலகத்தில் இவருடன் கடமையிலிருந்த மற்றொரு வெளிக்கள உத்தியோகத்தர், மதிய போசனத்துக்காக வெளியில் சென்று மீண்டும் அலுவலகத்துக்கு வந்து பார்த்த போது குறித்த பெண் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் கீழே கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நீதிபதியின் உத்தரவுக்கு அமைய உடற்கூற்றுப் பரிசோதனைக்காகச் சடலத்தை அம்பாறை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர்.

இதன் போது, அவர் கழுத்தில் அணிந்திருந்த தாலிக்கொடி அபகரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் கடந்த 8 வருடங்களாக குறித்த நிதி நிறுவனத்தின் மட்டக்களப்பிலுள்ள அலுவலகத்தில் பணிபுரிந்தார் என்றும், கடந்த 10 நாள்களுக்கு முன்னரே கல்முனையிலுள்ள அலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார் என்றும் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (ஜ-5-சி)

# இந்திய நிபுணர் உதவி பெற அனுமதி மறுப்பு

## வெளிவிவகார அமைச்சு மீளமைப்புக்கு

கொழும்பு, மார்ச் 1

இலங்கை வெளிவிவகார அமைச்சை மீளமைப்புச் செய்வது தொடர்பாக, இந்திய நிபுணர்களின் உதவியைப்பெற்றுக் கொள்ளும் முயற்சிக்கு இலங்கை அமைச்சரவையின் பொருளாதார முகாமைத்துவக் குழு அனுமதி மறுத்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு சிங்கப்பூர் அரச நிபுணர்களின் உதவி பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இந்த மறுசீரமைப்புத் திட்டத்தில் ஆற்றலைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளன.

அதேவேளை, இந்தத் திட்டத்தின் கீழ் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுக்கு இந்திய நிபுணர்களின் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளும் திட்டம் ஒன்று இலங்கை வெளிவிவகார அமைச்சால் முன்மொழியப்பட்டது.

ஆனால், அதனை நிராகரித்துள்ள அமைச்சரவையின் பொருளாதார முகாமைத்துவக் குழு, சிங்கப்பூரின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு மட்டும் அனுமதி அளித்துள்ளது. இதற்கான உதவியை வழங்க சிங்கப்பூர் அரசு இணங்கியுள்ளது. (ற-ஜ-5-சி)

# குறுந்தகவலில் மன்னிப்புக் கோரிய அமைச்சர்

கொழும்பு, மார்ச் 1

நான் தொழிற்சங்கத் தலைவரை மாத்திரமே விமர்சித்தேன். என்னில் தவறு இருந்தால் ஏனைய மருத்துவர்கள் மன்னிக்குமாறு கோரி அவர்களுக்கு குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்) அனுப்பினேன்.- இவ்வாறு தொலைத் தொடர்பு மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

அனைத்து மருத்துவர்களையும் நான் விமர்சிக்கவில்லை. மருத்துவர்களின் தொழிற்சங்கத் தலைவரான மருத்துவர் அனுருத்த பாதெனியவின் செயற்பாட்டை மட்டுமே கண்டித்து உரையாற்றினேன்.

என்னில் தவறு இருக்குமேயானால், ஏனைய மருத்துவர்கள் மன்னித்துக் கொள்ளுங்களென்று குறுந்தகவல்களை அனுப்பியிருந்தேன். அதற்குப் பலர் பதிலளித்திருந்தனர். ஒரு சிலர் பதில் அனுப்பவில்லை.

மருத்துவர்களின் தொழிற் சங்கத்தலைவர் பாதெனிய, தமக்குச் சம்பந்தமில்லாத விடயத்தை விமர்சித்தமையால், கீழ்த்தரமான வேலைகளை செய்ய வேண்டாமென்று நான் கூறியது உண்மை. இது எனக்கும் அவருக்கும் இடையேயான பிரச்சினை எனக்குறிப்பிட்டுள்ளார். (ற-ஜ-5)

# விசாரணையிலிருந்து தப்பவே நாடகமாடுகின்றாராம் ராஜித

கொழும்பு, மார்ச் 1

பொலிஸ் நிதிமோசடிப் பிரிவின் விசாரணையிலிருந்து தப்பித்துக் கொள்ளவே அமைச்சர் ராஜித சேனாரத்ன சுகவீனம் என்று நாடகமாடுகின்றார் என்று சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

தற்போது அமைச்சர் ராஜித சேனாரத்ன சுகவீனமுற்று சிங்கப்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றார்.

இந்த நிலையில் குறித்த சிங்கள ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில், அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக பொலிஸ் நிதிமோச டிப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளை திசை திருப்பும் நோக்கில் அவர் சுகவீனமுற்றுள்ளது போன்று நாடகமொன்றை முன்னெடுத்திருக்கின்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# மீண்டும் போர் ஏற்பாடாதிருக்கவே ஜனாதிபதியும், பிரதமரும் முயற்சி

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 1



30 வருடகால போரால் எமது நாடு சீர்குலைந்தது. பலர் கொல்லப்பட்டனர். மீண்டும் அவ்வாறானதொரு போர் ஏற்படாமல் இருப்பதற்கான முயற்சிகளையே ஜனாதிபதியும், பிரதமரும் முன்னெடுத்து வருகின்றனர். - இவ்வாறு சபை முதல்வரும், நெடுஞ்சாலைகள் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாவலப்பிட்டியவில் நடந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குருதிக் கறை படிந்தவர்கள் நல்லாட்சி அரசுக்கு எதிராக தேங்காய்கள் உடைப்பதால் எதுவும் நடக்கப் போவதில்லை. நல்லாட்சி அரசுக்கு எதிராக இன்று சிலர், சிதறு தேங்காய் உடைக்கின்றனர்.

நேர்மையானவர்களே சிதறு தேங்காய் உடைக்க வேண்டும். மாறாக குருதிக்கறை படிந்தவர்கள் தேங்காய்களை உடைப்பதால் எதுவும் நடந்து விடுவதில்லை. பல ஊடகவியலாளர்களின் கொலைக்குக் காரணமானவர்கள், பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவை சிறையில் தள்ளியவர்கள் தேங்காய்களை உடைப்பதால் எந்தவித பயனையும் பெற்றுக்கொள்ளப் போவதில்லை. மாறாக சாபத்தையே பெற்றுக் கொள்கின்றனர்.- என்றார். (ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் கல்வி மலர்ச்சியை கொய்து எறிய முனையாதீர்...

பலாலி ஆசிரிய கலாசாலையின் சொந்த நிலத்தை, இடத்தை இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும்.

கலாசாலையை உடனடியாக தற்காலிக இடத்திலேனும் மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில், மேற்போந்த இரண்டு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

சுமார் முப்பத்தொரு ஆண்டுகளாக ஆசிரிய கலாசாலை, பலாலியில் இயங்கி வந்தது. போர் நடவடிக்கை காரணமாக அது, 1986 ஆம் ஆண்டு தொடக்கம் பல இடங்களுக்குப் பெயர்ந்து, இரவல் இடங்களில் இயங்கியது ஓர் இருண்ட வரலாற்றுப் பதிவு எனலாம்!

ஆசிரிய பயிற்சிக்கான பூஜ்ஜிய வளம் தானும் இல்லாமல், அதிபர், ஆசிரியர் ஒருவர், காவலாளி ஒருவர் என்ற கணக்கில், அது இன்று ஒடிந்து தேய்ந்து போய்க்கிடக்கிறது.

நல்லாட்சி உருவாகி 14 மாதங்கள் கடந்து சென்றபோதிலும், அதனை மீள இயக்குவது குறித்து எவரும் அக்கறை காட்டவில்லை; முற்றாக மறந்து போய்விட்டனர் அந்தோ..!

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில், பலாலி ஆசிரிய கலாசாலைக்கு வாய்க்கரிசி போடாமல் தடுப்பிடப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களை உருவாக்குவதற்கென பதின்மூன்று பாட நெறிகள் போதிக்கப்பட்ட பெரும் கல்விக் கூடமாக மிளிர்ந்த அது, இப்போது கீழே விழுந்து நொறுங்கிப் போகும் கடைசிக் காலத்தில் தள்ளாடிச் சரிந்துபோய்க் கிடக்கிறது!

தமிழ் மக்கள் தமது பெரும் சொத்தாகக் கட்டி வளர்த்த, மேலோங்கச் செய்த கல்வி வளம், கொழும்பின் இனவாத அரசுகளின் பிடியில் சிக்கிப் புதைந்து போய்க் கிடப்பதற்கு, பலாலி ஆசிரிய கலாசாலைக்கு ஏற்பட்டுள்ள கதி, ஓர் உகந்த உதாரணம் ஆகும்; அந்தோ...!

தமிழர்களின் கல்வி மலர்ச்சியைக் கொய்து எறிந்து விட்டால், அவர்கள் சமத்துவம், அரசியல் உரிமை என்பவற்றைத் தட்டிக் கேட்காமல் சோர்ந்துபோய், தெற்கின் எடுப்பார் கைப்பிள்ளைகளாக மாறிவிடுவர் என்றும், கொழும்பு அரசுகள் தமக்கு உகந்த வாய்ப்பாடுகளை(Formulas) இயற்றி இருக்கவும் கூடும்.

அதனைப் பொய்ப்பித்து, உடனடியாக பலாலி ஆசிரிய கலாசாலையை, தற்காலிகமாக ஏனும் இயங்க வைக்க வேண்டும் என்று--யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை காலத்தின் உடனடித் தேவையாகும்.

பலாலி, ஆசிரிய கலாசாலையின் சொந்த நிலத்தை, இராணுவத்தினர் பிகு பண்ணாமல் விடுவித்து வெளியேற வேண்டும்.

ஒருங்கிணைப்புக் குழு இயற்றிய தீர்மானத்துக்கும், சாக்குப் போக்குக் காட்டாமல் விரைந்து செயலுருவம் கொடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வாத காரணங்களைக் காட்டி, இப்போது அங்கு நிலை கொண்டிருக்கும் அரசின் ஆயுதப் படைகளை, வேறு வியூகங்கள், வடிவங்களில் கிட்டவும் கொண்டு வரக்கூடாது.

நம்பிக்கையுடன் தமிழ் மக்கள் எதிர்பார்க்கலாமா...?

# மீண்டு...(ம்) வருமா? 'பிரபாகரன் யுகம்'

அலெக்ஸ் பரந்தாமன்

**2009** மே மாதம் 19ஆம் திகதியுடன் விடுதலைப் புலிகளுடனான இன அழிப்புப் போரை, தனது படையணிமூலமும் அயல் நாடுகளின் உதவி கொண்டும் மகிந்த ராஜபக்ச முடிவுக்குக் கொண்டு வந்த பிற்பாடு, இந்த நாடு படும்பாடு இப்போது சொல்லுந்தரமன்று. அதிலும், யாழ். குடாநாடு படும் உபத்திரவங்கள் வார்த்தைகளால் எடுத்தியம்பவும், வரிகளாய் எழுதிக் கொள்ளவும் முடியாதவை.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகச் சித்திரித்து அந்தப் பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றியதாகக் கூறும் இனவாதி மகிந்த ராஜபக்ச, தனது அரசாட்சிக் காலத்தில் தானே விதைத்த வினையைத் தற்போது அறுவடை செய்து கொண்டிருக்கிறார். அதே சமகாலத்தில், யாழ். குடாநாடு தன்நிலை தாழ்ந்து பிறழ்வுபட்டிருப்பதற்கு இவரே காரணகர்த்தாவாக இருப்பதையும் மறுத்துரைக்க முடியாது.

இன்று யாழ். குடாநாட்டினுள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற கொலைகள், கொள்ளைகள், வன்புணர்வுகள் போன்ற சமூக முறைகேடுகளானவை மிகுந்து கொண்டிருக்கும் நிலையில், எல்லோரும் கடந்துபோன காலத்தை, அதாவது போருக்கு முன்னைய பிரபாகரனின் காலத்தைக் குறித்து, இப்போது கழிவிரக்கப்படுகின்றனர். மீண்டும் அப்படியொரு காலம் உருவாகிவருமா...? என்ற ஏக்கத்துடன் ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

வன்னியில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த இறுதிக் கட்டத்தின்போது, புலிகள் அமைப்புக்குள் இருந்த சிலரது செயற்பாடுகளால், 'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்' என்ற விடுதலை அமைப்பு தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு, அவமானத்தைச் சுமந்து கொண்டமை வரலாறு. அந்த அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளின் எதிர்விளைவுகளுக்கும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பொறுப்பாளியல்ல என்பதை வன்னிப் போருக்குள் அகப்பட்ட பொதுமக்களும், புலிகள் இயக்கத்தைப் புரிந்து கொண்டவர்களும் தெரிந்தே வைத்திருந்தனர்.

**'பிள்ளை பிடிப்பு' விவகாரம்:**
ஆரம்பத்தில் 'பிள்ளை பிடிப்பு' விவகாரம் இயக்கம் மீது பொதுமக்களுக்கு ஒருவித வெறுப்பை உண்டுபண்ணிவிட்டிருந்தபோதிலும், தலைவர் பிரபாகரனின் கடைசி மகன் பாலச்சந்திரனின் சாவு குறித்த செய்திகள் வெளியானது முதல் அவர் மீதும் இயக்கம் மீதும் தமிழ் மக்கள் மீண்டும் அனுதாப்பட ஆரம்பித்துவிட்டனர். இராணுவம் பாலச்சந்திரனைச் சுட்டுப் படுகொலை செய்ததன் மூலம் புலிகள் மீது வெறுப்பாயிருந்த மக்களை மீண்டும் அவர்கள் பக்கம் திரும்ப வைத்தமை ஒரு முரண் நகையாகவே இன்றும் பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், அந்நிய நாடுகளின் கூட்டு இராணுவச் சேர்க்கை மூலம் பிரபாகரன் தோற்கடிக்கப்பட்டதன் பின்பு, அந்த இயக்கம் மீது வெறுப்புக் கொண்ட பலருக்கும் இப்போது அவர் இல்லாத இடைவெளியை, அதன் மனவலியை குடாநாட்டின் சமகால நிகழ்வுகள் உணர்த்தத் தொடங்கியுள்ளன.

> "அசம்பாவிதங்களில் ஏதேனும் ஒன்று நிகழுமாக இருந்தால் இருபத்துநான்குமணித்தியாலத்துக்குள் புலிகளின் புலனாய்வுப் பிரிவு மோப்பம் பிடித்து சம்பந்தப்பவர்களைக் கைது செய்துவிடும்."

காரணம், புலிகள் இயக்கத்தின் அரசியல் செயற்பாடுகள் இராஜதந்திர ரீதியில் அவ்வப்போது தோல்விகளைச் சந்தித்துக் கொண்டாலும், அவர்களது அரசியல் நடைமுறைகள் சிலரை முகம் சுழிக்க வைத்தாலும், அந்த இயக்கம் சமூகத்தின்பால் கொண்டிருந்த நாட்டமும், பொதுமக்கள் மீதான கரிசனையின் தீவிரப் போக்கும், நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட சட்டதிட்டங்களின் இறுக்கமும், பாகுபாடற்ற நியாயத் தீர்ப்பும் அரசியல் ஆய்வாளர்களால் விமர்சிக்கப்பட்டதோடு அவர்களது எதிரிகளாலும் இன்றுவரை போற்றப்பட்டுகிறது.

**புலிகள் இயக்கத்தின் பெண்கள் மீதான கரிசனை**
புலிகள் இயக்கம் பெண்கள் மீது கொண்ட கரிசனையானது அவற்றில் முக்கியமானது. பெண் கள் மீதான ஆணாதிக்கத்தின் அழுத்தங்களை இது அடக்கி, முடக்கி, மடக்கியதோடு பெண்கள் சுதந்திரமாகத் தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்கும், தங்கள் கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிடுவதற்கும் வழிவகுத்துக் கொடுத்தது.

வன்னிப் பெருநிலப்பரப்பு மட்டுமல்ல, வலிகாம இடப்பெயர்வுக்கு முன்பு கூட யாழ். குடாநாடு பிரபாகரனின் ஆளுகைக்குள் இருந்தபோது வன்புணர்வுச் சம்பவங்களோ வாள்வெட்டு நிகழ்வுகளோ வழிப்பறிக் கொள்ளைகளோ நிகழ்ந்ததில்லை. தப்பித்தவறி மேற்கூறப்பட்ட அசம்பாவிதங்களில் ஏதேனும் ஒன்று நிகழுமாக இருந்தால் இருபத்துநான்கு மணித்தியாலத்துக்குள் புலிகளின் புலனாய்வுப் பிரிவு மோப்பம் பிடித்து சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்துவிடும். காட்டிக்கொடுப்புக்களாலும் கயமைத்தனங்களாலும் மகிந்த ராஜபக்சவால் எப்பொழுது புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டதோ, அன்றிலிருந்து வன்னிப் பெருநிலப்பரப்பு மட்டுமல்ல யாழ். குடாநாடு மட்டுமல்ல, ஒட்டு மொத்த வடக்கு கிழக்குத் தமிழ்ப்பெண்களின் சுதந்திரமுமே கேள்விக்குறியாக மாறிவிட்டது. அத்தோடு அவர்களது வாழ்வியலும் அடிமைத்தனமாக்கப்பட்டு விட்டது.

**மின்கம்பத் தண்டனைகள்**
இன்று குடாநாட்டில் தொடர்ந்து நடைபெறும் சமூக குற்றச் செயல்களை நோக்கும்போது 80களின் மின்கம்பத் தண்டனைகள் ஏனோ ஞாபகத்துக்கு வருவதையும் தடுக்க முடியவில்லை. பெண்கள் மீதான வன்புணர்வுச் சம்பவங்களுக்கு அன்றைய மின்கம்பத் தண்டனை, குற்றவாளிகளை எச்சரிக்கப் போதுமானதாக இருந்தது. குற்ற வாளிகள் பயந்து ஒடுங்கவும் திருந்தவும் வழிவகுத்துக் கொடுத்தது.

இப்பொழுது குடாநாடு எங்கோ போய் கொண்டிருக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த நாட்டைப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுத்ததாகக் கூறும் மகிந்த ராஜபக்ச, அதைத் துன்மார்க்கர்களுக்கும், தூத்தேறிக் கூட்டங்களுக்கும் தாரை வார்த்துக் கொடுத்திருக்கிறார் என்பதுதான் உண்மை.காலம்கடந்துதான் அந்தஉண்மை பலருக்குப் புரிவதுதான் வேதனை.

புலிகளைத் தோற்கடித்ததன் மூலம் மகிந்த தரப்புக்கண்ட பலாபலன் என்ன? விதவைகளையும், அபலைச் சிறார்களையும், ஊனமுற்றவர்களையும் துன்புறுத்தல்களுக்கு உள்ளானோர்ரையும் இந்த மண்ணில் நிரப்பி வைத்துவிட்டு எஞ்சியவர்களது இயலாமை மிகுந்த வாழ்க்கையைச் சீரழிப்பதற்கா தமிழ் மக்கள் மீதான போர் மகிந்தவால் தொடுக்கப்பட்டது?

பிரபாகரனை ஒழித்துவிட்டு, வருடா வருடம்போரின் வெற்றியைக் கொண்டாடும் சிங்கள தேசம், யாழ். குடாநாட்டில் கொலைகளையும், கொள்ளைகளையும் மட்டுமன்றி பாலியல் வன்புணர்வு களையும் விதைத்தபடி – வேடிக்கை பார்த்து நகைப்பது எந்த வகையில் நியாயமாகப்படுகிறது?

புங்குடுதீவு மாணவி வித்தியாவிலிருந்து தொடங்கப்பட்ட வன்புணர்வானது, தொடர்ந்து கனகராயன் குளம் மாணவி சரண்யா, கிளிநொச்சி எள்ளுக்காடு சிறுமி ஜெரூசா, வவுனியா உக்கிளாங்குளம் சிறுமி ஹரிஸ்ணவி எனத் தொடர்ந்து சாஸ்திரி கூழாங்குளத்தில் ஒரு சிறுமி மீது வந்து நிற்கிறது.

**அடுத்த இரை யார்?**

புங்குடுதீவு மாணவியின் படுகொலைச் சூத்திரதாரிகள் மீதான பொலிஸாரின் சட்ட நடவடிக்கைகள் 'இறுக்கமாக' இருந்து அவர்கள் நீதியின் முன்பாகத் தண்டிக்கப்பட்டிருப்பின், அதற்குப் பின்பான மூன்று வன்புணர்வுச் சம்பவங்களும் நிகழ்ந்திருக்க வாய்ப்பேயில்லை என்பது பொதுமக்களின் கருத்து.

இந்த வன்புணர்வுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக ஆர்ப்பாட்டம், கடை அடைப்பு, முழுஅடைப்பு எனப் பல விதமான 'கூத்துக்கள்' அரங்கேற்றி முடிக்கப்பட்டுவிட்டன. இந்தக் கூத்துக்கள் மூலம் கண்டுகொண்ட பலாபலன்கள்தான் என்ன? ஊருக்கும் உலகுக்கும் ஒரு தடவை 'பறை' தட்டிவிட்டு ஓய்ந்து போவதால் வன்புணர்வுகளின் பின்னால் ஒளிந் திருக்கும் உண்மை மற்றும் ஊத்தை வெளிப்பட்டு விடுமா?

சாஸ்திரி கூழாங்குளம் சிறுமியில் வந்து முடிந்திருக்கும் காவாலித்தனம், நாளை குடாநாட்டில் இன்னொரு குடும்பத்துக்குள் நுழையாது என்பதற்கு என்ன உத்தரவாதம்? இத்தகைய பாதுகாப்பு உத்தரவாதத்தை யார் வழங்குவார்கள்? அரசியல்வாதிகள் வருவார்களா? அன்றி ஆட்சியாளர்கள் வருவார்களா? இங்கே காக்கி உடுப்புப் போட்டவர்கள் என்ன செய்கிறார்கள்? வழிப்பறிக்கொள்ளையர்களோடும், வன்புணர்வாளர்களோடும் இந்தக் காக்கிச் சட்டைகள் கைகோர்த்து நிற்கின்றனவா? அன்றி கைலஞ்சம் ஏதேனும் பரிமாறப்படுகின்றதா?

இப்படி ஆயிரம் ஆயிரம் கேள்விகளோடு நித்தம் அல்லாடுகிறது யாழ் . குடாநாடு. இப்படியான கேள்விகளுக்கு மத்தியில்தான், குற்றவாளிகளால் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படுகின்ற மக்கள் இப்பொழுது பிரபாகரனின் காலத்தை நினைத்து ஏங்குகிறார்கள். அவ்வாறு அவர்கள் நினைத்துப் பார்ப்பதும் தவறில்லை. சிங்கள தேசத்தின் சட்டமும் நீதியும், காவல்துறையும் நல்லாட்சி அரசும் இருக்க வேண்டிய இடத்தில் இருந்து கொண்டு, நடப்பிக்க வேண்டிய செயல்களை நன்றாக நடப்பித்துக் காட்டுமாக இருந்தால், பாதிக்கப்படும் குடும்பங்கள் வேலுப்பிள்ளை பிரபாகரனை நினைத்துப்பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் இங்குதான் அப்படி நடப்பதேயில்லையே!

இனிவரும் காலங்களில் சிங்கள தேசத்தின் சட்டமும் ஒழுங்கும் சரிவர இடம்பெறத் தவறின், குற்றவாளிகளால் பாதிக்கப்படுபவர்கள் யார் யாரோ, அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தங்களின் அரசியல் சுதந்திரத்துக்கு அப்பால் நின்று கொண்டு, தங்களது குடும்பத்தின் நலனுக்காகவும், தமது பெண்களின் பாதுகாப்புக்காகவும், ஒரு நீதியான நியாயமான பாராபட்சமற்ற தீர்ப்புக்காகவும், தங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, சிங்கள தேசத்தின் சட்டதிட்டங்களைப் புறக்கணித்துவிட்டு, தங்களுக்காகவே இங்கு ஒரு 'வேலுப்பிள்ளை பிரபாகரனை' உருவாக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

> "இந்த நாட்டைப் பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுத்ததாகக் கூறும் மகிந்த ராஜபக்ச அதைத் துன்மார்க்கர்களுக்கும், தூத்தேறிக் கூட்டங்களுக்கும் தாரை வார்த்துக் கொடுத்திருக்கிறார் என்பதுதான் உண்மை. காலம் கடந்து அந்த உண்மை பலருக்குப் புரிவதுதான் வேதனை."

## மக்களுக்குத் தெரியப்படுத்துவது நன்மை பயக்கும்

கடந்த ஆறாம் திகதி உதயன் பத்திரிகையில் மல சலகூடம் உரிய வகையில் பேணப்படாததால் பயணிகள் பாடு திண்டாட்டம் என்ற தலைப்பில் கருத்துக் களத்தில் பிரசுரித்திருந்தீர்கள். அதற்காக ஆயிரம் நன்றிகள்.

தமிழினம் மானத்தோடு தலைநிமிர்ந்து வாழவேண்டும். சட்டம், ஒழுங்கு, சுத்தம், சுகாதாரத்தில் அக்கறை கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பொறுப்பாக நின்று இப்படியான விடயங்களில் காரிய மாற்ற வேண்டியது வடக்கு மாகாண சபையின் தட்டிக் கழிக்கமுடியாத கடமையாகும்.

குறைகளைத் தட்டிக் கேட்பதும் சுட்டிக்காட்டுவதும், பல சோதனைகள், வேதனைகளையெல்லாம் தாண்டி இன்று யாழில் வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும் உங்களைப்போன்ற பத்திரிகை நிறுவனங்களின் தார்மீகப் பொறுப்பு என்பதும் சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. நீங்கள் உதயன் மூலம் அதைச் செய்வீர்கள் என்பதும் என் நம்பிக்கை. மக்களின் நம்பிக்கையும் அதுவேதான்.

முடிந்தால் வடக்கு மாகாண சபையுடன் தொடர்பு கொண்டு யாழ்.-கொழும்பு பயணிகளின் வசதிக்காக சுத்தம், சுகாதாரத்தோடு கூடிய மலசலகூடங்கள் கட்டுவித்துப் பராமரிப்பதற்காக அவர்கள் என்ன ஆக்கபூர்வமான செயற்றிட்டம் வைத்திருக்கிறார்கள் என்பதை உதயன் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்தினால் நன்மை பயக்கும். தொடர் நடவடிக்கையாகவும் அமையும். எல்லாக் காரியங்களிலும் பொதுவாக தொடர் நடவடிக்கை என்பது முக்கியமான ஒன்றாகும்.

நா.விஜயநாதன்
பிரம்படி, கொக்குவில்

## மணல் அகழ்வை உடனடியாக தடுத்து நிறுத்தவேண்டும்

கிளிநொச்சி அக்கராயன் ஆற்றுப்பகுதி, அக்கராயன்குளத்தின் பின்பகுதி, அக்கராயன் மத்திக்கும் அக்கராயன் மேற்குக்குமிடைப்பட்ட வயல் பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம் பெறுகிறது.

அண்மையில் அக்கராயன் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கம் கிளிநொச்சி மாவட்டச் செயலருக்கு அக்கராயனில் நடைபெறும் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துமாறு மனுக் கையளித்திருந்தது.

மணலுடன் உழவியந்திரங்களை கைப்பற்றும் பொலிஸார் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களைக் கொண்டுசென்று நீதிமன்றத்தில் முற்படுத்தாது விட்டுவிடுவதாகவும் பொது மக்கள் கூறுகின்றனர். அக்கராயன் மகா வித்தியாலயச் சூழல், விடந்தைப்பகுதி, அக்கராயன் தபாலகத்துக்கருகான பகுதி ஆகியவற்றில் பகல் வேளையில் கூட டிப்பர்களில் மணல் ஏற்றப்பட்டு வெளியிடங்களுக்குக் கொண்டு செல்வதைக் கட்டுப்படுத்தவோ, கைது செய்யவோ சட்டத்தைப் பேணுவோர் நடவடிக்கையெடுப்பதில்லை.

அக்கராயனில் நடைபெறும் மணல் அகழ்வுக்கு சட்டத்தைப் பேணுவோரின் பூரண ஆதரவு இருப்பதாகவே தெரிகின்றது.

அக்கராயனிலிருந்து வெளியிடங்களுக்கு முல்லைத்தீவு அமதிபுரம் படைமுகாம் வழியாகவும் பூநகரியின் சின்னப்பல்லவராயன்கட்டு படைமுகாம் வழியாகவும் ஆனைவிழுந்தான்குளம் படைமுகாம் வழியாகவும் மணல் கொண்டு செல்லப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சூழல் சட்ட அமுலாக்கல் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் அகழ்வு, காடழிப்பு என்பவற்றை முழுமையாகக் கட்டுப்படுத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

இந்நிலையில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டிருப்பதும் அக்கராயனில் பெரும் சூழலியல் ஆபத்தை உருவாக்கியுள்ளது. கிளிநொச்சி மாவட்ட செயலர் நேரடியாக மணல் அகழ்வு தொடர்பான விவரங்களை அறிந்து நடவடிக்கை மேற்கொள்வதே சிறப்பானது.

எஸ். வரதராஜன்,
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60,000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் ஆர்ஜென்ரீனாவில் டைனோசர் படிமம்


வொசிங்டன், மார்ச்.1

ஆர்ஜென்ரீனா பகுதியில் மிகப் பெரிய டைனோசர் புதை படிமம் கண்டெடுக்கப் பட்டுள்ளது.

இந்தக் கண்டுபிடிப்பு நில ஆய்வாளர்களால் அறிவிக்கப்பட்டதுடன், பிரபலசஞ்சிகையில் இது தொடர்பில் விரிவான விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தப் புதைப் படிமம்60 ஆயிரம் சதுர கிலோ மீற்றருக்குப் பரந்து காணப்படுகின்றது. இது வரை இந்தளவுக்குப் பரந்த புதைபடிம நிலப்பரப்பு கண்டு பிடிக்கப்படவில்லை என ஆய்வாளர்கள் தெரிவித்தனர். இந்தப் புதை படிமம் 140 தொடக்கம் 160 மில்லியன் வருடங்களுக்கு முந்தியதாகும். அண்மைக் காலமாக ஏற்பட்ட மண் அரிப்பில் மேற்புறமாக வித்தியாசமான உருவ அமைப்பு தென்பட்டது. இதன் அடிப்படையில் ஆராய்ச்சி கள் மேற்கொண்டபோது அவை புதிய வகை டைனோசர் இனங்களது புதைப் படிமம் என்று அறியப் பட்டுள்ளன. அந்தப்பகுதி தொடர்ந்து ஆராயப்பட்டு வருகின்றது. (த-ரி4)







ஈராக்கின் தலைநகர் பக்தாத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள சந்தையொன்றில் நேற்று முன்தினம் இ
சைக்கிளில் வந்த தற்கொலைத் தாக்குதல்தாரி ஒருவர் இந்தக் குண்டுவெடிப்பை நிகழ்த்தியுள்ளார்.

micromax
Asia Cup T20
BANGLADESH 2016

2016ம் ஆண்டின் ஆசியா கோப்பை போட்டிகான பிரதான ஸ்பான்சர்கள் "மைக்ரோமெக்ஸ்"
எமது இலங்கை கிரிக்கட் குழுவினருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

போட்டிக்கான நேர அட்டவணை

| திகதி | நேரம் | போட்டி |
|---|---|---|
| மார்ச் 1 செவ்வாய்க்கிழமை | பி.ப 7.00 | இந்தியா VS இலங்கை |
| மார்ச் 2 புதன்கிழமை | பி.ப 7.00 | பங்களாதேஷ் VS பாகிஸ்தான் |
| மார்ச் 3 வியாழக்கிழமை | பி.ப 7.00 | இந்தியா VS ஐக்கிய அரபு இராஜ்ஜியம் |
| மார்ச் 4 வெள்ளிக்கிழமை | பி.ப 7.00 | பாகிஸ்தான் VS இலங்கை |
| மார்ச் 6 ஞாயிற்றுக்கிழமை | பி.ப 7.00 | பிரம்மாண்டமான இறுதி போட்டி |

metropolitan
அங்கீகரிக்கப்பட்ட தேசிய விநியோகிப்பாளர்
மெட்ரொபொலிட்டன் டெலிக்கொம் சர்விசஸ
இல.93/1/1, ஹுணுப்பிட்டி லேக் வீதி,
கொழும்பு 02

# கிராமமொ
# சகல ஆண்க
# சாவுத் தண்

## போதைப்பொருள் கடத்தல் குற்



தெஹ்ரான், மார்ச்.1

ஈரானின் ஒரு கிராமத்தில் போதைப்பொருள் கடத்தல் குற்றத்துக்காக அந்த கிராமத் தில் இருந்த ஆண்கள் அனை வருக்கும் சாவுத் தண்டனை வழங்கப்பட்டது என மனித உரிமைகள் அமைப்பினர் குற் றம் சுமத்தியுள்ளனர்.

பலூச்சிஸ்தான் கிராமத்தைச் சேர்த்த ஆண்களுக்குச் சாவுத் தண்டனை வழங்கப்பட்டதாக நாட்டின் உப தலைவரான கின்டோக்ட் மொலாவெர்டி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவர்களது பிள்ளைகளும் போதைப்பொருள் கடத்தும் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ள தாகவும் அவா மேலும் தெரிவித் தார்.

" பலூச்சிஸ்தான் கிராமத்
சேர்த்த ஆண்களு
சாவுத் தண்டனை வழ
பட்டதாக நாட்டின் உப தலைவ
கின்டோக்ட் மொலா
வெர்டி தெரிவித்தார். "

அவர்கள் அனைவரும் ஒரே நேரத்தி
லப்பட்டார்களா அல்லது வெவ்வேறு
கொல்லப்பட்டார்களா என்பது றித்
வெளியிடப்படவில்லை. சாவுத் த
வழங்குவதில் ஈரான் உலக அளவில் இர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...ரட்டைக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது. இந்தக் குண்டுவெடிப்பில் 28 பேர் கொல்லப்பட்டுள்ளனர். வெடிகுண்டுடன் இருந்த மோட்டார் ... குண்டு வெடிப்பில் 54 பேர் காயமடைந்துள்ளனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (த-ரி4)

## ரஷ்யச் சுரங்க விபத்தில் ஞாயிறன்று 10 பேர் சாவு

மொஸ்கோ, மார்ச்.1

ரஷ்யாவில் சுரங்க விபத்தொன்று ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் 10 பேர் உயிரிழந்ததுடன், 26 பேர் காணாமற்போயுள்ளனர். இடிபாடுகளில் சிக்கியுள்ளோரை மீட்பதற்கு மீட்புக் குழுவினர் விரைந்தனர். அவர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டபோது நேற்று முன்தினம் மீண்டும் மெதேன் வெடிப்பு ஏற்பட்டதனால் 6 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 5 பேர் மீட்புப் பணியாளர்கள் எனச் சுரங்கத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். முதல் வெடிப்பு கடந்த வியாழக்கிழமை, செவெர்நயா எனும் சுரங்கத்தில் 748 மீற்றர் ஆழத்தில் இடம்பெற்றது. வோர்குட்டா நகரில் சுரங்கம் அமைந்துள்ளது.

நூற்றுக்கணக்கான மீட்புப்பணியாளர்கள் சுரங்கத் தொழிலாளர்களை மீட்க மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர். பல நூறு மீற்றர் ஆழத்தில் பார்க்கும் திறன் அற்ற சூழலில் புகை, மாசடைந்த வளி மற்றும் இடிபாடுகளுக்கிடையில் மீட்புப்பணி இடம்பெற்று வருகின்றது. சுரங்கத்தினுள் இறங்கிய மீட்புப்பணியாளர்கள் சில தினங்களாக தொடர்புகளைக் கொண்டிருக்கவில்லை. இதனால் பணியாளர்கள் உயிருடன் இருக்க



வாய்ப்பில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுரங்கத்தில் இரண்டாவது வெடிப்பு இடம்பெறும்போது எழுபத்து ஏழு பேர் மீட்புப்பணிக்காகச் சுரங்கத்தினுள் இருந்தனர் என அவசரகால அமைச்சு தெரிவித்துள்ளது. அவர்களில் 71பேர்மேற்பரப்புக்குக்கொண்டு வரப்பட்டனர். அவர்களில் 11 பேர் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினத்தில் இருந்து இன்று வரை அப்பகுதியில் துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. (த-ரி4)

# ...ன்றில் ...ளுக்கும் ...ண்டனை

### ...றச்சாட்டில்



...த்தைச்
...க்குச்
...ழங்கப்
...வறான

...தில் கொல்
... நேரத்தில்
...ந்து ...வல்
...தண்டனை
...ரண்டாவது

இடத்தில் உள்ளது. அங்கு போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராகக் கடுமையான சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. அங்கு இடம்பெற்ற 947 சாவுத் தண்டனைகளில் 600 தண்டனைகள் போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரானவை ஆகும்.

சாவுத்தண்டனைக்கு எதிரான குழுவின் தலைவர் மாயா போ தெரிவிக்கையில், கிராமத்தின் ஆண்கள் அனைவரையும் தூக்கிலிட்டுக் கொன்ற செயல் ஈரானின் கொடிய நிலையைக் காட்டுகிறது. ஐ.நாவும் ஏனைய அமைப்பினரும் இதனைக் கண்டுகொள்ளாமல் இருப்பது மிகவும் வெட்கக்கேடான செயல் எனத் தெரிவித்தார். (த-ரி4)

## வழிபாட்டில் ஈடுபட்ட மதகுரு சுட்டுக்கொலை

ஒகியோ, மார்ச்.1

அமெரிக்காவின் ஒகியோ மாகாணத்தில் தேவாலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மதகுரு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. வில்லியம் ஸ்கொலர் என்ற பாதிரியாரே அவரது சகோதரரான டானியல் ஸ்கொலரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். வழிபாடு இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை பாதிரியாரைக் குறிவைத்து துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் வேறு எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. வழிபாட்டில் கலந்து கொண்ட மக்கள் ஓடித் தப்பினர். அதில் ஒரு பெண் அவசர உதவிக்குழுவுக்குத் தகவல் அளித்தார்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் வழிபாட்டில் கலந்து கொண்டிருந்தார். பாடகர் குழு பாடல் பாடும் சமயத்தில் இந்த அசம்பாவிதம இடம்பெற்றது. சம்பவம் நடக்கும்போது கிட்டத்தட்ட 20 பேர் ஆலயத்தில் வழிபாட்டில் பங்கெடுத்திருந்தனர். தாக்குதல் நடத்தியவர் உடனடியாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். தாக்குதல் குறித்த காரணங்கள் இன்னமும் விசாரணையில் தெரிவிக்கப்படவில்லை. ஆனாலும் கொலை செய்யப்பட்ட பாதிரியார், அனைவரின் அன்புக்கும், மதிப்புக்கும் உரியவர் என அவரது நண்பர்களால் தெரிவிக்கப்பட்டது. (த-ரி4)



# சிறப்பாக நடைபெற்றது ஒஸ்கார் விருது வழங்கல்

லொஸ்ஏஞ்சல்ஸ், மார்ச் 1

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நேற்று, 88 ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் வைபவம் பெவெர்லி கில்டன் ஹொட்டலில் நடைபெற்றது. திரைப்படத் துறையில் உலக அளவில் மிக உயரிய விருதாக ஒஸ்கார் விருது கருதப்படுகின்றது. 150 பேர் விருதுக்குத்தகுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். த ரெவனன்ட், ஸ்பொட்லைட், மாட் மக்ஸ், பேரி ரேட், த மார்-யன் என்றதிரைப்படங்கள் அதிகமான விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

த ரெவனன்ட் திரைப்படத்துக்காகச் சிறந்த நடிகருக்கான விருதை லியோனார்டோ டிக்காப்ரியோ பெற்றுக்கொண்டார். பல [illegible] பெற்றுக்கொண்டார். இவர் டைட்டானிக் திரைப்படத்தில் கதாநாயகனான நடித்தவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். அவர் எடுத்துக் கொண்ட பாத்திரங்கள், அவரது திறமைகள் சினிமா விமர்சகர்களால் பெரிதும் பேசப்பட்டவை. பல ஆண்டுகள் ஒஸ்கார் பட்டியலில் இவரது பெயர் இடம்பெற்றிருந்தும் இம்முறையே அவர் வெற்றி பெற்றுள்ளார்.

அலெஜான்ட்ரோ ஜி இன்னாட்டுரு, தரெவனன்ட் திரைப்படத்துக்காக சிறந்த இயக்குநருக்கான விருதைப் பெற்றார். 'ரூம்' திரைப்படத்துக்காக பிரி லார்சன் சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றார். சிறந்த அனிமேஷன் திரைப்படமாக 'இன்சைட் அவுட்' விருதைத் தட்டிச் சென்றது. (த-ரி4)



இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரிட்டன் இயக்குநர் ஆசிப் கபாடியா, ஆமி எனும் ஆவணப் படத்துக்காக ஒஸ்கார் விருதைப் பெற்றார்.
எ சேள் இன் த ரிவர் என்னும் ஆவணக் குறும்படத்துக்காகப் பாகிஸ்தானைச் சேர்ந்த ஷர்மீன் ஒபெய்ட் ஒஸ்கார் விருதைப் பெற்றார். (த-4ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்



## மேடம்

*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் குறித்து (08.01.2016-25.07.2017) மேட ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி நேற்றைய உதயனின் 16ஆம் பக்கத்தில் வெளியான விவரங்களின் தொடர்ச்சி*

மகளின் திருமணத்துக்கான வெளியில் கடன் வாங்க வேண்டி வரும். உறவினர், நண்பர்கள் மத்தியில் உங்களைப் பற்றிய விமர்சனங்கள் அதிகமாகும். எதிர்மறை எண்ணங்கள் அதிகமாகும். கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். உணவு விடயத்தில் கட்டுப்பாடு அவசியம்.

நீண்ட நாளாக போகவேண்டுமென்று நினைத்திருந்த குலதெய்வக் கோயிலுக்கு குடும்பத்தினருடன் சென்று நேர்த்திக் கடனைச் செலுத்துவீர்கள். வேற்றுமதத்தவர்கள், பிற மொழியினரால் திடீர் திருப்பம் உண்டாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை அறிந்துக் கொள்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும்.

**ராகுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

உங்களின் பூர்வ புண்யாதிபதியான சூரியனின் உத்திரம் நட்சத்திரம் முதல் பாதத்தில் 08.01.2016 முதல் 10.03.2016 வரை ராகுபகவான் செல்வதால் இக்கால கட்டத்தில் மாறுபட்ட யோசனைகள் உதயமாகும். வீட்டில் தள்ளிப் போன சுப நிகழ்ச்சிகளெல்லாம் அடுத்தடுத்து நடைபெறும். தாழ்வு மனப்பான்மையிலிருந்து விடுபடுவீர்கள். பிள்ளைகள் தங்கள் தவற்றை உணருவார்கள். அவர்களின் கல்வி, வேலை, திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் வெற்றியடையும். அரசால் அனுகூலம் உண்டு. பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் சாதகமாகும்.

ராகு பகவான் உங்கள் தன-சப்தமாதிபதியான சுக்ரனின் பூரம் நட்சத்திரத்தில் 11.03.2016 முதல் 15.11.2016 வரை செல்வதால் திருமணம் தள்ளிப் போனவர்களுக்குக் கூடி வரும். மனைவியின் ஆரோக்கியம் சீராகும். விலகிச் சென்ற சொந்த-பந்தங்களும் இனித் தேடி வருவார்கள். நெடுநாள் கனவான இருந்த வீடு, வாகனம் வாங்கும் ஆசை இப்போது நிறைவேறும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

கேதுவின் மகம் நட்சத்திரத்தில் 16.11.2016 முதல் 25.7.2017 வரை ராகுபகவான் செல்வதால் இந்தக் காலகட்டத்தில் எதிலும் நம்பிக்கை யின்மை, சிறு சிறு விபத்துக்கள், ஏமாற்றங்கள், இழப்புகள் மற்றும் உறவினர்கள் மத்தியில் மனக் கசப்புக்கள் வந்து நீங்கும். உடம்பில் இரும்புச் சத்துக் குறைபாடு ஏற்படக் கூடும். கை, கால் மரத்துப் போகும். பண விரயங்களும் வரும். கன்னிப் பெண்களே! காதல் கசந்து இனிக்கும். நல்லவர்களின் நட்பால் முன்னேற்றம் உண்டாகும். பெற்றோருக்கு எதிராக எதுவும் செய்துகொண்டிருக்க வேண்டாம். எந்த விடயமாக இருந்தாலும் பெற்றோருடன் அல்லது சகோதரங்களுடன் பகிர்ந்துக் கொள்வது நல்லது. உயர்கல்வியில் சேரும்போது உங்களுக்கு ஏற்ற சரியான பிரிவைத் தேர்ந்தெடுப்பது நல்லது.

**மாணவ, மாணவிகளே!**

விடைகளை எழுதிப்பாருங்கள். பொழுதுபோக்குகளை பிறகு பார்த்துக்கொள்ளலாம். படிப்பில் கொஞ்சம் கவனம் செலுத்தலாமே! இசை, ஓவியம், கட்டுரைப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெறுவீர்கள். எதிர்பார்த்த கல்வி நிறுவனத்தில் போராடியே சேர வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

**அரசியல்வாதிகளே!**

தலைமையைப் பற்றி விமர்சனம் செய்து கொண்டிருக்காமல், தொகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பாருங்கள். சகாக்களுக்கு மத்தியில் மதிக்கப் படுவீர்கள். அண்டை அயலாருடன் குடும்ப விடயங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டாம்.

**கலைத்துறையினரே!**

சின்னச்சின்ன வாய்ப்புகளை கடந்து, இப்போது பெரிய வாய்ப்புகளும் வரும். சம்பள விடயத்தில் இறுக்கமாக இருங்கள்.

**விவசாயிகளே!**

வண்டுக்கடி, பூச்சி மற்றும் எலித்தொல்லை நீங்கி விளைச்சல் கூடும். தானிய வகைகள், மூலிகை வகைகளால் ஆதாயம் பெறுவீர்கள்.

**வியாபாரிகளே!**

விளம்பர யுக்திகளைக் கையாண்டு இலாபம் ஈட்டுவீர்கள். வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள். ஆனால் முன்பின் அனுபவமில்லாத தொழிலில் சிலரின் தவறான அறிவுரையால் முதலீடு செய்து நட்டப்பட வேண்டாம். நண்பர்களின் உதவியுடன் கடையை விரிவுப்படுத்தி, அழகுப்படுத்துவீர்கள். பிளாஸ்ரிக், மூலிகை, துரித உணவகம், வகைகளால் இலாபமடைவீர்கள். அரச கெடுபிடிகள் வந்து போகும். பங்குதாரர்களுடன் அனுசரித்துப் போங்கள்.

**உத்தியோகத்தர்களே!**

வேலைச்சுமை அதிகமானாலும் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். திறமைகளை வளர்த்துக் கொள்ள வாய்ப்புக் கிட்டும். (தொடரும்)

---

த.வி.வெங்கடேஸ்வரன்

# குழந்தையின் "தத்தக்கா, பித்தக்கா" ஓட்டம் தப்பும் தவறுமான முயற்சி அல்ல

சின்னக் குழந்தைகள் நடப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? கையை விரித்து முன்னும் பின்னும் அசைத்தபடி, நீரில் மிதக்கும் பந்தைப் போலத் தலையை அங்கும் இங்கும் ஆட்டியபடி நிலத்தில் காலை வைத்துத் "தத்தக்கா பித்தக்கா" என்று ஓடுவது பார்க்கவே கொள்ளை அழகுதான். பெரியவர்களால் லாவகமாகவும் நேர்த்தியுடனும் ஓட முடிகிறது. ஆனால் குழந்தைகளின் ஓட்டம் வேடிக்கையாக இருப்பது ஏன்? பூங்காவில் தனது இரண்டு வயதுக் குழந்தை அங்கும் இங்கும் ஓடுவதை ரசித்துக் கொண்டிருந்த விஞ்ஞானி ஆசர்வூட்டுக்கு இந்தக் கேள்வி தோன்றியது.

**மழலை ஓட்டம் அறியாமையா?**

உயிர்கள் எப்படி இயங்குகின்றன என்று ஆராய்ச்சி செய்பவர் அவர். நடை பயிலும் குழந்தையின் இயக்கம் நேர்த்தியில்லாத ஆரம்ப நிலை என்றுதானே எல்லோரும் நினைப்போம். ஆனால் அறிவியல் வெறும் நினைப்பு அல்ல. இந்தப் பொதுவான நம்பிக்கையைச் சோதனை செய்து பார்த்துவிடுவது என்று அவர் தீர்மானித்தார் .

இங்கிலாந்தில் உள்ள ஹட்பில்டு ரோயல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் தன்னுடன் பணிபுரியும் தட்சனா ஹூபெல் (Tatjana Hubel) என்பருடன் இணைந்து ஆராய்ச்சியைத் தொடங்கினார். இவர்கள் இருவரும் ஒன்றிலிருந்து ஐந்து வயது உடைய தமது இரண்டு மகள்மார் உட்பட 18 குழந்தைகளின் ஓட்டங்களை ஆராய்ச்சி செய்தனர். சமீபத்தில் இவர்களின் ஆய்வு முடிவுகளை, உயிரியல் பரிசோதனை சஞ்சிகை (ஜேர்னல் ஒ எக்ஸ்பிரிமெண்டல் பையாலாஜி) எனும் ஆய்வு இதழ் வெளியிட்டுள்ளது.

பரிசோதனையில் பங்கு பெற்ற குழந்தைகளுக்கு எந்த மாதிரி ஓட வேண்டும் என்று எதுவும் சொல்லாமல் இயல்பாக ஓடவிட்டுச் சோதித்தனர். சோதனை ஓட்டப் பாதையில் குழந்தையின் பெற்றோரில் ஒருவரை ஓடவிட்டு அதே வேகத்தில் கூடவே ஓடும்படி செய்தனர். வெவ்வேறு வேகத்தில் குழந்தைகளை ஓடவைத்தும் ஆராயப்பட்டது. குழந்தைகளின் கை, கால்களில் பிரதிபலிக்கும் ஒட்டுப் புள்ளிகளைப் பொருத்திக் கமராக்களைக் கொண்டு படம் பிடித்தும், கை-கால் இயக்கத்தை ஆராய்ந்தனர். அதே போல பாதத்தில் விசையை அளவிடும் உணர்வியைப் பொருத்தி எத்துணை விசையுடன் குழந்தைகளின் பாதங்கள் தரையை முத்தமிடுகின்றன எனவும் அளவிட்டுத் தகவல்களைச் சேகரித்தனர். ஒப்பிட்டுப் பார்க்க ஐந்து வயதுக் குழந்தைகளின் இயக்கங்களையும் அளவு எடுத்தனர்.

**பெண்டுலமும் பிஸ்டனும்**

ஆய்வுத் தரவுகளைத் திரட்டி ஆராய்ந்த அசர்வூட் பெரும் புதிரைச் சந்தித்தார். நேர்ப் பாதையில் செல்லும் மனிதரின் ஓட்டத்தைத் தலைகீழாய் இயங்கும் பெண்டுலத்தின் இயக்கத்துடன் ஒப்பிட்டு இதுவரையும் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வந்தனர். இந்தப் பெண்டுல இயக்க மாதிரியோடு குழந்தைகளின் இயக்கத்தை, அசர்வூட் சேகரித்த ஆய்வின் விவரங்களைக் கொண்டுப் பொருத்திப்பார்க்கமுடியவில்லை. ஒரே ஒரு தவறு இருந்தது. கால அவகாசம். ஓட்டத்தின் இயக்கத்தில் இரண்டு தரவுகளுக்கும் இடையே பெரியவர்களைவிட அதிகமான கால இடைவெளியில் குழந்தைகளின் கால்கள் தரையைத் தொட்டபடி இருந்தன.



குழம்பிப்போனார் அசர்வூட். ஒரு புதுமையான சிந்தனைக்கு வந்தார். இதுவரையும் பின்பற்றிய தலைகீழ் பெண்டுலம் மாதிரியைக் கைவிட்டார். ஓட்டத்தின் இயக்கத்தில் கால்கள் பிஸ்டன் போல இயங்கி விசை தருவதான மாதிரியைக் கொண்டு ஆராய்ந்தால் இந்தப் புதிரிலிருந்து விடுபடலாம் எனக் கண்டார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவம் வாழ்க்கை நெறி; ஆலயங்கள் தெய்வீக விஞ்ஞானம்

செ.உமாசுதன்

மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு அவசியமானது தெய்வ நம்பிக்கை. அதற்கடுத்தது தன்னம்பிக்கை. தெய்வ நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் ஓர் பறவையின் இரண்டு சிறகுகள் போன்று முறையாக அவனை பறக்க அல்லது வாழ வைப்பவை. அந்த வகையிலே ஆகமங்களும், சிவாகமங்களும், திருமுறைகளும் தெய்வ நம்பிக்கையையும் தன்னம்பிக்கையையும் மனிதனுக்கு ஊட்டி, சிவ தர்மத்தை, அறத்தை மனிதன் முறையாக பேணி சரியாக வாழ்வதற்கான ஓர் முறைமையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

சிவாகமங்களிலே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்களுக்கூடாகச் சொல்லப்பட்ட உண்மைகள், திருமுறைகளிலே இலக்கியமாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

இறை அருளுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டு, இறையருளுக்கு எம்மை வழிப்படுத்துகின்ற வகையிலே, ஆற்றுப்படுத்துகின்ற வகையிலே இந்த இரு இலக்கியங்களும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. அந்த வகையிலே சைவம் என்பது வாழ்வியல் நெறி. பல் சமயங்களும் இருப்பது நீதியென்ற நிலையிலே அவற்றை ஏற்று நடக்கக்கூடிய நல்லறத்தைக் கொண்டு பின்னைப் புதுமைக்கும், முந்தைப் பழமைக்கும், நிலைபேற்றுக்கும் காரணமாக இருப்பது சைவம். சிவ சம்பந்தமானது சைவம். சிவ சம்பந்தம் என்பது மங்களம். மனிதனை மங்களகரமாக்குவது அதாவது மனிதனை மங்கள நிலைப்படுத்தி, என்றும் இன்ப வாழ்வு வாழ, ஆற்றுப்படுத்துகின்ற வகையிலே இந்தஆகமங்களும்திருமுறைகளும்விளங்குகின்றன.

அந்த வகையிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை, சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும் என்ற கருப்பொருளை முன்னிலைப்படுத்தியும், தமது துறை சமூகத்தை நோக்கி பயணிக்கின்றது என்பதை தெளிவுபடுத்தும் விதமாகவும், ஏற்பாடு செய்த முதலாவது அனைத்துலக சைவ மாநாட்டின் நிகழ்வுகள் கடந்த 12 ஆம்,13 ஆம்,14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் சிறப்புற இடம்பெற்றிருந்தன.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை ஒழுங்கமைத்திருந்த இந்த முதலாவது அனைத்துலக சைவ மாநாடானது சிறப்பாக நடைபெற்றிருந்தது. இலங்கையைச் சேர்ந்த கல்வியியலாளர்களும் ஆய்வாளர்களும், வெளி நாடுகளைச் சேர்ந்த பல கல்வியியலாளர்களும் இந்த மாநாட்டில் தமது காத்திரமான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்திருந்தனர். இளந் தலைமுறையினர் சைவத்தின் மீதும் தமிழின் மீதும் ஆர்வமற்றிருக்கின்றார்கள் எனப் புலம்புவதை விடுத்து, இளந் தலைமுறையினருக்கும் தம் சைவ சமயம் சார் அறிவை விருத்தி செய்ய நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவினர் இடமளித்திருந்தமை பாராட்டுக்குரியது. இளம் ஆய்வாளர்களுக்கும் மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க போதிய இடமளிக்கப்பட்டிருந்தது. மாணவர்களைவிட விரிவுரையாளர்கள் துடிப்புடன் செயலாற்றியமையை அவதானிக்க முடிந்தது.

சைவ சமயம்சார் கொள்கைகளைப் பிற்போக்குச் சிந்தனைகள் என்ற போர்வையில் புறந்தள்ளும் இன்றைய காலகட்டத்தில், சைவசமயம்சார் இலக்கியங்களை மீள் வாசிப்புக்கு உட்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இந்து சமயம்சார் கொள்கைகளில் பொதிந்துள்ள மெஞ்ஞானக் கருத்துக்கள் எவ்வாறு இன்றைய அறிவியலுடன் ஒன்றிணைகின்றன என்பதைப் புலப்படுத்தும் ஆய்வுகள் விரிவடைய வேண்டியது அவசியமானதாகும். தொடரும் காலங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை தனது அனைத்துலக சைவ மாநாட்டை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அவற்றில் முற்போக்கான ஆய்வுகளுக்கும் இடமளிக்க வேண்டும்.ஏனைய பல்கலைக்கழக கல்வியியலாளர்களும் இதனை, யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறைசார் மாநாடாக நோக்காது, சைவ சமயம்சார் மறு மலர்ச்சிக்காக தூர நோக்குச் சிந்தையுடன் செயற்படும் நிகழ்வு எனச் சிந்தித்து ஒத்தாசை புரியவேண்டும். சைவ உலகும் சைவ மக்களும் பேராதரவு வழங்க வேண்டும்.

கலாசாரச் சீர்கேடுகளுக்குள் சிக்கித் தவிக்கும் எமது சமூகத்தின் போக்கை மாற்றியமைக்க இவ்வாறான மாநாடுகள் அவசியமாகின்றன என்கிறார் வவுனியா சேமமடுவூரைச் சேர்ந்த சிவகேசவன். இவர், நக்கீரர் அருளிய கயிலைபாதி காளத்திபாதி திருவந்தாதி தொடர்பான ஓர் ஆய்வை இந்தச் சைவ மாநாட்டிலே முன்வைத்துப் பேசினார். இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறையிலே பட்டக் கல்வியை மேற்கொண்டு வருகின்ற விடுகை வருட மாணவன்.

சைவசமயம்சார் சிறப்புமிகு இலக்கியங்களாகப் பன்னிரு திருமுறைகள் விளங்குகின்றன. சைவசமயம்சார் கருத்துக்களைத் தெளிவாக விளக்கும் இலக்கியங்களாக இவற்றை அடையாளப்படுத்த முடியும். தமிழில் உள்ள 96 வகைப் பிரபந்தங்களுள் பெரும்பாலானவை 11 ஆம் திருமுறையில் உள்ளடக்கப்பட்டிருப்பதைக் காணலாம். 11 ஆம் திருமுறையில் பன்னிரண்டு(12) ஆசிரியர்கள் பாடிய நாற்பது (40) நூல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நக்கீரதேவ நாயனார் இயற்றிய கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி எனும் நூலும் உள்ளடங்குகிறது. இந்த நூல் குறித்த ஆய்வாகவே அவரது கட்டுரை அமைந்திருந்தது.



இதுவரை பொதுமக்கள் அறியாதிருந்த பல விடயங்களை நுணுகி ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கம் என்பதற்கு இது மிகச் சிறு உதாரணம்.

கால வகுப்பின்படி நோக்கும்போது பன்னிரு திருமுறை ஆசிரியர்களுள் காலத்தால் முந்தியவர் நக்கீரர். ஆனால், இவர் தமது காலத்துக்குப் பிற்பட்ட நூல்கள் சைவவுலகில் பெற்ற சிறப்பிடமும், அவைமீதான வாசிப்பும், இவர்தம் நூலுக்குக் காணப்படாமை கவனத்துக்கு உரியது.

நக்கீரரின் கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதியானது பின்நாள்களில் தேவாரத் திருமுறைகள் முதலிய நூல்கள் முன்வைத்த கருத்துக்களை முற்கூட்டியே பதிவு செய்திருப்பதைக் காணலாம். சைவத் திருமுறைகளுக்கெல்லாம் முன்னோடி இலக்கியம் இந்த நூலே. இருப்பினும், சைவவுலகு இந்த நூலுக்குரிய இடத்தை வழங்கத் தவறிவிட்டதால், இந்த நூல் குறித்த தெளிவை ஏற்படுத்த இவ்வாய்வு அவசியமாயிற்று.

சமயவியல், தத்துவவியல், கலையியல், சமுதாயவியல், மொழியும் இலக்கியமும், அறவியலும் அறிவியலும் என்பதான விடயதானங்களை முன்னிலைப்படுத்திய மூன்று சமகால அமர்வுகளில் ஒன்பது அரங்குகளில் எண்பத்தியொரு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை சைவ மாநாட்டின் சிறப்பம்சம். சிவாகமங்களில் சிவாச்சார்ய இலட்சணங்கள், சிவாகமங்களின் அடிப்படையில் காலம், இடம், அளவு என்பவற்றின் முக்கியத்துவம், திருமுறைகளில் அருளியல், இலங்கையில் ஆகம மரபில் அமைந்த இந்து ஆலயங்களின் தோற்றம், திருமுறைகளை மையப்படுத்திய இறை வழிபாட்டில் மலர்கள், சைவ வாழ்வியல் சிந்தனைகள் என்பதாக அவை அமைந்திருந்தன.

அத்தனை சமர்ப்பணங்களும் சிந்தனைக்குரித்தாகின. இலக்கியமாகி, சைவ பண்பாட்டின் அசைவுகளையும் நல்லிணக்கத்துக்கான பதிவுகளையும், பாதைகளையும் திருமுறைகள், சிவாகமங்கள் என்றாகி ஆய்வு நிலைக்கு உட்படுத்தியிருந்தன. ஆத்மார்த்தமான இறை சிந்தனையையும் ஆற்றுப்படுத்தலையும் தந்திருந்தன.

சைவ மாநாட்டின் பக்க நிகழ்வுகளாக ஆரம்ப நாளன்று இடம்பெற்ற இராமநாதன் நுண்கலைப்பீட நடனத்துறை மாணவர்களின் பஞ்சபுராண ஆடல் நிகழ்வு திருமுறைகளின் பக்தி நயத்தை, இறையருளின் சுரத்தலை அழகிய ஆடல் அசைவுகளின் நர்த்தனங்களோடு பார்வையாளர்களுக்கு அருளாய் பொழிந்திருந்தது. தமிழ்நாடு சிதம்பர தேவஸ்தான தீட்சிதர் பிரம்மஸ்ரீ கணேச பரமேஸ்வரனின் ஆசியுரையும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்துணைவேந்தர் பேராசிரியர் பாஸ்கரனின் ஆதார சுருதி உரையும் நிகழ்வின் கலசமாய் அமைந்திருந்தன.

நிறைவு நாளன்று இடம்பெற்றிருந்த திருநெறிய தமிழ், மேன்மைகொள் சைவ நீதி என்பதான சிறப்புரைகளும் யோக அசைவுகளும் நடனத்துறையினர் வழங்கிய நாட்டிய நாடகமும் சைவத்தின் பக்தி இன்பத்தை ஆன்மமாய் எம்மூடு பற்ற வைத்தன. சைவ நீதியை மேன்மை கொள்ளச் செய்தன. பரிபூரணத்தின் நிறைவை மலர் தூவி ஆசீர்வதித்தன. சைவ மாநாட்டின் மகத்துவத்தை உயர்த்தின; உணர்த்தின.

> எங்கே உண்மையான ஞானம் இருக்கிறதோ எங்கே இறைவன் மேலானவன், நான் அவனது அடிமை, எல்லாமே அவனைச் சார்ந்தது என்கின்ற பூரண சரணாகதி நிலவுகிறதோ அவற்றின் விளைச்சல் தான் பக்தி. இதனை உணர்ந்து கொள்வோம். எல்லோரும் இறைவனிடம் பக்தி கொண்டு இறைவனுடன் ஒன்று படுவோம். பக்திதான் மனிதனைப் புறத்துவப்படுத்துகிறது. எம்மை ஒன்றுபடுத்துவது. நான் வேறு, அவன் வேறு என்றெண்ணாது ஒருமைத்துவத்துடன் வாழ்வோம்.

ஆன்மிகம் என்பது ஒருமைத்துவம். இறைவனை அணுகுவதற்கு முதன்மையான வழி. அதாவது ஞானத்தின் விளைச்சல்தான் பக்தி. எங்கே உண்மையான ஞானம் இருக்கிறதோ எங்கே இறைவன் மேலானவன், நான் அவனது அடிமை, எல்லாமே அவனைச் சார்ந்தது என்கின்ற பூரண சரணாகதியின் விளைச்சல் தான் பக்தி. இதனை உணர்ந்து கொள்வோம். எல்லோரும் இறைவனிடம் பக்தி கொண்டு இறைவனுடன் ஒன்றுபடுவோம்.

பக்தி தான் மனிதனை- தனித்துவப் படுத்துவது. நம்மை ஒன்றுபடுத்துவது. நான் வேறு அவன் வேறு என்றெண்ணாது ஒருமைத்துவத்துடன் வாழ்வோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் ஆபத்தான விலங்கு!

■ நக்கீரன்

பசுமைப்பாடசாலை. இது வகுப்பறைகளே இல்லாத திறந்தவெளிப் பாடசாலை. வானமே கூரை. திசைகளே சுவர்கள். எமது புவிக்கோளமே பாடநூல். இந்தப் பாடசாலைக்கு மனிதர் தவிர்த்த மற்ற உயிரினங்கள் தான் ஆசிரியர்கள். இவர்கள்தான் சுற்றுச் சூழல் பற்றி எளிய தமிழில்எமக்குச் சொல்லித்தரப்போகிறார்கள். வாருங்கள் குழந்தைகளே! குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் வாருங்கள், குழந்தைகளாய் மாறுங்கள். பசுமைப் பள்ளியில் பயிலுவோம்.



எங்கிருந்தோ கூவிச் சூழலை இனிமையாக்கும் ஓர் ஆண் குயில். வண்ணத்துப் பூச்சிகளைப் போலவே பல நிறங்களில் ஆடையணிந்த குழந்தைகள். அவர்கள் அனைவரும் பசுமைப் பாடசாலையின் குழந்தைகள். இந்தப் பாடசாலைக் குழந்தைகளுக்குச் சீருடை இல்லை. மனப்பாடக் கல்வியும் இல்லை. புத்தக மூடை இல்லவே இல்லை. பிற கென்ன? ஒரே ஆட்டம் பாட்டம் கொண் டாட்டம்தான்.

## பசுமைக் கல்வி - 1

குழந்தைகளின் நடுவே பெரிய பெட்டி ஒன்று இருக்கிறது. இந்தப்பெட்டிக்குள்தான் இவர்களுக்கான தொடக்கப் பாடம் இருக்கிறதாம். புதிராக இருக்கிறதே! பெட்டிக்குள் என்ன பாடம் இருக்கும்? தெரியவில்லை. ஆனால், பெட்டியின் மேலே ஓர் அறிவிப்பு ஒட்டப்பட்டு இருக்கிறது. அது என்னவென்று பார்க்கலாம்.

எச்சரிக்கை! உலகிலேயே மிக ஆபத்தான விலங்கு இப்பெட்டியின் உள்ளே இருக்கிறது. ஒவ்வொருவரும் வரிசையில் வந்து மூடியைத் திறந்து பார்க்கவும்.

அறிவிப்பைப் பார்த்ததும், குழந்தைகளுக்குக் கொஞ்சம் நடுக்கம்தான். ஆனாலும், ஆர்வத்தைத் தடுக்க முடியாதே! மற்றவர்கள் கொஞ்சம் அச்சத்துடன் விலகி நிற்க, மூடியை முதலில் திறக்க முன் வருகிறாள் யாழினி. அவளுக்குத் துணிச்சல் அதிகம்.

மூடியைத் திறக்கிறாள். அஞ்சியபடியே எட்டிப் பார்க்கிறாள். ஒரு நொடிதான், அச்சப்பட்ட முகத்தில் இப்போது திகைப்பு. அடுத்த கணம் சிரிப்பு. ஆபத்தான விலங்கைப் பார்த்து எவராவது சிரிப்பார்களா? இந்த யாழினி சிரிக்கிறாளே?

அடுத்து நின்றிருந்த குழந்தை ஆவலுடன் கேட்கிறது. ''உள்ளே என்ன விலங்கு இருக்கு யாழினி?''

யாழினி பதில் எதுவும் சொல்லவில்லை. பெட்டியின் கீழே ஒட்டப்பட்டிருந்த இன்னொரு அறிவிப்பைச் சுட்டிக்காட்டினாள்.

"விலங்கைப் பார்த்த வர்கள் என்ன விலங் கென்று எவரிடமும்சொல்லக்கூடாது."

ஆர்வத்துடன் அடுத்த குழந்தையும் மூடியைத் திறக்கிறது. அந்தக் குழந்தையின் முகத்திலும் முதலில் திகைப்பு, அடுத்து சிரிப்பு. அந்தக் குழந்தையும் உள்ளே இருப்பது என்ன என்று அடுத்தவரிடம் சொல்லவில்லை. அடுத்தடுத்து வந்த குழந்தைகள் அனைவருமே திறந்து பார்த்துவிட்டு, சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அது என்ன ஆபத்தான விலங்கா? இல்லை வேடிக்கையான விலங்கா?

எமக்கும் ஆர்வம் பொங்குகிறதே? பெட்டியைத் திறந்து பார்ப்போமா? அருகில் சென்று மெல்லப் பெட்டியைத் திறக்க, உள்ளே ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி.

அந்த விலங்கு நாம்தானா?

முகம் வெட்கத்தால் விரிகிறது.

உண்மையில், இந்த உலகில் ஆபத்தான விலங்கு மனிதன்தான். இந்தப் புவியில் எல்லா உயிரினங்களும் தோன்றிய பிறகு கடைசியில் தோன்றிய இனம்தான், மனித இனம். ஆனால், தனக்கு முன்னர் தோன்றிய அனைத்து உயிரினங்களையும் ஒன்று விடாமல் அழித்துக் கொண்டிருப்பதும் மனித இனம்தான். எனவே ஆபத்தான விலங்கு என்பது சரிதானே?

# வர்ணம் தீட்டுவோம்... வாங்க....





# வரலாற்றில் இன்றைய தினம்

1562 - 23 கியூகொனட் மக்கள் கத்தோலிக்கர்களால் வஸ்ஸியில் படுகொலை செய்யப்பட்டதுடன் பிரான்ஸில் சமயங்களின்போர் தொடங்கியது.

1790 - அமெரிக்காவின் முதலாவது சனத்தொகைக் கணக்கெடுப்பு அங்கீகரிக்கப்பட்டது.

1815 - எல்பாவிலிருந்து நாடுகடத்தப்பட்ட நெப்போலியன் பிரான்ஸிற்கு மீண்டும் வந்தான்.

1872 - உலகின் முதலாவது சரணாலயமாக யெலோ ஸ்ரோன் தேசிய சரணாலயம் தொடங்கப்பட்டது.

1873 - நியூயோர்க் இலியனில் முதலாவது செயற்பாட்டு தட்டச்சு இயந்திரம்ஈ.றெமிங்டன் அன்ட்சன்ஸ்உற்பத்திசெய்யப்பட்டது.

1896 - ஹென்றி பீக்கியூர் அவர்களால் றேடியோ கதிரியக்கம் கண்டுபிடிக்கப்பட்டது.

1901 - ஆஸ்திரேலிய இராணுவம் உருவாக்கப்பட்டது.

1912 - பறக்கும் விமானத்திலிருந்து பாரசூட்டில் குதித்த முதலாவது ஆளானார் அல்பேர்ட்பெரி.

1946 - இங்கிலாந்து வங்கி தேசிய மயமாக்கப்பட்டது.

1947 - சர்வதேச நாணய நிதியம் தனது நிதி நடவடிக்கைகளைத் தொடங்கியது.

1953 - சோவியத் பிரதமர் யோசப் ஸ்டாலின் மாரடைப்பு ஏற்பட்டு மயக்கமடைந்தார். 4 நாள்களின் பின்னர் மரணமானார்.

1954 - அணுஆயுதசோதனை - கஸல் பிராவோ எனும் 15மெகா தொன் நிறையுடைய ஐதரசன் குண்டு பசுபிக்சமுத்திர பிகினி அடொல் இல் வெடிக்க வைக்கப்பட்டதில் என்றுமில்லாதவாறு தீங்கிழைக்கும் கதிர்வீச்சு பரவல் அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்டது.

1961 - அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப்.கென்னடியால் அமைதிப்படை ஸ்தாபிக்கப்பட்டது.

1961 - உகண்டா சுயஆட்சி பெற்று முதலாவது தேர்தலை நடத்தியது.

1974 - வோட்டர்கேற் ஊழல்; நீதிக்குத் தடையாகச் சதித் திட்டம் தீட்டியதாக 7 பேர் மீது குற்றச்சாட்டு.

1995 - மலையக மக்கள் முன்னணி அரசில் கட்சியாக பதிவுசெய்யப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு.

1998 - உலகளாவிய ரீதியில் ஒரு பில்லியன் டொலர் சம்பாதித்த முதற் திரைப்படமாக டைட்டானிக் சாதனை.

2002 - ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஊடுருவல்; கிழக்கு ஆப்கானிஸ்தானில் அனகொண்டா நடவடிக்கைஆரம்பம்.

2003 - சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தனது தொடக்க அமர்வை 'ஹேய்க்கில் நடத்தியது.

2002 - வவுனியாவில் பொங்குதமிழ் நிகழ்வு. அலை அலையாக மக்கள் கூட்டம். அலங்கார ஊர்திகள் பவனி. தமிழர் அபிலாஷைகளை வலியுறுத்திக் கோஷங்கள்.

# சிந்திக்கச் சில நொடிகள்

## கேள்விகள்

1. ஜானியின் தாயாருக்கு மூன்று குழந்தைகள். மூத்தவன் பெயர் ஏப்ரல், இரண்டாமவன் பெயர் மே. மூன்றாவது குழந்தையின் பெயர் என்ன?
2. எவரெஸ்ட் சிகரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் உலகின் உயர்ந்த சிகரம் எது?
3. இரண்டடிக்கு, மூன்றடிக்கு, நான்கடிக்,குழியில் எவ்வளவு மண் இருக்கும்?
4. ஒரு ஓட்டப் பந்தயத்தில் இரண்டாவதாக வருபவனை நீ முந்தினால், நீ எந்த இடத்தில் இருப்பாய்?
5. ஒரு குடியானவனுக்கு ஒரு தளத்தில் மூன்று வைக்கோல் போர்களும், இன்னொரு தளத்தில் ஐந்து வைக்கோல் போர்களும் இருக்கின்றன. அவன் அவற்றை இன்னொரு தளத்தில் சேர்த்துவைத்தால் எத்தனை வைக்கோல் போர்கள் இருக்கும்.?

## பதில்கள்

1. ஜூன் அல்ல. ஜானிதான்.
2. எவெரெஸ்ட்தான். அதை யாரும் கண்டு பிடிக்கவில்லை. அது ஏற்கனவே இருந்தது.
3. குழியில் மண் ஏதும் இருக்காது. இருந்த மண் எடுக்கப்பட்டதால்தான் குழியானது.
4. இரண்டாவது இடத்தில். இரண்டாமவனை முந்தித்தான் அந்த இடத்துக்கு வந்தாய்
5. ஒரேயொரு வைக்கோல் போர்தான் இருக்கும். முதலாவது, இரண்டாவது தளத்தில் இருந்த வைக்கோலை மூன்றாவது தளத்தில் சேர்த்து ஒரு வைக்கோல்போராக வைப்பான்.

## விடுகதை

1. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?
2. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?
3. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?
4. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது- அவர்கள் யார்?
5. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம்- நான் யார்?

## விடைகள்:

1. சைக்கிள்
2. பட்டாசு
3. தராசு
4. எறும்புக் கூட்டம்
5. அஞ்சல் பெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபத்தை நிர்வகியுங்கள்



சி.நற்குணலிங்கம்

ஒரு மனிதனை மனமும், மூளையுமே இயக்குகின்றன. கோபம் மன உணர்வு சம்பந்தப்பட்டது. கோபத்தின் அடிநாதம் உணர்ச்சி வசப்படுவதேயாகும். பதற்றம், மனஉளைச்சல் என்பவற்றின் உடன் விளைவான கோபம், எம்முடைய இயல்பும் அல்ல; இயற்கையான குணமும் அல்ல.

கோபம் என்பது வைர அட்டிகை போன்றது. அதை எப்போதும் அணிந்திருந்தால் அதன் மதிப்புப் போய்விடும். வைரமா? என்ற சந்தேகமும் வந்து விடும் என அனுராதா ரமணன் என்பவர் கூறியுள்ளார். கோபம் என்பது சுய நலத்தின் மற்றும் நிறைவேறாத ஆசையின் வெளிப்பாடு. கோபம் வாயைத் திறக்கும். கண்களை மூடும்.

மனிதருக்கு கோபம் பல்வேறு காரணங்கள் கருதி ஏற்படுகின்றது. உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதால், பிணக்கு அல்லது பிரச்சினைகள் ஏற்படும்வேளை, பொருத்தமான முடிவை எடுக்க முடியாத சந்தர்ப்பத்தில், மற்றவர்களது மகிழ்ச்சியையும் ஆசீர்வாதங்களையும் ஏற்கமுடியாது மனம் பொறாமை கொள்வதால், ஏற்றுக்கொள்ள முடியாத வார்த்தைப் பயன்பாட்டின்போது, இன்னொருவரின் தூண்டுதல்களால், குடிபோதையின்போது, பழிவாங்கும் உணர்ச்சி மேலோங்கும்போது, மனம் சம நிலையிலிருந்து விலகும்போது, எதிர்மாறான விபரீதங்கள் உருவாகும்போது கோபம் ஏற்படுகின்றது. எமக்குக் கோபம் வருகிறதெனில், நாம் வேறு கோபம் வேறல்ல. நாமே கோபமாக மாறுகிறோம்.

கோபம் பல்வேறு பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கக்கூடியது. கோபம் உங்களுக்கு மட்டுமன்றி ஏனையோர்க்கும் எந்தவித நன்மையையும் செய்யாது. இது பலவீனமான சமூகத்தையே தோற்றுவிக்கும். கோபமடைபவர்கள் தமது சக்திகள் அனைத்தையும் இழந்துவிடுகிறார்கள். கோப உணர்வு மனதில் தோன்றினாலும், அதன் பாதிப்புகள் உடலிலும் ஏற்படுகின்றன. அதிகம் கோபப்படுபவர்களுக்கு கல்லீரலும் பித்தப்பையும் பாதிப்புக்குள்ளாகும். உடலில் பித்தத்தின் அளவு அதிகமாகும். தேவையற்ற உயிரியல் மாற்றங்கள் உடலில் உண்டாகி தலைவலி, மயக்கம், தலைச்சுற்று, வாய் உலர்தல், நீரிழிவு, இதயத்துடிப்பு, அல்சர் போன்ற நோய்கள் ஏற்படும்.

கோபம் ஏற்படும்போது 72 தசைநார்களுக்கு வேலை கொடுக்கின்றோம். கோபத்தால் உறவுகளில் விரிசல் ஏற்படும். அதிகமாகப் பேசினால் அமைதியை இழக்க நேரிடுவதுபோல் கோபமாகப் பேசினால் குணத்தை இழக்க நேரிடும்.

மனிதராகிய நாம் எடுத்ததற்கெல்லாம் ஆத்திரப்படுகிறோம். கோபத்தில் எதையெல்லாமோ செய்துவிடுகிறோம். இதனால் அன்பையும் பாசத்தையும் பொழிபவர்களை ஒரே நொடியில் இழந்து விடுகிறோம், எதிரிகளைச் சம்பாதித்து விடுகிறோம். கோபத்தால் கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளை, மாமன், மாமி - மருமக்கள் உறவு விரிசல் அடைவதை நாம் கண்முன்னே காண்கிறோம். கோபம் பிறர் உள்ளத்தை புண்படுத்தக்கூடியது.

கோபம், ஆர்வம், நம்பிக்கை, மனஅமைதி, இணங்கும் தன்மை என்பவற்றை அருகச் செய்துவிடும். கோபத்தில் ஞாபகமறதி நரம்பியல் தூண்டல்கள், முரட்டுத்தனமான வன்முறைத் தூண்டல்கள், பிரச்சினைகளைத் தீர்க்க இயலாமை, பழிவாங்கும் உணர்ச்சி, கசப்புணர்ச்சி, யோசிக்காமல் கண்டபடி பேசுதல் போன்ற பொருத்தமற்ற விடயங்களில் ஈடுபடுவர். இன்றைய இயந்திர வாழ்க்கைக் காலத்தில் எடுத்ததற்கெல்லாம் கோபமடைவதால் பலர் தமது வெற்றியை இழந்திருப்பதை நடைமுறை வாழ்க்கையில் காணமுடிகிறது.

இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்கள் அனைத்தும் நல்லவையே. நாம் பழகும் விதங்களால்தான் உயிரினங்கள் தத்தம் குணவியல்புகளை மாற்றியமைக்கின்றன. கோபத்தை அதிகமாக நாம் பிறர் மீது செலுத்தினால், அவர்களும் திரும்ப அதையே எமக்கும் வழங்குவார்கள் என நினையுங்கள்.

பொதுவாகக் கோபம் வரும்பொழுது சிலர் அதை வெளியே காட்டிவிடுவார்கள், சிலர் தங்களுக்குள்ளேயே அடக்கி வைத்துக் கொள்வார்கள். அடக்கிக் கொள்வதால் உளநோய்களும், வெளியில் காட்டி விடுவதால் உறவின் சுவர்களில் விரிசல்களும் ஏற்பட்டு விடுகின்றன. அதற்காகக் கோபத்தை அடக்கிக் கொள்ளவும்கூடாது. அதை வெளிக்காட்டுதலும் கூடாது. அதை நிர்வகிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். கோப உணர்வில் அன்பு மற்றும் இனிமைக் குணங்கள் என்பவற்றைப் பதிக்கவேண்டும். ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் உங்களுக்குப் பிடித்தவரோ அல்லது பிடிக்காதவரோ ஏதேனும் ஒரு தவறு செய்தால், மன்னிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். மன்னிப்புக் கொடுக்காத சந்தர்ப்பங்களில்தான் பகை உணர்வுகள் ஏற்படுகின்றன.

எல்லோரையும் அன்புடன் நேசிக்கும் இதயமும், கண்களும் வேண்டும். மன்னிக்கும் சுபாவமே கோபத்தைத் தணிக்கும் மருந்து. கோபத்தால் ஏற்படும் பிரதிகூலங்களை மனதில் நிறுத்துவதன் மூலம் கோபத்தை விலக்கிக் கொள்ளலாம். மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதன் மூலம் மனதை உற்சாகத்துடனும், நட்புணர்வோடும் வைத்திருக்கப் பழகுவதன் மூலம் கோபத்தை விலக்கிக் கொள்ளமுடியும். கோபத்தை ஒழித்துவிட அதன் தோற்றுவாயை இனங்கண்டு அதிலிருந்து செயற்படுதல்வேண்டும். வன்சொற்களை விலக்குவதன் மூலமும், நடுநிலையாக நடந்து கொள்வதன் மூலமும், மனதைத் தளரவிடாது நிதானமாகத் தீர யோசித்து சுயமாக முடிவெடுப்பதன் மூலமும், மனதுக்கு இதமளிக்கக்கூடிய வார்த்தைகளை உபயோகிப்பதன் மூலமும், கோபம் ஏற்படும்போது மனதை ஒருமுகப்படுத்தி அடக்கிப் புலனை வேறு நல்வழியில் செலுத்தி பொறுமையை கையாளுவதன் மூலமும் கோபத்தை ஒழிக்க முடியும்.

அதிக கோப உணர்ச்சி உள்ளோரை இனங்கண்டு அவர்களை ஆற்றுப்படுத்த வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு குடும்பத்தாரையும் சாரும். இல்லையேல் அவர்களும் அதை அனுபவிப்பதுடன் சமூகமும் கோப உணர்ச்சிக்கு வசப்பட நேரிடும்.

## தாழ்மை உயர்ச்சி தரும்




தாழ்மை, பணிவு, பரிவு என்ற சொற்கள் அடிமை நிலை என்ற அர்த்தம் கொண்டவையல்ல. நிறைகுடம் தளம்பாது என்பது போல, ஒரு முழுமையான மனிதனிடமிருந்து வெளிப்படும் பண்புகளே இவையாகும். தாழ்ச்சி சுயநலமற்றது. பணிவு, பரிவு, அன்பு, கருணையின் அடையாளங்கள். தாழ்ச்சி என்பது உயர் மதிப் பில் உள்ளவர்களுக்குப் புரியும் பணிவிடை என்று நினைக்கிறோம். மாறாக அடிமட் டத்தில் உள்ளவர்களின் தேவையறிந்து மனிதாபிமானத்துடன் பணிபுரியும்போது தாழ்ச்சி மேன்மை பெறுகிறது. அந்தப் பணி பிறரின் கவனத்தை ஈர்க்கின்றது.

கைவிடப்பட்ட சிசுக்களையும், தொழுநோயாளிகளையும் அரவணைத்து பராமரித்து உலகையே தன் அன்பால் ஆட்கொண்ட அன்னை தெரேசா, வைசூரி நோயால் பீடிக்கப்பட்ட கண்டி மக்களுக்கு பணிவிடை புரிந்த இலங்கையின் புனிதர் யோசப்வாஸ். தன்னையே துப்பாக்கியால் சுட்ட குற்றவாளியை சிறையில் சந்தித்து மன்னிப்பு வழங்கிய பாப்பரசர் புனித 2ஆம் அருள் சின்னப்பர் போன்ற பலர் தாழ்ச்சியால் உயர்வு பெற்றவர்களாவர்.

உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர், உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்காக அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தமது உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்.(மத்20:27-28)

இன்று நாம் எம்நிலை விட்டுக் கீழிறங்கிப் பணிபுரியப் பல சந்தர்ப்பங்கள் உள்ளன. போரினால் உறவுகளை இழந்த சிறார்கள், குடும்பங்கள் முதுமையில் வாடும் முதியோர், உணவு இன்றி , உடை இன்றி , உருமாறி இருக்கும் ஆதரவற்றோர், தனித்து விடப்பட்ட முன்னாள் போராளிக் குடும்பங்கள் எனப் பட்டியல் நீண்டு கிடக்கின்றது. இவர்களுக்குச் செய்யும் பணி இறைவனுக்கு புரியும் பணியாகும். தன்னைத் தாழ்த்துபவன் உயர்த்தப்பெறுவான்.

தெ.பெ.தாஸ்

# போரால் பாதிப்புற்ற தமிழரை வறுமையும் விடுவதாக இல்லை

அரசியல் பிரச்சினைகளும், அவை சார்ந்த சமகால நடைமுறைகளும் முக்கிய பேசுபொருளாக இருக்கின்றபோதும், மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை இவற்றையெல்லாம் விஞ்சிய நிலையில் காணப்படுகின்றது. எனினும், மக்களினதும், மக்கள்பிரதிநிதிகளினதும் கவனம் இவற்றில் நிலை கொண்டிருக்கின்றதா என்பது கேள்விக்குரியதாகவே இருக்கிறது.

உலக வங்கியின் அண்மைய ஆய்வுகளின் பிரகாரம், இலங்கையில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் பிர தேசங்கள் அதியுச்ச வறுமையின் பிடியில் சிக்கியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களிலும், கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும், ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டம் மற்றும் மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்திலும் அதிக வறுமை நிலவுவதாக உலக வங்கியின் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிங்களமக்கள் அதிகம் வாழும் மாவட்டங்களில் வறுமையால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக மொனராகலை மட்டும் அடையாளங்காணப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய வறுமைக்கோட்டு வீதமானது நாளொன்றுக்கு 1.50 டொலர் வருமானத்தைப் பெறுகின்ற குடும்பங்களைக் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ள நிலையில், இதனுடன் ஒப்பீடு செய்யும்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் வறுமை நிலையானது 28.8 சதவீதமாகவும், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் வறுமை நிலையானது முறையே 20.1 மற்றும் 12.7 சதவீதங்களாகவும் காணப்படுகின்றன.

அனைத்துலக வறுமைக்கோடானது, நாளொன்றுக்கு 2.5 டொலர் வருமானத்தை வரையறையாகக் கொண்டுள்ளது. இதனுடன் ஒப்பீடு செய்து நோக்கின், மேற்கூறப்பட்ட மூன்று மாவட்டங்களிலும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களின் சதவீதமானது முறையே 74.4, 60.9 மற்றும் 57.2 சதவீதங்களாகக் காணப்படுகின்றன.



மலைநாட்டின் வறுமை நிலையானது, இலங்கையின் தேசிய வறுமை நிலையின் பிரகாரம் 10.9 சதவீதமாகவும், அனைத்துலக வறுமைக்கோட்டின் பிரகாரம் 50.6 சதவீதமாகவும் காணப்படுகிறது.

உலக வங்கியால் மட்டக்களப்பு மாவட்டத்தின் வறுமை நிலை வரையறுக்கப்படாவிட்டாலும் கூட, அரசின் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் 2014ஆம் ஆண்டு அறிவித்தலின் பிரகாரம், அது 19.4 சதவீதமாகும்.

வடக்கு மற்றும் கிழக்கின் வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்களின் வயதெல்லையை நோக்குமிடத்து, உலக வங்கியின் ஆய்வின்படி 25 வயதுக்கு உட்பட்டவர்களில் 47 சதவீதமானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். வடக்கு, கிழக்கில் இந்தச் சதவீதமானது, 47 சதவீதமாகவும் ஏனைய மாகாணங்களில் இந்த வீதமானது 40 சதவீதமாகவும் காணப்படுகிறது.


குறிப்பாக இளையோர் மற்றும் கல்வியறிவுள்ள பெண்கள் போன்றோரின் தொழில்வாய்ப்பின்மை, தொழிலாளர் சந்தைக்கான தொடர்பாடலை பெற்றுக் கொள்ள முடியாமை போன்றவை வறுமை நிலை அதிகரிப்புக்கான காரணிகளாக இனங்காணப்பட்டுள்ளன. மலையகப் பகுதியில் மகப்பேற்று, இறப்பு ஆகியவை மிகவும் அதிகம் இடம்பெறுகின்றதாகவும் இந்த அறிக்கை சுட்டிநிற்கிறது.

இதேவேளை, தொழிற்சந்தைகளை அடைந்து கொள்வதற்கான வழிமுறைகளை அதிகரித்தல், கல்விகற்ற இளையோர் மத்தியில் தொழில் முயற்சிகளை அதிகரிப்பதுடன், இதன்மூலம் முன்னாள் போராளிகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பொருளாதாரம் சிறக்க வழிவகுத்தல் போன்ற பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், மலையக மக்களின் போசாக்கை அதிகரிப்பதற்குப் பல் தரப்பினரும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். இளையோர்கள் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படும்போது இவ்வாறான வறுமை நிலையை ஒழிக்க முடியும் எனவும் உலக வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மலையக மக்களின் இன்றைய நிலைமைகள் குறித்து நாடாளுமன்றத்தில் தமிழ் அரசியல் தரப்புகள் மட்டுமன்றி, மக்கள் விடுதலை முன்னணி போன்ற சிங்களக்கட்சிகளும் குரல்கொடுத்து வருகின்றமை பாராட்டுக்குரியது. முதலில் இவர்களது சம்பளப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வைக்காணவேண்டும். அடுத்து, தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தும் திட்டங்களை வழிநடத்தவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## மகளது படத்துக்காக பின்னணிக் குரலில் ரஜினி

தனுஷ் நடித்த 3, வை ராஜா வை படங்களை இயக்கிய ஐஸ்வர்யா - தனுஷ் அடுத்து "சினிமா வீரன்" என்ற படத்தை இயக்குகின்றனர். சினிமா மாஸ்ரர்கள் மற்றும் கலைஞர்கள் பற்றிய கதை படமாக உருவாகிறது. தமிழ் சினிமாக் கலைஞர்களுக்கு இது அர்ப்பணிக்கப்படுகிறது. இந்தப் படத்துக்கு ரஜினிகாந்த் குரல் கொடுக்கச் சம்மதித்திருக்கிறார். பெரும்பாலான மாஸ் ரர்களுடன் ரஜினி பணியாற்றி இருப்பதால், அவர்களுடன் நெருக்கமாக ரஜினி பழகி உள்ளார். அவர் குரல் தருவது பொருத்தமாக இருக்கும் என்று படக் குழுவினர் கூறினர். தனுஷ் தயாரிக்கிறார். கவிஞர் கபிலன் பாடல் எழுதுகிறார். ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

WhatsApp

## தொலைக்காட்சியில் விவசாயியின் பேட்டி

"உங்க ஆட்டுக்கு என்ன சாப்பிடக் கொடுக்கிறீங்க..?"
"கறுப்பு ஆட்டுக்கா..? வெள்ளை ஆட்டுக்கா..?!"
"வெள்ளைக்கு..!" "புல்லு.."
" அப்போ கறுப்புக்கு..?"
"அதுக்கும் புல்லுதான் கொடுக்கிறேன்.."!
"இதை எங்கே கட்டிப் போடுறீங்க.."
"எதை கறுப்பையா.? வெள்ளையையா..?!!"
"வெள்ளையை.."
"வெளியே இருக்கும் அறையில்."
"அப்போ கறுப்பு ஆட்டை..?"
"அதையும் வெளியிலே இருக்கும் அறையில் தான்.."
" எப்படிக் குளிப்பாட்டுவீங்க..?"
"எதை கறுப்பையா..? வெள்ளையையா..?"
"கறுப்பு ஆட்டை..?"
"தண்ணில தான்" "அப்போ வெள்ளையை..?"
"அதையும் தண்ணில தான்"
பேட்டி எடுக்கறவர் இப்ப கடுப்பாகிறார்
"லூசாய்யா நீ? ரெண்டுக்கும் ஒரே, மாதிரித் தானே செய்யுற! அப்புறம் எதுக்கு திரும்பத் திரும்ப கறுப்பா வெள்ளையானு கேட்டுட்டே இருக்க"?
"ஏன்னா வெள்ளை ஆடு என்னுது"
"அப்போ கறுப்பு ஆடு..?"
"அதுவும் என்னுதுதான்" ........!
டேய் ய் ய் ய்.... !!!!"





**ஆண்டனி** @MaGeShAnToNy 1h
பணம் பார்த்து பழகிய
காலத்தில் இருந்து
பணம் பார்த்து பழகும்
காலத்துக்கு மாறியதே எம்முடைய முன்னேற்றம்... !!!



**அனாமிகா** @MissLoochu 1h
வலிகளை அதிகரிக்கவும் தெரிகிறது
மறக்க வைக்கவும் தெரிகிறது தனிமைக்கு...

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | 3 | | | | 1 |
| 1 | 7 | 5 | | 9 | | | | 2 |
| 3 | | | 1 | | | 5 | | |
| | 5 | | | | | 8 | | |
| | 9 | | | 6 | | | 5 | |
| | | 1 | | | | | 7 | |
| | | 6 | | | 7 | | | 5 |
| 7 | | | | 1 | | 4 | 6 | 8 |
| 5 | | | | 4 | | | | 9 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 9 | 5 | 1 | 6 | 7 | 8 | 4 |
| 4 | 1 | 5 | 8 | 7 | 9 | 6 | 3 | 2 |
| 8 | 7 | 6 | 4 | 3 | 2 | 9 | 1 | 5 |
| 2 | 6 | 8 | 9 | 4 | 1 | 3 | 5 | 7 |
| 9 | 3 | 4 | 7 | 6 | 5 | 8 | 2 | 1 |
| 1 | 5 | 7 | 3 | 2 | 8 | 4 | 9 | 6 |
| 6 | 9 | 2 | 1 | 8 | 7 | 5 | 4 | 3 |
| 7 | 8 | 3 | 2 | 5 | 4 | 1 | 6 | 9 |
| 5 | 4 | 1 | 6 | 9 | 3 | 1 | 7 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

தன்னை வைத்தே பிறரையும்
எடை போடுவது தான் ஒவ்வொரு மனிதனும்
செய்யும் மாபெரும் தவறு.
மனதில் தோன்றும் ஆரம்பகட்ட எண்ணங்கள்
உயர்ந்த மரத்தின் வேர் போன்றவை
இறக்கும் வரை தொடரும்....
வேர்களை வெட்டமுடியாது
எனவே ஆரம்பத்தைத் திருத்திக்கொள்





**மேடம்:** அவமதித்தவர்களும், உங்களிடம் அன்பு பாராட்டுவர். தொழில் வளர்ச்சியில் புதிய சாதனை படைப்பீர்கள். சேமிப்பு அதிகரிக்கும். பெண்கள், வெகுநாள் வாங்க நினைத்த பொருள்களை வாங்குவர்.

**இடபம்:** குடும்பத்தினர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணமும் கிடைக்கும். வெகுநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை வளர்ப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். நிர்வாகச் செலவு அதிகரிக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**கடகம்:** அடுத்தவரை நம்பி முக்கிய செயலை ஒப்படைக்கக் கூடாது. தொழில் வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். குடும்பச் செலவுக்குக் கூடுதல் பணம் தேவைப்படும். வெளியூர்ப் பயணத் திட்டத்தில் மாறுதல் உண்டாகும்.

**சிங்கம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில் வியாபார வளர்ச்சி திருப்தியளிக்கும். வழக்கு விவகாரத்தில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். விரைவில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.



**கன்னி:** சிறு செயலையும் நேர்த்தியாகச் செய்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். ஆரோக்கியம் பலம் பெறும். பெண்களுக்கு பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

**துலாம்:** புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். பெண்கள், சகோதரர்களின் ஆதரவைப் பெறுவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.



**விருச்சிகம்:** அனுபவசாலியின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில் வளர்ச்சிக்கான புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். சொத்து ஆவணங்களைப் பிறர் பொறுப்பில் தரக் கூடாது.

**தனுசு:** உறவினர்களின் மத்தியில் நற்பெயர் கிடைக்கும். தொழில் வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**மகரம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழிலில் சுமாரான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உடல்நலனுக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**கும்பம்:** இயன்ற அளவில் தானதர்மம் செய்வீர்கள். தொழில் வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். சுபவிடயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**மீனம்:** எதிரிடையாகப் பேசுபவர்களிடம் விலகிச் செல்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடும். இஷ்ட தெய்வ வழிபாடு செய்வது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குளியல் தொப்பி

குழந்தைகள் குளிக்கும்போது அவர்களின் காதுகளில் தண்ணீர் புகாமல் இருக்க பிளாஸ்ரிக் தொப்பி அறிமுகமாகியுள்ளது. தலையின் அளவுக்கு ஏற்ப இதனை மாற்றி அமைத்து அணிய முடியும். இது 450 ரூபா முதல் 550 ரூபா வரை விற்பனையாகிறது.




**தேவையானவை :**

புழுங்கல் அரிசி -400 கிராம்
துவரம் பருப்பு -100 கிராம்
கீரை -2 கட்டு
செத்தல் மிளகாய் -12
தேங்காய் -1மூடி (துருவியது)
கடுகு, உளுத்தம் பருப்பு -தாளிக்க
உப்பு -தேவையான அளவு

**செய்முறை :**

- புழுங்கல் அரிசி, துவரம் பருப்பு முதலியவற்றை ஊற வைத்து, 10 செத்தல் மிளகாய், தேங்காய், உப்பு எல்லாவற்றையும் சேர்த்து, இட்லிக்கு அரைப்பது போல் அரைத்துக் கொள்ள வேண்டும்.
- கீரையை, இலைகளை மட்டும் எடுத்து, சுத்தம் செய்து, சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொண்டு, அரைத்த மாவுடன் கலக்கவும்.
- ஒரு தட்டில் எண்ணெய் தடவி, மாவை ஆவியில் வேக வைக்க வேண்டும்.
- வெந்ததும் இறக்கி, சூடு ஆறியபின் சிறுசிறு துண்டு களாக உதிர்த்துக் கொள்ள வேண்டும்.
- சட்டியில் எண்ணெயை ஊற்றி, கடுகு, உளுத்தம்பருப்பு, 2 செத்தல் மிளகாய் கிள்ளிப் போட்டு, நறுக்கிய கீரைத் துண்டுகளைப்போட்டு நன்கு வதக்கவும்.
- ஐந்து நிமிடம் கழித்து இறக்கிப் பரிமாறவும்.

**நாளை**
மாசி-19
புதன்கிழமை 02.03.2016
திதி: அட்டமி பி.ப.01.59 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.இ.01.10 வரை
ராகுகாலம்: 12.27-01.57 வரை
சுபநேரம்: 04.57-06.27 வரை

# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20 | 60 | 40 | 40 | 20 | 40 | 30 | 30 |
| கத்தரி | 70 | 60 | 60 | 100 | 50 | 60 | 60 | 40 |
| கரட் | 120 | 180 | 150-200 | 180 | 100 | 200 | 130 | 150 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 70 | 100 | 100 | 120 | 60 | 100 |
| பாகல் | 80 | 80 | 80 | 100 | 80 | 100 | 70 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 70 | 60 | 60 | 120 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 60 | 60 | 60 | 80 | 50 | 60 |
| சி.வெங்காயம் | 60 | 60 | 50 | 80 | 60 | 70 | 60 | 70 |
| பூசணி | 70 | 50 | 50 | 50 | 50 | 60 | 45 | 60 |
| தக்காளி | 30 | 40 | 30 | 30 | 30 | 40 | 35 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 40 | 50 | 40 | 45 | 40 |
| கீரை | 30 | 30 | 30 | 10 | 20 | 30 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 140 | 110 | 100 | 120 | 160 | 100 | 150 |
| புடோல் | 60 | 60 | 50 | 40 | 40–50 | 80 | 40 | 60 |
| கோவா | 50 | 60 | 60 | 60 | 60 | 80 | 70 | 50 |
| வெண்டி | 100 | 50 | 60 | 80 | 80 | 120 | 70 | 100 |
| போஞ்சி | 80 | 120 | 60 | 80 | 80 | 200 | 40 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 120 | 120 | 120 | 70 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 65 | 70 | 60 | 60 | 50 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 60 | 50 | 60 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 140 | 120 | 140 | 140 | 200 | 130 | 100 |
| இராசவள்ளி | 150 | 140 | 150 | 120 | 160 | 120 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 250 | 250–300 | 400 | 400 | 300 | 300 |
| பனங்கிழங்கு | 05 | 02.50 | 05 | 02 | 06 | – | 02.50 | – |



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 600 | 650 |
| நண்டு | 300 | 400 | 300 | 400 | 400 | 100 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 600 | 600 | 500 | 600 | 500 | – | 450 |
| சுறா | 650 | 600 | 600 | 800 | 700 | 600 | – |
| சீலா | 350 | 450 | 400 | 450 | 400 | 400 | 450 |
| விளை | 700 | 500 | 400 | 500 | 500 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 500 | 300 |
| கும்பிளா | 500 | 350 | 300 | 400 | 600 | 500 | – |
| கிளாக்கன் | 600 | 800 | – | – | 400 | – | – |
| ஓரா | 450 | 400 | – | – | 450 | 600 | 300 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 300 | – | 350 |
| சூடை | 200 | 150 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 350 | 200 | 150 | 250 | 300 | – | 250 |
| திருக்கை | 200 | 350 | 200 | 400 | 300 | 300 | 150 |
| மதனம் | 250 | 250 | 180 | 300 | 250 | 300 | 250 |
| கொய் | 150 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 450 | 200 | 250 | 400 | 400 | [illegible] | [illegible] |
| வாழை | 150 | 150 | 200 | 350 | 300 | 400 | – |



## குழம்பு எண்ணெய் எடுக்க

*குழம்பில் எண்ணெய் அதிக மாக இருந்தால் அதைத் தனியாக நீக்க வேண்டுமா?*

தேங்காய் வறுத்து அரைக்கும் குழம்பு வகைகளில், அதிகமான எண்ணெய்ச் சத்து இருக்கும். அதை நீக்க வேண்டு மானால், குழம்பைச் சிறிது நேரம் குளிர்சாதனப் பெட்டியில் வையுங்கள். மேல் பகுதியில் எண்ணெய் படியும். அதனை நீக்கிவிட்டு, குழம்பை சூடாக்கி பயன்படுத்துங்கள். இவ்வாறு பயன் படுத்துவது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்



## 60 நாடுகளில் கலக்சி எஸ் 7

தொடுதிரைக் கைபேசிச் சந்தையில் அப்பிள் நிறுவனத்துக்கு அடுத்தபடியாக திகழும் சாம்சுங் நிறுவனம் கலக்சி எஸ் 7 தொடுதிரைக் கைபேசியை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது.

கைபேசிப் பாவனையாளர்களிடத்தில் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்தக் கைபேசியானது,எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம் திகதி அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இவ்வாறு அறிமுகம் செய்யப்படும் தருணத்திலேயே 60 வரையான நாடுகளில் உடனடியாகஅவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என சம்சுங் நிறுவனம் அறிவித்துள்ளது.

எனினும் குறித்த 60 நாடுகளும் எவை என்ற தகவல் வெளியிடப்படாத நிலையில்,அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் உட்பட ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இதில் உள்ளடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அதிவேக விமானம்

உலகிலேயே மிகவும் வேகமாகப் பயணிக்கும் வகையிலான புதிய விமானத்தின் வடிவமைப்பொன்று வெளியிடப்பட்டுள்ளது. இதனை சார்ல்ஸ் பம்பார்டியர் என்கிற தொழில்துறை வடிவமைப்பாளர் வெளியிட்டுள்ளார்.

இவர் வெளியிட்டுள்ள வடிவமைப்பில் உள்ள குறித்த விமானத்துக்கு ஆண்டிபொட் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த விமானம், தற்போது உலகிலேயே அதிவேக விமானமாக விளங்கும் கான்கார்டு சூப்பர்சொனிக் விமானங்களை விட 12 மடங்கு அதிக வேகம் கொண்டதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் சார்ல்ஸ் கருத்துத்தெரிவிக்கும் பொழுது, லண்டனிலிருந்து 5 ஆயிரத்து 500 கிலோ மீற்றர் தூர மான, நியூயோர்க் நகரத்திலிருந்து லண்டன் நக ருக்கு இந்த புதிய விமானத்தின் மூலம் 11 நிமிடங்களில் பயணிக்கலாம் என்றார். ஸ்கிராம்ஜெட் இயந்திரத்துடன், இதன் இறக்கைகளில் றொக்கெட்டில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமும் பயன்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது

## அதிர்ச்சி கொடுக்கும் வட்ஸ்அப்

அதிகளவு பயனாளர்களை கொண்ட வட்ஸ்அப்பை சில வகையான கைபேசிகளில் எதிர்காலத்தில் பயன்படுத்த முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலைப்பூவின் ஊடாக தெரிவிக்கப்பட்ட இந்தத் தகவலின் அடிப்படையில்,பிளாக்பெரி மற்றும் நோக்கியா கைபேசிகளிலேயே எதிர்காலத்தில் குறித்த சேவையை பயன்படுத்த முடியாது போகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவை தவிர,நொக்கியா எஸ்40, நொக்கியா எஸ் 60 கைபேசிகள் உட்பட அண்ரொய்ட் 2.1 மற்றும் 2.2, விண்டோஸ் போன் 7.1 ஆகிய இயங்குதளங்களில் செயற்படும் கைபேசிகளிலும் வட்ஸ் அப் செயலியை பயன்படுத்த முடியாது போகும் எனவும், இவற்றில் போதியளவு வசதிகள் காணப்படாதமையே இதற்குக் காரணம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் பயனர்களை புதிய தொடுதிரைக் கைபேசிகளைப் பயன்படுத்துமாறு வட்ஸ்அப்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# திருமணக் காலப்பகுதியில் மணமகனின் உடைகளுக்கு ஹமீடியா முக்கியத்துவம்

இலங்கையின் முன்னணி ஆடவர் ஆடைத் தெரிவுகளின் நிபுணரான ஹமீடியாவானது, இந்தப் பருவ காலப்பகுதியில் திருமண வாழ்க்கையில் நுழையும் ஆடவர்களுக்கான நவீன திருமண ஆடைத் தெரிவுகளை அறிமுகப்படுத்தத் தயாராகியுள்ளது. தெரிவு செய்பவரின் அளவுக்கு ஏற்ற சூட்ஸ், சட்டைகள், ஆடை சட்டைகள், க்ரவெட்ஸ், இடுப்புக் கச்சை, கழுத்துப் பட்டிகள் மற்றும் மேலும் ஆடைத் தெரிவுகளுடன் மணமகன், மணமகனின் தோழன் மற்றும் இணைத் தோழன் ஆகியோருக்குப் பொருந்தக் கூடிய மூன்று விசேட திருமண ஆடைத் தொகுதிகளை இந்த ஆடைத் தெரிவுகள் காட்சிப்படுத்தும். இந்த மூன்று பருவ காலத் தொகுதிகளும் பேசிக், ஸ்மார்ட் மற்றும் எக்ஸ்குளசிவ் ஆகிய மூன்று வகைகளில் முறையே 50ஆயிரம் ரூபா , 70ஆயிரம் ரூபா மற்றும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா என்ற விலைகளில் கிடைக்கப்பெறும். தெரிவு செய்யப்படும் தொகுதிக்கு ஏற்ப மணமகனுக்கு ஆலோசனை வழங்கல், திருமண நாளில் மணமகனுக்கு ஆடை அணிவித்தல் போன்ற மேலதிக சேவைகளும் வழங்கப்படும். எக்ஸ்குளுசிவ் பொதியின் கீழ் மணமகனுக்கு ரமணி பெர்னாண்டோ சிகையலங்கார நிலையத்துக்கான வவுச்சர் ஒன்று வழங்கப்படும். திருமணத்திற்கு முன்னரான படப்பிடிப்புக்கான ஆடைகள் இலவசமாக வாடகைக்கு வழங்கப்படுவதுடன், ஹமீடியாவின் மணமகன் ஆடை அணிவித்தல் ஆலோசகர்களினால் அப்பணி மேற்கொள்ளப்படும்.



இது தொடர்பில் கருத்துத்தெரிவித்த ஹமீடியா இன்டர்நஷனல் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌஸுல் ஹமீட், தமது வாழ்க்கையின் மிகவும் முக்கியமான நாளில் சாதாரணமாக தோன்றுவதற்கு எவருக்கு விருப்பம் இருக்கும்? ஒவ்வொரு மணமகனும் அழகாகத் தோற்றமளிக்கவே விரும்புவார். நிறம், துணி, வடிவம் மற்றும் அணியும் விதம் தொடர்பில் மணமகனுக்கு முழுமையான சுதந்திரம் வழங்கும் அதே வேளை, எமது மணமகன் ஆடை அணிவித்தல் ஆலோசகர்கள் தொடர்ச்சியான ஆலோசனை வழங்குவதுடன், அந்த மிக முக்கியமான நாளில் உங்களுக்கு ஆடையை அணிவித்தும் விடுவர்-என்றார்.

ஹமீடியாவில், ஆடை உற்பத்திகள் மற்றும் தையல் சேவையில் எமது வாடிக்கையாளர்கள் சிறந்ததைப் பெறுவதை நாம் உறுதி செய்வதற்கு ஆண்களின் நவநாகரிக ஆடை வடிவமைப்புத் துறையில் ஆறு தசாப்த கால அனுபவத்தைக் கொண்டிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

வணிகம்

பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி முதல், மே மாதம் 31ஆம் திகதி வரை நாடெங்கிலும் உள்ள ஹமீடியாவின் அனைத்துக் கிளைகளிலும், புதிய திருமண ஆடைத் தெரிவுகள் கிடைக்கக் கூடியதாக விருக்கும். அத்துடன், பல்வேறு விலைக் கழிவுகளும், விசேட சலுகைகளும் இதனுடன் வழங்கப்படும். 1949ஆம் ஆண்டு ஆரம்பித்த நாள் முதல், உயர்தரமான, சிறந்த தையலுக்கான, தைத்த ஆடைகளுக்கான வீட்டுத் தெரிவாக ஹமீடியா வளர்ச்சி கண்டுள்ளது. (த)

# நோயைக் கண்டறியும் சேவைகளுக்காக கொமர்ஷல் வங்கியின் சலுகைப் பொதி



கொமர்ஷல் வங்கி ஆசிரி வைத்தியசாலைகள் குழுமத்துடன் இணைந்து தனது வாடிக்கையாளரான சிரேஷ்ட பிரசைகள் மற்றும் பெண்களுக்கென தெரிவு செய்யப்பட்ட நோயைக் கண்டறியும் சேவைகளுக்கு சலுகைப் பொதிகளை வழங்க முன்வந்துள்ளது. மேற்படி இரு நிறுவனங்களுக்கும் இடையேயான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம்,பெண்களுக்கான அனகி சேமிப்பு கணக்கு வைத்திருப்போருக்கும், உதார சேமிப்பு நிலையான பணவைப்பு கணக்குகளைப் பேணும் சிரேஷ்ட பிரசைகளுக்கும் ஆசிரி வைத்தியசாலையின் நலன்புரி நிலையங்கள் நான்கிலும் சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

இந்தச் சிறப்புக் கழிவுச்சலுகையானது 2016 டிசெம்பர் 31ஆம் திகதி வரை கொழும்பு - 05, கிரிமண்டல மாவத்தை, ஆசிரி வைத்தியசாலையிலும், கொழும்பு - 10இல் உள்ள பிரதான வைத்தியசாலையிலும், மாத்தறையிலுள்ள இரு ஆசிரி வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெறும் உரித்தாளிகளுக்கு உரியதாகும்.

மேற்படி சிறப்புக்கழிவானது, 40 வயதுக்கு உட்பட்ட மற்றும் மேற்பட்ட அனகி சேமிப்புக்கணக்கைப்பேணிவரும் வாடிக்கையாளர்களுக்கு தமது புற்றுநோய் மருத்துவ பரிசோதனைகள் விடயத்திலும் வழங்கப்படும்.

உதார கணக்கு வைத்திருப்பவர்களுக்கு பெண்கள் உடல் நலப் பரிசோதனை, ஆண்கள் உடல்நலப் பரிசோதனை, புற்றுநோய்க்குறிகாண் பரிசோதனை, இருதய நோய்ப்பரிசோதனை, நீரிழிவு நோய்ப்பரிசோதனை என்பன அடங்குகின்றன.

ஒரு அனகி டெபிட் அட்டையை கொடுப்பனவுக்கென பயன்படுத்தும்போது,அல்லது ஒரு கருமபீடத்தில் சமர்ப்பிக்கும்போது அல்லது ஒரு உதார சிரேஷ்ட பிரசைகள் அட்டையை வைத்தியசாலையில் சமர்ப்பிக்கும்போது சலுகைகளை ஒருவர் பெறமுடியும்.

ஆசிரி வைத்தியசாலைகள் நிறுவன பிரதம அதிகாரி மருத்துவர் மஞ்சுளா கருணாரத்ன இது பற்றிக்கூறுகையில்; வாடிக்கையாளர்களின் நலன்களை மேம்படுத்துவதில் கொமர்ஷல் வங்கி முன்னெடுக்கும் இந்தத் திட்டம் பாராட்டப்பட வேண்டியது. மிகப்பெரிய சுகாதார சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனமான ஆசிரி கொஸ்பிட்டல், மிகப்பெரும் தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி யுடன் இணைந்து செயற்படுவது பொருத்தமானதாகும் எனத் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி / நிறைவேற்று அதிகாரி எஸ்.ரெங்கநாதன், வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) ஹஸ்ரத் முனசிங்க, ஆசிரி வைத்தியசாலைகள் பிரதம நிறைவேற்று அதிகாரி மருத்துவர் மஞ்சுளா கருணாரத்ன மற்றும் ஆசிரி வைத்தியசாலையின் சந்தைப்படுத்தல் தலைவர் தசரத் ஹெட்டியாராச்சி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அனகி பெண்கள் சேமிப்புக்கணக்கு மிகச்சிறந்த வட்டி வீதத்தை அளிக்கிறது. ஆபரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான தங்க நகைக்கடன்கள், பொருள் கொள்வனவுக்கான டெபிற் அட்டை என்பவற்றையும் வழங்குகிறது. ரூபா 1000 தை வைப்புச்செய்வதன் மூலம் ஒரு அனகி கணக்கை ஆரம்பிக்க முடியும். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள்

நடவடிக்கைகள் ஓய்ந்திருந்தன.

இந்த நிலையில், பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காகக் காணி அளவீட்டு நடவடிக்கைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனை நிறுத்துமாறு, வலி. வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

எனினும், கீரிமலை சேந்தாங்குளம் பகுதியில் தேவாலயத்துக்குச் சொந்தமான 4 பரப்புக் காணியைக் கடற்படையினர் தமது தேவைக்குக் கோரியிருந்தனர். இதற்காகக் குறித்த காணியைச் சுவீகரிப்பதற்குக் கடந்த 2014 ஆம் ஆண்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அளவீட்டு நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தது.

மீளவும் குறித்த காணி சுவீகரிக்கப்படவுள்ளதாக, நில அளவைத்திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் 8 ஆம் திகதி சுவீகரிப்பு நடவடிக்கை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## கடற்படை

பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி குறிப்பிட்டுள்ளார்.

சி.எஸ்.என். தொலைக்காட்சி சேவை குறித்து தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளுக்கு அமைய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்சவை சேவையிலிருந்து இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த-வ-5)

## விளக்கமறியல்

எதிர்மனுத் தாக்கல்செய்யுமாறு நீதிமன்று அறிவுறுத்தியுள்ளது. யோசித ராஜபக்சவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ள, கடுவெல நீதிமன்றத்தின் உத்தரவை நீக்கிப் பிணை வழங்குமாறு கோரி, யோசித ராஜபக்ச சார்பாகக் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் பிணை மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த பிணை மனு நேற்று இரண்டாவது தடவையாக விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கு விசாரணையைப் பார்வையிட மகிந்த ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோரும் மேல் நீதிமன்றம் வந்திருந்தனர். குறித்த விசாரணையின்போது, கடுவெல நீதிமன்ற உத்தரவை நீக்க உத்தரவு பிறப்பிக்குமாறு யோசித ராஜபக்சவின் சட்டத்தரணிகள் கோரினர். அத்துடன், பிணை மனுவைக் கருத்தில் கொள்ளாமல், நீதிவான் நீதிமன்றினால் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக யோசிதவின் சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

எனினும் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் விசாரணைகளுக்குச் சந்தேக நபர்கள் தேவையான ஒத்துழைப்பைக் கொடுக்காத நிலையில், பிணைச் சட்டத்தின் கீழ்தான் அவர்களை விளக்கமறியலில் வைக்க கடுவெல நீதிவான் உத்தரவிட்டுள்ளதாகக் கூறி, அந்த உத்தரவை நீக்கக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஹெரியந்துடுவ மறுப்புத் தெரிவித்தார்.

யோசிதவின் சட்டத்தரணிகளை எதிர்மனுத் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்ட நீதிபதி, இந்த வழக்கை மார்ச் 8 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (த-வ-5)

## மன்னாரில்

லட்சம் பெறுமதியான 'ஹான்ஸ்' போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த போதைப் பொருளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றில் போதைப்பொருள் கொண்டு செல்லப்படுவதாக விசேட அதிரடிப்படையினருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதனடிப்படையில் விரைந்து செயற்பட்ட அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10.45 மணியளவில் மன்னாரில் வைத்து குறித்த தனியார் பஸ்ஸை இடைமறித்துப் போதைப்பொருளைக் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், அதனை வைத்திருந்த தலைமன்னார் மற்றும் கொழும்பைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹான்ஸ் என அழைக்கப்படும் குறித்த போதைப் பொருள் 693 பக்கெட்டுக்களில் அடைக்கப்பட்டுள்ளது. அவை 10 கிலோ 395 கிராம் எடை கொண்டவை என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சென்னையிலிருந்து யூ.எல். 124 என்ற விமானத்தில் நேற்று முன்தினம் கட்டுநாயக்காக விமான நிலையம் வந்த 26 வயதான நபரிடம் நடத்தப்பட்ட சோதனையில் 3 கிலோ எடையுள்ள 'ஹான்ஸ்' போதைப் பொருள் மீட்கப்பட்டது. இதன் பெறுமதி 5 லட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த-வ-5-56)

## உ.கிழங்கு

சிறிசேனவால், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

எவ்வளவு ரூபாவினால் வரி அதிகரிப்புச் செய்யப்பட்டது என்ற விபரமும், இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்படவில்லை. (த-வ-5)

## உரத்தின்

அறிவுறுத்தியுள்ளார்.

இந்தப் பணிப்புரை நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் விடுக்கப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 50 கிலோ உர மூடை 3 ஆயிரம் தொடக்கம் 3 ஆயிரத்து 500 ரூபா வரையில் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக விவசாயிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரடியாகச் சுட்டிக்காட்டியிருந்தனர். பொலநறுவையில் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விவசாயச் சங்கங்களுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி விடயம் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. குறித்த கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால, இந்த விடயத்தில் தனக்குள்ள பொறுப்பை நிறைவேற்றுவேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான பிரச்சினைகள் எழும்போது, அனைத்துத் தரப்பினரும் இணைந்து தீர்வுகளைக் கண்டறியவேண்டும். மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் பொறுப்பிலிருந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விலகிச் செல்ல முடியாது. சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே, நேற்றுக் காலை முதல், உர மூடைக்கான விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. (த-வ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பார்வதி சதாசிவம்

(யாழ் - காரைநகர்)

பிறப்பு 10 . 01 . 1929



இறப்பு 29 . 02 . 2016

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும் இல-27-2/1. டட்லி சேனநாயக்கா மாவத்தை தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி சதாசிவம் 29.02.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற (கருங்காலி) வேலுப்பிள்ளை - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையா(வாரிவளவு) - பரிமளம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சதாசிவம் அவர்களின் அன்பு மனைவியும் பற்குணராஜா. காலஞ்சென்ற லிங்கராஜா. செல்வராணி. சாந்தராணி. காலஞ்சென்ற தில்லைநடராஜா. அருச்சுனராஜா (மாம்பழம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தனலெட்சுமி. புவனேஸ்வரி. கிரிதரன். பிறேமா ஆகியோரின் அன்பு மாமியும் பைரவி. விஜிராஜ். அருள்ராஜ். ஜீவராஜ். விமல்ராஜ். கிரிசாந். கீர்த்தனா. வைஷ்ணவி. அபினேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆருஜனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 10.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


27 2/1,Dudley Senanayaka Mw,
Dehiwela.

தகவல்:
குடும்பத்தினர்.

077 312 1954, 077 965 1795

### கோபாலபிள்ளை வேலாயுதபிள்ளை

(ஓய்வுபெற்ற யாழ்.இந்துக்கல்லூரி லிகிதர் (Clerk) )



யாழ்.கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலபிள்ளை வேலாயுதபிள்ளை நேற்று (29.02.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை - ஞானரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தேவபுஷ்பத்தின் அன்புக் கணவரும், கிறிஸ்ரபெல், ஸ்ரெலா ஆகியோரின் அன்புத் தந்தையும், மோரிகிறிஸ் ரீனாவின் சிறிய தந்தையும், காலஞ்சென்ற வோல்ற்றர் மற்றும் வின்சன்ற் ஆகியோரின் மாமனாரும், சஞ்சிதா - அகிலன், சுரேஸ் சாளினி - றொபின், பாலேந்திரா ஆகியோரின் பேரனும், ஜொனாக்கா, றொபினா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(69714)
(11,17,18)

தகவல்:
கிறிஸ்ரா குடும்பத்தினர்.

021 205 2125

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கம்மா சுப்பிரமணியம்



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா சுப்பிரமணியம் நேற்று (29.02.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சத்தியதேவி, சகுந்தலாதேவி, தங்கரத்தினம், காலஞ்சென்ற நற்குணநாதன் மற்றும் சுபத்திராதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான விஜயராஜா, காங்கேஸ்வரன், பத்மநாதன், ரகுநாதன் மற்றும் சிவலோகநாதன், விமலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.30 மணிக்கு இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(69711)
(11,18,20)

ஞானசம்பந்தர் வீதி,
உரும்பிராய் வடக்கு,உரும்பிராய்.


தகவல்:
குடும்பத்தினர்.

இ.சுபத்திராதேவி - 077 424 2530

### மயில்வாகனம் கனகசுந்தரம்

(ஓய்வு பெற்ற நீதிமன்ற பதிவாளர்)

பிறப்பு 03 . 08 . 1929



இறப்பு 28 . 02 . 2016

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் 6. மேரிஸ்வீதி. பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட ம.கனகசுந்தரம் 28.02.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் சின்னத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் லோகேஸ் வரன்(London). தர்மினி(Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுவர்ணலதா(London). Dr.சுகுணதேவன்( Consultant தளவைத்தியசாலை புத்தளம்) ஆகியோரின் மாமனாரும் நிவாஷினி(London). கீர்த்தன்(London). பவதாரணி (H.F.C பம்பலப்பிட்டிய). கோகுலதேவன்(S.P.C Bambalapitiya) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற இராசரத்தினம். மகேஸ்வரி. முத்துத்தம்பி. தர்மலிங்கம்(Malaysia) மற்றும் சிவயோகமலர்(London). சிவலிங்கம்(Colombo). திலகவதி (Colombo) ஆகியோரின் அன்புச் சகோதரனும். கனகமணி. சிவஞானம்பாள்(Malaysia). காலஞ்சென்ற திருஞானசுந்தரம். சரஸ்வதி. மகாதேவன். இந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 02.03.2016 புதன்கிழமை காலை 8.00 முதல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு மதியம் 12.00 மணிக்கு கிரியைகள் இடம் பெற்று பிற்பகல் 2.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(29725) (14,16,20)

011 259 5330, 077 042 1868, 077 690 3977

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்தப் பெருந் திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 1
துன்னாலை மத்தி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி மகா சிவராத்திரியன்று வேட்டைத் திருவிழாவும், 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும். மறுநாள் தீர்த் தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.
(ற-ஜ-422)

# ஆலய அலங்கரிப்புக்காகச் சென்றோரை கோயிலில் வைத்துப் பிடித்துச் சென்றனர்

## மீட்டுத் தருமாறு பெற்றோர்கள் ஆணைக்குழு முன்பாக மன்றாட்டம்

சாவகச்சேரி, மார்ச் 1
ஆலயத் திருவிழாவுக்காக அலங்கரிப்பு வேலைகள் செய்துவிட்டு ஆலயத்தில் படுத்திருந்த எட்டு மாணவர்கள் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டனர் என்றும், அவர்களில் மூன்று பேர் உயிருடன் இருப்பதாக பத்திரிகைகளில் வெளியானதால், அவர்களை மீட்டுத் தருமாறும் மூன்று இளைஞர்களின் தாய்மார் சாவகச்சேரியில் நேற்று நடைபெற்ற காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும்ஜனாதிபதிஆணைக் குழுவின் முன்னால் மன்றாட்டமாக ஒரே நேரத்தில் கோரிக்கை விடுத்தனர்.
இதுகுறித்து அவர்கள் அங்கு தெரிவித்ததாவது–
கடந்த 2006 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த மந்துவில் வேவில் அம்மன் ஆலயத்தின் திருவிழாவுக்காக முதல் நாள் இரவு தங்கியிருந்து அலங்கரிப்பு வேலையில் ஈடுபட்ட எட்டு பேர் ஆலய மண்டபத்தில் இரவு தங்கியிருந்தனர்.
இரவு வெடிச் சத்தம் கேட்டதால் பெற்றோர்கள் அதிகாலையில் பதறிப் போய் வீதியெங்கும் படையினர் சுற்றி வளைத்து நின்றதால் உள் பாதை மற்றும் வயல் வெளியால் நடந்து ஆலயத்துக்குச் சென்றனர். அங்கு ஆலயத்தில் படுத்திருந்த எட்டுப் பேரையும் படையினர் அங்கு பொருத்தியிருந்த ஒலிபெருக்கி வயர்களை அறுத்து அதனால் கைகளைக் கட்டி பவள் கவச வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.
இதனைக் கண்ட பெற்றோர் ஆலய அலங்கரிப்புக்காக வந்தவர்கள் எனக் கெஞ்சிய போதிலும் வரணி முகாமுக்கு வருமாறு கூறிவிட்டு கொண்டு சென்று விட்டனர்.
பின்தொடர்ந்து சென்ற பெற்றோரை வரணி முகாமுக்குள்(552 ஆவது படையணி) செல்லவிடாமல் தடுத்த படையினர் தாங்கள் யாரையும் பிடிக்கவில்லை. இங்கிருந்து செல்லுங்கள் இங்கு வரவேண்டாமெனத் துரத்தினர்.
உடனடியாக நாங்கள் எட்டுப் பெற்றோரும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தோம். அதன்பின்னர் தொடர்ந்து படையினர் எமது வீடுகளுக்கு வந்து விசாரித்த வண்ணமிருந்தனர்.
இந்த எட்டுப்பேரில்மாணவர்களான மூவர் பலாலி மற்றும் திருகோணமலை துறைமுகம் ஆகிய இடங்களில் வேலை செய்வதாக தகவல்கள் கிடைத்தன.
கடந்த வருடம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் இந்த மூவரும் உயிருடன் இருப்பதாகவும் பெற்றோர்களைத் தொடர்பு கொள்ளுமாறும் பிரசுரமாகியிருந்தது.
இது தொடர்பாகப் பலருடன் தொடர்பு கொண்டும் பயன் கிடைக்கவில்லை. அவர்களை மீட்டுத் தாருங்கள் என்று அழுதவாறு கோரினர்.
அத்துடன் மந்துவிலைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது மற்ற மகன் அரிசி மில்லில் வேலை செய்யும் போது, இரும்புத் துண்டு பறந்து கண்ணில் தாக்கியதால் காயமடைந்து கண் தெரியாத நிலையில் காணப்பட்டார். 2007 ஆம் ஆண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற அவரையும் எனக்கு முன்னால் படையினர் பிடித்துச் சென்றனர் என்று ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்தார்.
(ற-ஜ-9)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருள்ஜோதி கருணரட்ணா

(ஓய்வு பெற்ற பதில் அதிபர், நிர்வாக சிரேஸ்ட உதவி ஆசிரியர் - நவீல்ட் பாடசாலை கைதடி)



காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும், தற்பொழுது வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருள்ஜோதி கருணரட்ணா 28.02.2016 ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந் துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏசாயா - ரூத் தம்பதிகளின் அன்பு மகளும் யோசப் - மேரி தம்பதிகளின் அன்பு மருமகளும் கருணரட்ணாவின் அன்பு மனைவியும் நிரோஜினியின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அருள்மலர் மற்றும் அருள்தாசன், அருள்ரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விஜயரதியின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணிக்கு நல்லூர் பரி.யாக்கோபு ஆலய குருமனையில் நடைபெற்று பரி. யாக்கோபு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கருணரட்ணா
(கணவர்)

நல்லூர்.

(89721) (15.17.20)

# இராணுவத்தை இலக்கு வைத்து உள்ளக விசாரணை அமையாது

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1
இராணுவத்தை இலக்கு வைத்த பொறிமுறையாக, உள்ளக விசாரணை அமையாது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.
தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதும், வடக்கில் ஜனநாயக செயற் பாடுகளைப் பலப்படுத்துவதும் பிரிவினைவாதச் செயற்பாடுகள் அல்ல. முன்னைய அரசு செய்யாததை நாம் செய்கிறோம் என்பதற்காக, தேசிய பாதுகாப்பில் நாம் அக்கறையற்றிருக்கின்றோம் என்று எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது,
தேசிய பாதுகாப்பைச் சீர்குலைக்கும் எந்த நடவடிக் கைகளுக்கும் நாம் இட மளிக்கப்போவதில்லை.தற்போதையநிலையில் நாட்டின் தேசிய பாதுகாப்பில் எந்த அச்சமும் கொள்ளத் தேவையில்லை.
எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச நீதிமன்றத் தின் மூலமாக எமது இராணுவத்தை விசாரிக்க அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதியும், பிரதமரும் இருக்கின்றனர். எனினும் உள்ளகப் பொறிமுறைகள் சரியான முறையில் நடைபெறும்.
இதன்போது இராணுவம் செய்ததாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகள் இடம் பெற்றாலும், அவை எந்தச் சந் தர்ப்பத்திலும் இராணுவத்தை இலக்கு வைத்த பொறி முறையாக இருக்காது.– என்றார்.
(ற-ஜ-5)



மலர்வு: 28.07.1955 உதிர்வு: 29.02.2016

### திருமதி விஜயலஷ்மி(பேபி) தங்கவேல்

சாத்தியார் வளவு இமையாணன் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி விஜயலஷ்மி தங்கவேல் நேற்று (29.02.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற க.தங்கவேலின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் ரமேஷ், குணரட்ணம், றஜிதா, நிறஞ்சணா ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரதீபனின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.03.2016) புதன் கிழமை முற்பகல் 9.00 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4.30 மணியளவில் தெகிவளை பொது மயானத்தில் தகனத்திற்காக கொண்டு செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


(c/29729) (15,17)

தகவல்: த.ரமேஷ்
முகவரி: 22B 2/2, பா ர்ரை ஒழுங்கை, புகையிரத நிலைய வீதி, தெகிவளை.
தொலைபேசி இல: 011 272 1606, 077 248 4019

## மரண அறிவித்தல்

### விநாயகமூர்த்தி தம்பிராசா

பிறப்பு 13 . 12 . 1942



இறப்பு 27 . 02 . 2016

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், மாத்தளை பக்கமுளையை வசிப்பிடமாகவும் கொண்டு தற்பொழுது கனடாவில் வசித்த விநாயகமூர்த்தி - தம்பிராசா (ஓய்வு பெற்ற R.M.P) அவர்கள் 27.02.2016 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றயாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் விநாகமூர்த்தி - காலஞ்சென்ற வயிரரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுபத்திராதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை யாழ்ப்பாணக் கல்லூரி), காலஞ்சென்ற புனிதவதி (ஓய்வு பெற்ற ஆசிரியை அராலி இந்துக் கல்லூரி), காலஞ் சென்ற மணிமேகலா தேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை மானிப் பாய் மகளிர் கல்லூரி) மற்றும் சிவசோதிராஜா (ஓய்வு பெற்ற பெருந்தெருக்கள் திணைக்களம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவசோதியின் அன்புக் கணவரும் கணாதீபன் (கனடா), பிரதீபன் (லண்டன்), பிரசாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோல்டா (கனடா), கீத்தா (லண்டன்), விதர்சன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்திகா, இயல்டா, விகாஸ், சான்சியன் ஆகியோரின் அன்புப் பேரனும் கேசவராஜன் (ஓய்வு பெற்ற அதிபர் மானிப்பாய் இந்துக் கல்லூரி), இராசரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் வெஸ்லிக் கல்லூரி - கொழும்பு) காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - ஆனைக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை) காலஞ்சென்ற சுபாசினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தக்ஷாயினி, வரப்பிரதன், ஐங்கரன், அபராயுதனி, திருமாறன் ஆகியோரின் பெரியமாமாவும் சிவகிரிபன், சிவதுக்சன், சிவகஜலி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியை 06.03.2016 அன்று கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P: 0016477261430

தகவல்:
குடும்பத்தினர்.

# செலான் வங்கிக் கிளை திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 1
செலான் வங்கி நெல்லியடிக் கிளையானது வாடிக்கையாளருக்கு மேம்படுத்தப்பட்ட சேவை வழங்கும் நோக்கம் கருதி இல.157/1 ,யாழ் வீதி,நெல்லியடி என்ற புதிய முகவரியில் இன்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.செலான் வங்கியின் பொதுமுகாமையாளர் / பணிப்பாளர் கபில ஆரியரத்தின இன்று காலை 9.15 மணிக்கு இதனைத் திறந்து வைப்பார்.
(து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார விநியோகம் சீரடையும்

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் நேற்று முதல் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனால் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்த திடீர் மின்வெட்டு ஏற்படாது. சீரான மின் விநியோகம் இடம்பெறுமென மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை நாடு முழுவதிலும் திடீர் மின் தடை ஏற்பட்டது. நுரைச்சோலை மின்உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இந்தத் தடை ஏற்பட்டிருந்தது. இதனை சீர் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதில் நுரைச்சோலை மின்உற்பத்தி நிலையத்தின் ஒரு மின்பிறப்பாக்கியிலிருந்து மாத்திரம் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்றுத் தொடக்கம் மற்றொரு மின்பிறப்பாக்கியின் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்றுமுதல் சீரான மின்சார விநியோகம் எந்தத் தடையுமில்லாமல் மேற் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-5)

## தமிழர்

வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஆர்.எம். ஜெரத் நாயக்க.

வவுனியா பூந்தோட்டம் புனர் வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்று வந்த, 14 முன்னாள் போராளிகள் நேற்றைய தினம் அவர்களின் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.

இதன்போது புனர்வாழ்வு ஆணை யாளர் மேலும் கூறுகையில்,

2009 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை 12 ஆயிரம் முன்னாள் போராளிகளைச் சமூகத்துடன் இணைத்துள்ளோம். போராளிகளைச் சமூகத்துடன் இணைக்கும் வேலைத்திட்டத்துக்குத் தனியான நிறுவனங்களோ, திணைக்களங்களோ இல்லை. இதனால் இந்தப் பெரிய வேலைத் திட்டம் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டது.

இராணுவம் இதனைச் சரியாகச் செய்துள்ளது. இப்போது 300 பேர் மாத்திரமே புனர்வாழ்வு பெற்று வருகிறார்கள். அவர்களும் வெகு விரைவில் சமூகத்துடன் இணைக்கப்படுவார்கள்.

இலங்கை இராணுவமானது, தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படவில்லை. தமிழ் மக்களின் ஒரு அமைப்புக்கு எதிராகவே போரிட்டது. இலங்கை இராணுவமானது ஜே.வி.பி. இயக்கத்துக்கு எதிராகச் செயற்பட்டது. சிங்கள மக்களுக்கு எதிராகச் செயற்படவில்லை.

எங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையை மாத்திரமே நாங்கள் நிறைவேற்றினோம். எனவே தமிழ் மக்கள், இராணுவத்துக்கு எதிராகக் கோபமோ, வைராக்கியமோ கொள்ளக்கூடாது.

நாங்கள் இலங்கையர்கள் என்ற எண்ணத்துடன் செயற்பட்டு நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும். ஜே.வி.பி.யுடன் போர் நடந்தது. அவர்கள் பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்டார்கள். ஆனால் சமூகம் அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை.

கடந்த 30 வருட காலப் போர் எந்தவிதமான நன்மையையும் பெற்றுத் தரவில்லை. பொருளாதாரத்தில், கலாசாரத்தில் நாடு 30 வருடங்கள் பின்தங்கிவிட்டது. இந்தப் போரினால் மூவின மக்களுமே பாதிக்கப் பட்டுள்ளனர். எனவே இராணுவத்தைப் பொறுத்தமட்டில் நாட்டின் அபிவிருத்தியே முக்கியம் – என்றார். (த-வ-5)

## கோமகன்

ஆறு வருடங்களின் பின்னர் கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தினால் நேற்று விடுவிக்கப்பட்டார்.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்த கோமகன், 2010 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவருக்கு எதிராக 2012 ஆம் ஆண்டு ஒரே குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வவுனியா மேல் நீதிமன்றத்திலும், கொழும்பு மேல் நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து பயிற்சி பெற்றார் என்ற அடிப்படையில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி கோமகன் விடுவிக்கப்பட்டிருந்தார். குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாக வழங்கப்படவில்லை என்ற காரணத்தை வைத்து வவுனியா மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டிருந்தாலும், அதே வாக்குமூலத்தை அடிப்படையாக வைத்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட கொழும்பு மேல் நீதிமன்ற வழக்கிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி வெள்ளவத்தைப் பகுதியில் கருணா குழுவினர் மீது தாக்குதல் நடத்த உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கிலேயே நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார். கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தின் ஊடாக அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் விடுவிக்கப்பட்ட ஒட்டுமொத்த தமிழ் அரசியல் கைதிகளும் வழியனுப்பி வைத்துள்ளனர். தமது விடுவிப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த முருகையா கோமகன், ஏனையோரின் விடுதலைக் காகத் தொடர்ந்து பாடுபடுவேன்-என்றார். (த-வ-5)

## ஆள் கடத்தலுக்கு

சென்றுகொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றின் பாகங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆள்கடத்தல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் பாகம் பாகமாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் ஆவணங்களும் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் நீதிமன்ற அனுமதியுடன் அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெறவுள்ளன. (த-வ-5)

## 17 வயதுச்

வீடு ஒன்றுக்குள் வைத்து துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் 17வயதுடைய சிறுவனை அச்சுவேலிப் பொலிஸார் நேற்றுமுன் தினம் நள்ளிரவு கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாரும் இல்லாத நேரம் பார்த்துச் சிறுமியின் வீட்டுக்குள் நுழைந்த குறித்த சிறுவன், ஆசை வார்த்தைகள் கூறித் தன்னுடன் அழைத்துக்கொண்டு அருகில் உள்ள வீட்டுக்குள் சென்றுள்ளார்.

பின்னர் சிறுமியை உடலியல் ரீதியாகத் துன்புறுத்திக்கொண்டிருந்தபோது, மாட்டுக்குத் தண்ணீர் வைக்க சிறுமியின் தந்தை குறித்த வீட்டுக்கு அருகில் சென்றுள்ளார்.

இதன்போது, குறித்த வீட் டின் யன்னல் வழியாக எதிர் பாராத விதமாக எட்டிப் பார்த்தபோது, தனது மகளை சிறுவன் ஒருவன் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தமையை கண்ணுற்றுள்ளார்.

மகளைப் பத்திரமாக மீட்ட தந்தை, குறித்த சம்பவம் தொடர்பில் நேற்று அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றத்தடுப்பு பொலிஸார், துஷ்பிரயோகத்தை மேற்கொண்ட சிறுவனை வீட்டில் வைத்துக் கைது செய்துள்ளனர். (த-வ-107)

## இலங்கை

இதில் பல்வேறு நாடுகளின் மனித உரிமைகள் பிரச்சினைகள் குறித்து அவர் குறிப்பிட்டிருந்த போதும், இலங்கை தொடர்பாக எதையும் சுட்டிக்காட்டவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசேன் நான்கு நாள் பயணமாகக் கடந்த 9 ஆம் திகதி இலங்கைக்கு வந்து சென்றிருந்தார். இதனால், அவர் தனது தொடக்க வுரையில் இலங்கைப் பயணம் தொடர்பான விவரங்களை வெளியிடுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டிருந்தபோதிலும், அவர் அது தொடர்பாக மௌனம் காத்துள்ளார்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 31 ஆவது அமர்வில், இலங்கை குறித்த விவாதங்கள் எதுவும் நிகழ்ச்சி நிரலில் பட்டியலிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

## கண்ணீர் அஞ்சலி



பிரபல எழுத்தாளர்

**கலாநிதி கந்தையா குணராசா**

(செங்கையாழியான்- SLAS - 1)
(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் -நல்லூர்
பதிவாளர் - யாழ்.பல்கலைக்கழகம்
ஆணையாளர் - யாழ்.மாநகரசபை)

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளரும், ஊழியர்களும்,**
**கரிகணன் தனியார் நிறுவனம்**
**இல.681,K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**

(சி/29571)(11.17.18.20)

## கண்ணீர் அஞ்சலி

**கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்)**




பண்டித மணியின் மாணவன் பண்டிதர் க.தி. சம்பந்தன் அவர்களின் இலக்கிய விருது வழங்கலுக்கு முன்னின்று உழைத்தவரும் விருது வழங்கும் இலக்கிய வட்டம் என்னும் சபையை நிறுவியவரும் சுமார் ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக அதன் போசகராகவும்,தலைவராகவும் இருந்ததுடன் இன்னும் பல வழிகளில் விருது வழங்கலுக்கு உதவியவருமாகிய செங்கையாழியானின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் துயருறும்**
**க.தி.சம்பந்தனின் மகள்**
**திரிவேணி கஜரோகணன்**

(69725)(15.17.20)

## மரண அறிவித்தல்
### (இறுதிக்கிரியை திகதி மாற்றம்)

**அன்னை மடியில்: 25.01.1941**
**ஆண்டவர் நிழலில்: 28.02.2016**



"சாகித்ய ரத்னா"

**கலாநிதி கந்தையா குணராசா**

**(செங்கையாழியான்) SLAS - I**

**(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர் - நல்லூர், பதிவாளர் - யாழ். பல்கலைக்கழகம் ஆணையாளர் - யாழ் மாநகரசபை)**

யாழ். கலட்டி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பிறவுண்வீதி, நீராவியடியை வதிவிடமாகவும் கொண்ட கலாநிதி. கந்தையா குணராசா 28.02.2016 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் தென்னிந்தியாவில் ஸ்ரீவில்லிபுத்தூரில் கோவில் கொண்டருளியிருக்கும் ஆறுமுகசாமி அவர்களின் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-அன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான விஜயரெட்ணம்- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாம்பிகையின் (ஓய்வுபெற்ற அதிபர்-நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) அன்புக் கணவரும், Dr. ரேணுகா (National Ayurveda Hospital of Srilanka-Co-08) பிரியா (ஆசிரியை- கொழும்பு இந்துக் கல்லூரி-இரத்மலானை) ஹம்சா (கணினி ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. பிரதீப்குமார் (Lady Ridgeway Hospital Colombo-08), பாலேந்திரன் (பொறியியலாளர், Sierra Telecom-Colombo) உதயகுமார் (Operational Manager - New UthayanPublication (Pvt) Ltd) ஆகியோரின் அன்பு மாமனும், யதுர்ஷன் (S.Thomas' College Mt lavaniya), பிரணவி (Methodist College - Colombo-03), விதுர்ஷன் (S.Thomas' College Mt lavaniya), நிலாணி (Methodist College - Colombo-03), ஜருணி (Methodist College - Colombo-03), ருத்ரேஷ் (Little Chuttys' Monterssori-Jaffna), ஷாத்விக் ஆகியோரின் பேரன்புமிக்க அம்மப்பாவும், காலஞ்சென்றவர்களான யோகரெத்தினம், மகேஸ்வரி, கந்தசாமி (புதுமை லோல ன்) தங்கேஸ்வரி, ஜெயராச சிங்கம் ஆகியோரின் அருமை சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, சபாரத்தினம் மற்றும் கனகமணி (கனடா), ரத்தினம் (கனடா), சிவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான ராஜரெட்ணம், சண்முகநாதன், அசலாம்பிகை, மகாலிங்கம் மற்றும் ஞானாம்பிகை (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற யோகவதி மற்றும் தெய்வானைபிள்ளை (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற ராஜகுலசிங்கம் மற்றும் லலிதாதேவி (கொழும்பு), பத்மநாதன் (இந்தியா) ஆகியோரின் அன்பு சகோதரனும், பெறாமகள் ஜெயராணியின் (யாழ்ப்பாணம்) சிறியதந்தையும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.03.2016 புதன்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
75/10A, பிறவுண்வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
**T.P: 021 222 2337 குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி நவஜீவன்ஸ், சிவகுமரன் அணிகள் கரவெட்டி கரப்பந்தாட்டத்தில் சம்பியனாகின





கரணவாய், மார்ச் 1
கரவெட்டிப் பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் உடுப்பட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்று நடப்பு வருடத்தின் பிரதேச மட்ட சம்பியன்களாகின.

**வளர்மதி - நவஜீவன்ஸ்**
ஆண்களுக்கான இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கரவெட்டி வளர்மதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நவஜீவன்ஸ் கைப்பற்றியது. இரண்டாவது செற்றிலும் வெற்றிபெற்றால் கிண்ணம் நவஜீவன்ஸ் அணியிடம் சென்றுவிடும். எனவே, ஆட்டத்தில் தனது இருப்பைத்தக்க வைக்க வேண்டுமாயின் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற கட்டாயம் வளர்மதிக்கு ஏற்பட்டது. இதனால் அந்த செற் இழுபறியாக நீடித்தது. இருப்பினும் கலைமதியால் தனது தோல்வியைத் தவிர்க்க இயலவில்லை. 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டாம் செற்றையும் கைப்பற்றியது நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம்.

**சிவகுமரன் - மைக்கல்**
பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. மூன்று செற்களில் முதல் இரு செற்களையும் கைப்பற்றிய சிவகுமரன் அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.(ம-108-422)

# ஞானமுருகன் அபாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 1
குணபாலசிங்கம் ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத்தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றுவருகின்றன. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதிக்கொண்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# சென்.மேரிஸ், ஐக்கிய அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 1
மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 6.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணியை எதிர்த்து சென்.மேரிஸ் அணி மோதிக்கொண்டது. இதில் சென்.மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அடம்பன் ஐக்கிய அணியை எதிர்த்து பொன்தீவுகண்டல் சென். அன்ரனிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் அடம்பன் ஐக்கிய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# வேகநடைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ். மாவட்ட ரீதியிலான விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமான இருபாலாருக்குமான 10 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட வேகநடைப் போட்டி எதிர்வரும் 6ஆம் திகதி காலை 6 மணிக்கு கோப்பாய் பிரதான வீதியில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் வீர,வீராங்கனைகள் தங்களது பிரதேச செயலக பிரிவு விளையாட்டு உத்தியோகஸ்தர் ஊடாகபதிவுகளைமேற்கொள்ள முடியும் என யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கே.விஜிதரன் தெரிவித்துள்ளார்.
(ம-23)





# வல்வை, அண்ணா அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி

கரணவாய், மார்ச் 1
பருத்தித்துறைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவுசெய்த கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன வல்வை விளையாட்டுக்கழக அணியும் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழக அணியும்.

தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் மாதனை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர் கொண்ட வல்வை விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற நேர்செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக் கழகமும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் பலத்த இழுபறிகளுக்கு மத்தியில் 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழகம். (ம-108)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 1

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந் தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யுனைபட் அணியை எதிர்த்து அல் மாதர் அணி மோதவுள்ளது.

**றோயல் வி.கழகத் தொடர்**
ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரிமைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ்அணியை எதிர்த்துஇளவாலையங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.

**குணபாலசிங்கம் ஞாபகார்த்தத் தொடர்**
யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதவுள்ளது.

**வைகறை வி.கழகத் தொடர்**
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடந்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாவடிகாளியம்பாள் 'பி' அணியை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி அணி மோதவுள்ளது. (ம-23)

# கோப்பாய் கோட்ட கால்பந்தாட்டம்

கர்ணவாய், மார்ச் 1
கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் 15வயதுப் பிரிவு, 17வயதுப் பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர்கள் நாளை செவ்வாய்க்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் காலை 8.30மணி முதல் நடைபெறவுள்ளன. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாள் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 1
வைகறை வி.கழகம் நடத்தி வரும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டமொன்றில் அம்பாள் அணி வெற்றி பெற்றுள்ளது.
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித்தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி அணி மோதிக் கொண்டது. இதில் தாவடிகாளியம்பாள் அணி 10:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# பங்களாதேஷிடம் அடைந்த தோல்விக்கு பொறுப்பேற்பதாக மத்தியூஸ் தெரிவிப்பு



ஆசியாக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி, பங்களாதேஷிடம் தோல்வியடைந்ததற்கு தான் பொறுப் பேற்றுக் கொள்வதாக அணியின் தலைவர் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.
148 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பொழுது, மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை அணி 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. மத்தியூஸ் 20 பந்துகளை எதிர்கொண்டு 12 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தார். பந்துவீச்சில் அவர் சிறப்பாகச் செயற்பட்ட போதிலும் நெருக்கடியான நிலையில் துடுப்பாட்டத்தில் தடுமாறியமை தோல்விக்கான பிரதான காரணமாகச் சொல்லப்படுகிறது. இதனையடுத்தே மத்தியூஸ் தோல்விக்கு பொறுப்பேற்பதாக வெளிப்படுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்; பவுண்டரிகளுக்கு பந்தை விரட்ட நாங்கள் அதிகமாக சிரமப்பட்டோம். இதுவே அணியின் தடுமாற்றத்துக்கு முக்கிய காரணமாக அமைந்து விட்டது. அதேபோல் நாங்கள் சிறப்பான தெரிவில் விளையாடவில்லை. நன்றாக தொடங்கிய போதும் சில தவறுகளால் ஆட்டத்தின் போக்கு மாறியது. இலங்கை அணியில் நல்ல துடுப்பாட்ட வரிசை உள்ளது. ஆனால் பயன்படுத்த தவறிவிட்டோம். இறுதி ஆட்டத்துக்கு நுழைய நாங்கள் பாகிஸ்தான், இந்திய அணிகளை வீழ்த்த வேண்டும். கண்டிப்பாக இது கடினமான சூழலாக இருக்கப் போகிறது. போராடி வெற்றி பெற முயலுவோம்- என்றார். (ம)

## வவுனியா தெற்கு கல்வி வலய பெருவிளையாட்டுக்கள் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 1
வவுனியா தெற்கு கல்வி வலய பாடசாலைகளுக்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் சில நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.
இதன்படி 15வயது, 17வயது, 19வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஏறிபந்து தொடரும் வவுனியா சிறி சுமன மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ம-23)



வளர்ந்தோருக்கான தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டியில் யாழ். கல்விவலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண் தயாளன் 55வயது தொடக்கம் 59வயதுப் பிரிவினருக்கான ஈட்டி எறிதலில் 37.23மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். இதனால் எதிர்வரும் மே மாதம் சிங்கப்பூரில் நடைபெறவுள்ள வளர்ந்தோருக்கான ஆசிய மட்ட போட்டியில் இலங்கை சார்பாகக் கலந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்கு கிடைத்துள்ளது. (ம-422)

# வென்றது விண்மீன்

யாழ்ப்பாணம், மார்ச் 1
ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் விண்மீன் அணி வெற்றிபெற்றுள்ளது.
தொடர் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் சென். ஜோசெப் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதிக்கொண்டது. இதில் பலாலி விண்மீன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



இலங்கைப் பாடசாலைகளின் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்ட அணி, நேற்று குறித்த பாடசாலைச் சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டது. (ம-23)

# கிண்ணம் வென்றது மைக்கல் அணி கரவெட்டிப் பிரதேச துடுப்பாட்டத்தில்

கரணவாய், மார்ச் 1
கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்கள் பிரிவு துடுப்பாட்டத் தொடரில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியுள்ளது.
தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகமும் மோதின.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மைக்கல் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் இழப்பின்றி 82 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக சாளினி 56 ஓட்டங்களையும், பிரதீபா 26 ஓட்டங்களையும் பெற்றனர்.
83 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்று 48 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அதிகபட்சமாக மேரிகொலிடா 8 ஓட்டங்களையும், உதயா 8 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சாளினி இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினார். (ம-422-108)



# கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியின் சிறந்த வீர, வீராங்கனைகள் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 1
யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கனிஷ்ட பிரிவினருக்கான மெய் வன்மைப் போட்டிகள் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்றன. இதில் ஆண்கள் பிரிவிலும், ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையிலும் யாழ்.மத்திய கல்லூரி முதலிடத்தைப் பிடித்தது. பெண்கள் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி முதலிடத்தைப் பிடித்தது.
தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆண்கள் பிரிவுகளின் சிறந்த வீரர்களாக 14 வயதுப் பிரிவில் ஹாட்லிக் கல்லூரியை சேர்ந்த பி.மிதுசன், 16வயதுப் பிரிவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த பி.திலக்சன், 18 வயதுப் பிரிவில் எம்.குகதாசன், 20 வயதுப் பிரிவில் சென்.ஹென்றிஸ் கல்லூரியைச் சேர்ந்த கே.ராம்குமார், 23 வயதுப் பிரிவில் யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த டி.ஜோச் ஆகாஸ் ஆகியோர் தெரிவானார்கள். சிறந்த வீராங்கனைகளாக 14 வயதுப்பிரிவில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். விதுசனா, 16 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த என்.விதுசனா, 18 வயதுப் பிரிவில் யாழ். இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எ.நர்மதா, 20 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ். ஆரணி ஆகியோர் தெரிவானார்கள்.
தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆண்கள் பிரிவுகளின் சிறந்த சுவட்டு வீரர்களாக 14வயதுப் பிரிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த யூ.குயின்ஸ், 16 வயதுப் பிரிவில் சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பி.பற்றிக் நிலக்சன், 18 வயதுப் பிரிவில் யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம். சுமன், 20 வயதுப்பிரிவில் யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி.செந்தூர்ஜன், 23 வயதுப் பிரிவில் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சிறி ஆகியோர் தெரிவானார்கள். சிறந்த சுவட்டு வீராங்கனைகளாக 14வயதுப் பிரிவில் எம்.நிருத்திகா, 16 வயதுப் பிரிவில் பெரியபுலம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.சகானா, 18 வயதுப் பிரிவில் மாதகல் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆன் சுவீற்றா, 20 வயதுப் பிரிவில் மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆன் ஜெசிந்தா, 23 வயதுப் பிரிவில் யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆர்.ரதீஸ்வரி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-422)

## கோப்பாய் கோட்ட மெய்வன்மை

யாழ்ப்பாணம், மார்ச் 1
கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளை புதன் கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரி மைதா னத்தில் நடைபெறவுள்ளன. (ம-422)

## புதுக்குடியிருப்பு கோட்ட எல்லே

புதுக்குடியிருப்புப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே தொடர்கள் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளன. ஆண்களுக்கான தொடர் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்திலும், பெண்களுக்கான தொடர் புதுக் குடியிருப்பு றோ.க.த.க. பாடசாலையிலும் நடைபெறவுள்ளன. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரைச்சிக்கோட்டக் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 1
கரைச்சிக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான கால்பந்தாட்டம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. இதில் 17வயதுப்பிரிவு மற்றும் 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான தொடர் கிளிநொச்சி–உருத்திரபுரம் மகா வித்தியாலய மைதானத்திலும், 15வயதுப்பிரிவு ஆண்கள் மற்றும் 19வயதுப்பிரிவு பெண்களுக்கான தொடர் கிளிநொச்சி–சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (ம–422)

**வேலையாள்கள் தேவை**

யாழ்நகரில் இயங்கிவரும் பிரபல உணவகம் ஒன்றிற்கு தங்கி நின்று பணிபுரியக்கூடிய வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.

- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- தேநீர், பழச்சாறு தயாரிப்பவர் (ஆண்/பெண்)
- சமையல் உதவியாளர் (ஆண்/பெண்)
- காசாளர் (பெண்கள் விரும்பத்தக்கது)
- யாழ் உணவுகள் சமைப்பதில் அனுபவம் வாய்ந்த சமையற்காரர் (ஆண்/பெண்)

பாதுகாப்பான வசதியான தங்குமிடம் மற்றும் சுத்தமான உணவு இலவசம்.

தொடர்புகொள்ளவும்: 0777 911 219

**விற்பனையாகிறது!**

தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கு

முதலாம் தவணை மாதிரி வினாத்தாள்கள்

தமிழ் , கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்கள் 15 விடைகளுடன்.

**யாழ் எக்ஸ்பிரஸ்**

பாடதிட்டத்திற்கு அமைவாக நாடாளாவியரீதியல் 15 முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில் வெளிவந்துள்ளது.

தொடர்புகளுக்கு : 077 6258778

## எதிர்பாராத போராட்டத்தை வெளிப்படுத்தியது அரபு இருப்பினும் இலக்கை எட்டிப்பிடித்தது பாகிஸ்தான்



ஆசியக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற பாகிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சிய அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 7 இலக்குகளால் வெற்றிபெற்றது பாகிஸ்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஐக்கிய அரபு இராச்சியம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல் பந்துப்பரிமாற்றத்தில் ஒரேயொரு ஓட்டத்தை மட்டுமே விட்டுக்கொடுத்தார் ஆமிர். ஆரம்ப வீரர்களான முஸ்தபா, கலீம் இருவரும் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்க ஐந்து ஓட்டங்களில் ஆரம்ப வீரர்கள் இருவரையும் இழந்தது அரபு இராச்சியம். வேகத்தில் மிரட்டி எடுத்தார் ஆமிர். அவர் வீசிய முதல் இரு பந்துப்பரிமாற்றங்களில் ஒரேயொரு ஓட்டம் மாத்திரமே பெறப்பட்டிருந்தது. சாக்செட் 5 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். பதற்றத்தை அடியோடு இல்லாமல் செய்தார் அன்வர். அடுத்தடுத்து சிக்சர்கள், பவுண்டரிகள் என நொறுக்கித்தள்ளினார். நூறு ஓட்டங்களை தாண்டிவிடும் நிலைக்கு எழுச்சி கண்டது ஐக்கிய அரபு இராச்சியம். உஸ்மானும் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கினார். 4 ஓட்டங்களால் அரைச்சதத்தைத்தவறவிட்டார் அன்வர். அன்வரின் ஆட்டமிழப்பை நிவர்த்தி செய்தார் அணித்தலைவரான ஜாவீட் 18 பந்துகளில் 27 ஓட்டங்களைக் குவித்தார் ஜாவீட். முடிவில் 6 இலக்குகளை இழந்து 129 ஓட்டங்களைக் குவித்தது ஐக்கிய அரபு இராச்சியம்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக ஆமீர், இர்பான் இருவரும் தலா இரு இலக்குகளையும், சமி, அப்ரிடி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். 4 பந்துப்பரிமாற்றங்களை வீசிய ஆமிர் வெறும் ஆறு ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்திருந்தார்.

பதிலுக்குக்களமிறங்கியது பாகிஸ்தான். ஆரம்ப வீரர்களாக கபீஸ், சர்ஜீல் கான். யாவீட் வீசிய இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தில் 4 ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார் சர்ஜீல். அதே பந்துப்பரிமாற்றத்தில் டக்கில் வெளியேறினார் மன்சூர். கபீஸ் 11 ஓட்டங்களுடன் வெளியேற,தற்பொழுது பாகிஸ் தான் 17–3. இணைந்தனர் உமர் அக்மலும்,மலிக்கும். இலக்குச் சரிவு இல்லாமல் செய்யப்பட்டது. ஐக்கிய அரபு இராச்சியத்தின் களத்தடுப்பு கச்சிதமாக அமைந்ததால் பவுண்டரிகளுக்கும் சிரமம் இருக்கவே செய்தது. மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் நூறு ஓட்டங்களை எட்டியது பாகிஸ்தான். ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க இணைப்பாட்டமாகவும் நூறு ஓட்டங்கள் குவிக்கப்பட்டது. முடிவில் 8 பந்துகள் மீதமிருக்க இலக்கை எட்டியது பாகிஸ்தான். மலிக் 63 ஓட்டங்களுடனும், உமர் அக்மல் 50 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

பந்துவீச்சில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் சார்பாக ஜாவீட் மூன்று இலக்குகளையும் வீழ்த்தினார். மலிக் ஆட்டநாயகனானார். (ம)

**வடிவமைப்பாளர்கள் தேவை**

வட மாகாணத்தில் இயங்கும் முன்னணி நிறுவனத்துக்கு வேகமும், படைப்பாற்றலும் உடைய கணினி வடிவமைப்பாளர்கள் பகல், இரவு முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ வேலைசெய்யக் கூடிய இருபாலாரும் உடன் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழாங்கப்படும்.

- Adobe Photoshop
- Adobe InDesign
- Adobe PageMaker
- CorelDRAW

தெரிந்தவர்கள், பக்க வடிவமைப்பாளர்கள் தங்கள் சுயவிவரங்களுடன் **இன்று (01.03.2016) செவ்வாய்க்கிழமை, நாளை (02.03.2016) புதன்கிழமை** காரியாலய நேரத்தில் கீழ் காணும் முகவரிக்கு நேரில் வரவும்.

**ES Printers** 021 492 7471 / 021 492 7472
357, Kasthuriyar Road, Jaffna. esprintersjaffna@gmail.com




## ரோகித் சர்மா, மலிங்க பங்கேற்பதில் சிக்கல்

ஆசியக்கிண்ணத் தொடரில் இன்று நடைபெறவுள்ள இலங்கை – இந்தியா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இந்திய அணியில் ரோகித் சர்மாவும், இலங்கை அணியில் மலிங்கவும் பங்கேற்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணியின் ஆரம்ப வீரரான ரோகித் சர்மாவுக்கு, ஆமீர் வீசிய முதல் பந்தே இடது காலின் பாதத்தில் தாக்கியது. இதனால் அவரது காலில் வலி ஏற்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. இந்திய அணியைப் பொறுத்தமட்டில் இன்றைய ஆட்டம் அவ்வளவு முக்கியமான ஆட்டமாக இல்லாத காரணத்தினால் ரோகித்துக்கு ஓய்வு கொடுக்கப்படலாம் என்று கணிக்கப்படுகிறது.

மலிங்கவினைப் பொறுத்த மட்டில், அவர் காயத்தால் தொடர்ந்து அவதிப்பட்டு வருவதாக மத்தியூஸ் தெரிவித்துள்ளார். இதனால் இன்றைய ஆட்டத்தில்இருந்து மலிங்க விலக நேரிடலாம். (ம)

**வெளிவந்துவிட்டது**
A/L PASTPAPERS
2015 ஆம் ஆண்டு உட்பட 15 வருடங்கள் அடங்கியது.
பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6693, 021 222 1637

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org